எ. ஸ்தெபானவா

# கார்ல் மார்க்ஸ்

## வாழ்க்கைச் சுருக்கம்

C 021

Rs 8P50

எ. ஸ்தெபானவா

# கார்ல் மார்க்ஸ்

## வாழ்க்கைச் சுருக்கம்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன் எம். ஏ.

**Е. Степанова**

КАРЛ МАРКС. БИОГРАФИЧЕСКИЙ ОЧЕРК

*на тамильском языке*

**E. Stepanova**

KARL MARX. SHORT BIOGRAPHY

*in Tamil*

முதலாவது பதிப்பு 1985

இரண்டாவது பதிப்பு 1987

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1985

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$С \frac{0103010000-352}{014(01)-87}$ без объявления

## பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . . 5

மார்க்சின் இளமைப்பருவம். பொருள் முதல்வாதத்தையும் கம்யூனிசத்தையும் அடைந்த பாதை . . . . . . . 8

மார்க்சியக் கோட்பாடுகளை விரித்துரைத்தல். தொழிலாளர்களது கட்சியை நிறுவுவதற்கான போராட்டத்தின் தொடக்கம் . . . . . . . . . . 26

புரட்சிகரமான போராட்டங்கள் (1848—1849) . . . . . . . . . 49

புரட்சியின் படிப்பினைகளைத் தொகுத்துரைத்தல் . . . . . . . . . . 71

பிற்போக்குவாதம் ஆட்சி புரிந்த வருடங்கள் . . . . . . . . . . 82

முதலாளித்துவ-ஜனநாயக மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் புதிய எழுச்சி . 98

''மூலதனம்'' . . . . . . . . . . 106

முதலாவது அகிலம் மற்றும் பாரிஸ் கம்யூன் . . . . . . . . . . . . 118

மார்க்சின் வாழ்க்கையில் கடைசிப் பத்து வருடங்கள் . . . . . . . . . 145

என்றும் வாழ்கின்ற, வெல்லற்கரிய தத்துவம் . . . . . . . . . . . . 171

# முன்னுரை

எல்லாக் காலங்களுக்கும் நிலைத்திருக்கின்ற பெரும் புகழ்மிக்க, அருஞ்செயல்கள் புரிந்த மாபெரும் மனிதர்களுக்கு மத்தியில் பாட்டாளி வர்க்கத்தின் மிகச் சிறப்பான தத்துவாசிரியரும் தலைவருமான கார்ல் மார்க்ஸ் தனிச்சிறப்பான இடத்தை வகிக்கிறார்.

இயற்கை, சமூகம் மற்றும் மனித சிந்தனையின் வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற பொது விதிகளைப் பற்றி இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்ற போதனையைப் படைத்து அதன் மூலம் உலகத்தை இன்னும் சிறப்பான முறையில் அறிந்து கொள்வதுடன் மட்டுமின்றி அதைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கும் வழி காட்டியதனால் மார்க்ஸ் வரலாற்றுக்கு மிகப் பெரும் சேவை செய்திருக்கிறார்.

முதலாளித்துவத்தின் வீழ்ச்சியும் கம்யூனிஸ்டு சமூகத்தின் வெற்றியும் தவிர்க்க முடியாதவை என்று விஞ்ஞான ரீதியாக நிரூபித்துக் காட்டியதன் மூலம், மனித குலத்துக்கு இன்னும் சிறப்புமிக்க எதிர்காலத்தைப் பற்றி அது வரையிலும் தெளி

வில்லாத கனவாக மட்டுமே இருந்த சோஷலிசத்தை மார்க்ஸ் ஒரு விஞ்ஞானமாக மாற்றியமைத்தார்.

மார்க்ஸ் தன்னுடைய நண்பரான பிரெடெரிக் எங்கெல்சுடன் இணைந்து பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தை விஞ்ஞான ரீதியாக நிறுவினர்; அதுவே மிகவும் வளர்ச்சியடைந்த, முற்றிலும் முரணில்லாத புரட்சிகரமான வர்க்கம், அது தன்னை விடுவித்துக் கொள்வதன் மூலம் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின் ஒவ்வொரு வடிவத்திலிருந்தும் மனித குலம் அனைத்தையும் விடுவிக்கும் என்பதை எடுத்துக் காட்டினர்.

பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் மூலமாக சோஷலிஸ்டு சமூகத்துக்கு முன்னேறும் பாதையை மார்க்ஸ் சுட்டிக் காட்டினர். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றிய போதனை மார்க்சியத்தின் அடிப்படையான பகுதியாகும்.

பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சொந்தப் பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைத்துக் கொண்டாலொழிய, முதலாளி வர்க்கத்துக்குச் சவக் குழி தோண்டுபவன் மற்றும் புதிய சமூகத்தை நிர்மாணிப்பவன் என்ற வரலாற்றுக் கடமையை அது நிறைவேற்ற முடியாது என்பதை மார்க்சிய மூலவர்கள் போதித்தார்கள்.

மார்க்சின் போதனையே தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தம், அதன் அடிப்படை நலன்களின் தத்துவ ரீதியான வெளியீடு; அது உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற விஞ்ஞானம்.

மார்க்ஸ் வாழ்ந்த, பாடுபட்டுழைத்த, போராடிய காலத்தையும் நம்மையும் பிரிக்கின்ற வருடங்களைப் பின்னோக்கிப் பார்த்தால், புரட்சிகரமான வர்க்கப் போராட்ட நிகழ்வுப் போக்கில் பெருந்திரளான உழைக்கும் மக்கள் மீது அவருடைய போதனையின் தாக்கம் எப்படி வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை நாம் தெளிவாகக் காண முடியும்.

உழைக்கின்ற, ஒடுக்கப்பட்டிருக்கின்ற பெருந்திரளான மக்கள் அனைவருக்கும் தலைமை தாங்குகின்ற மிக வளர்ச்சி அடைந்த வர்க்கமான தொழிலாளி வர்க்கம் உலக வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் மென்மேலும் அதிகரிக்கின்ற தாக்கத்தைக் கொண்டிருக்கிறது; மார்க்சினால் கண்டுபிடிக்கப்பட்டு லெனினால் மேலும் விரித்துரைக்கப்பட்ட சமூக வளர்ச்சி பற்றிய புறநிலை விதிகளை வழிகாட்டியாகக் கொண்டு உலகத்தை அதிகத் தீவிரமாக, உணர்வு பூர்வமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

லெனினால் வளர்க்கப்பட்டு, உலக கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளால் படைப்பாற்றலுடன் கையாளப்பட்டு, தொடர்ச்சியாகச் செழுமைப்படுத்தப்பட்டு, சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிஸ்டு நாடுகளிலும் சோஷலிச நிர்மாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற மார்க்சின் போதனை அதன் மிகச் சிறப்பான தகுதியை மென்மேலும் நம்பிக்கையூட்டுகின்ற முறையில் நிரூபித்து வருகிறது.

# மார்க்சின் இளமைப்பருவம். பொருள்முதல்வாதத்தையும் கம்யூனிசத்தையும் அடைந்த பாதை

விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவரான கார்ல் மார்க்ஸ் 1818 மே 5ல் பிரஷ்யாவின் ரைன் மாநிலத்தில் திரிர் என்ற நகரத்தில் ஒரு வழக்குரைஞரின் குடும்பத்தில் பிறந்தார். மார்க்ஸ் பிறந்த பூமியான ரைன் மாநிலம் பிரஷ்யாவிலேயே தொழில் துறையில் மிகவும் வளர்ச்சி அடைந்த பிரதேசங்களில் ஒன்ருகும். பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதியில் வெடித்த பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின் நேரடியான தாக்கத்தில் இங்கே நிலப்பிரபுத்துவக் கட்டணங்களும் சேவைகளும் ஒழிக்கப்பட்டிருந்தன. அங்கே நிலக்கரி மற்றும் இரும்புத் தாதுக்கள் ஏராளமாகக் கிடைத்தபடியால் தொழில் துறை வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமைகள் ஏற்பட்டிருந்தன. ரைன் மாநிலத்தில் பெரிய அளவிலான முதலாளித்துவத் தொழில் துறையுடன் சேர்ந்து பாட்டாளி வர்க்கம் என்ற புதிய வர்க்கமும் தோன்றியது.

மார்க்ஸ் 1830 முதல் 1835 வரை திரிர் உயர்நிலைப் பள்ளியில் பயின்ருர். என்ன வேலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரு

இளைஞனுடைய சிந்தனைகள் என்ற தலைப்பில் பள்ளி இறுதி வகுப்பில் அவர் எழுதிய தேர்வுக் கட்டுரை இந்தப் பதினேழு வயது இளைஞர் மனித குலத்துக்குத் தன்னலமற்ற சேவை செய்வதைத் தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக முன்பே முடிவு செய்திருந்தார் என்று எடுத்துக் காட்டு கிறது. உயர்நிலைப் பள்ளிக்குப் பிறகு மார்க்ஸ் முதலில் போன் நகரத்திலும் பிறகு பெர்லின் பல்கலைக்கழகத்திலும் சட்டவியலைப் படித்தார். அவர் சட்டவியலைத் தேர்ந்தெடுத்திருந்த போதி லும் தத்துவஞானத்தையும் வரலாற்றையும் மிகவும் ஆர்வத்தோடு படித்தார்.

ஜெர்மனியிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் முதன்மையான வரலாற்றுச் சம்பவங்கள் முதிர்ச்சி அடைந்து கொண்டிருந்த காலத்தில் மார்க்சின் விஞ்ஞான, அரசியல் கருத்துக்கள் உருப்பெற்றன. முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்த பொழுது பல ஐரோப்பிய நாடுகளில் நிலப்பிரபுத்துவ உறவு களின் எச்சங்கள் மென்மேலும் சகித்துக் கொள்ள இயலாதவையாக மாறின. இயந்திரங்கள் மற்றும் பெரிய அளவிலான முதலாளித்துவத் தொழில் துறையின் வளர்ச்சி விவசாயிகள் மற்றும் கைவினை ஞர்களின் அழிவுக்கும் அனைத்து உற்பத்திச் சாதனங் களும் பறிக்கப்பட்ட ஒரு புதிய வர்க்கத்தின், பாட்டாளி வர்க்கத்தின் தோற்றத்துக்கும் இட்டுச் சென்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி வர்க்கப் போராட்டத்தைக் கூர்மைப் படுத்தியது; முதலாளித்துவ-ஜனநாயக மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியை

ஏற்படுத்தியது; முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு எதிராக இன்னும் ஒரு ஆரம்ப, இயல்புணர்ச்சி யான எதிர்ப்பை வெளிப்படுத்திய பாட்டாளி வர்க்கத்தை ஒரு வரலாற்றுச் சக்தி என்ற முறை யில் அரங்கேற்றியது. நிலப்பிரபுத்துவத்தின் எச் சங்கள், புதிதாகத் தோன்றிய முதலாளித்துவம் என்ற இரட்டை ஒடுக்குமுறையின் கீழ் பெருந் திரளான மக்கள் துன்பமடைந்த பின்தங்கிய, பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஒற்றுமை இல்லாத, அரை நிலப்பிரபுத்துவ ஜெர் மனியில் ஒரு முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி முதிர்ச்சி அடைந்து கொண்டிருந்தது. பத்தொன்ப தாம் நூற்றுண்டில் முப்பதுக்களின் கடைசியிலும் நாற்பதுக்களின் தொடக்கத்திலும் ஜெர்மனியில் பெருந்திரளான மக்களிடையில் அதிருப்திகள், சமூக வாழ்க்கையில் ஒரு வேகம், முதலாளி வர்க்கம் மற்றும் அறிவுப் பகுதியினரிடையில் பல் வேறு எதிர்ப்புப் போக்குகள் மற்றும் அணிச் சேர்க்கைகளின் தோற்றம் ஆகியன குறிப்பாகக் காணப்பட்டன.

ஹெகலின் தத்துவஞானத்திலிருந்து தீவிரமான முடிவுகளைப் பெறுவதற்கு முயற்சி செய்த இளம் ஹெகல்வாதிகளுடன் மார்க்ஸ் தன்னுடைய மாண வப்பருவத்தில் பழகத் தொடங்கினர்; அவர் இக்காலத்தில் ஹெகலின் நூல்களைப் படித்தார். டெமாக்ரீடசின் இயற்கைத் தத்துவஞானத்துக்கும் எபிகூரசின் இயற்கைத் தத்துவஞானத்துக்கும் இடையிலான வேறுபாடு என்ற தலைப்பில் மார்க்ஸ் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை, அவர் கருத்து முதல்வாத நோக்கைப் பின்பற்றிய போதிலும்

ஹெகலின் முரண்பாடான தத்துவஞானத்திலிருந்து நாத்திக மற்றும் புரட்சிகரமான முடிவுகளைப் பெறத் தொடங்கி விட்டதை எடுத்துக் காட்டுகிறது. உதாரணமாக, எபிகூரசின் பொருள் முதல்வாதத்தையும் நாத்திகத்தையும் ஹெகல் கூர்மையாகக் கண்டனம் செய்திருந்தார்; ஆனால் மார்க்ஸ் அதற்கு மாறாக அந்தப் பழங்காலத்திய கிரேக்கத் தத்துவஞானி மதம் மற்றும் மூட நம்பிக்கைகளை எதிர்த்து நடத்திய வீரமான போராட்டத்தைப் போற்றினார். மார்க்ஸ் தன்னுடைய ஆராய்ச்சிக் கட்டுரையை இயெனா பல்கலைக் கழகத்திடம் சமர்ப்பித்து 1841 ஏப்ரலில் தத்துவஞானத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்.

பல்கலைக்கழகக் கல்வி முடிந்த பிறகு விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதும் போன் நகரத்தில் ஒரு பேராசிரியப் பதவியைப் பெறுவதும் அவருடைய உத்தேசமாக இருந்தது. ஆனால் பல்கலைக் கழகங்களிலிருந்து முற்போக்கான பேராசிரியர்களை வெளியேற்றுகின்ற பிற்போக்கான கொள்கையை பிரஷ்ய அரசாங்கம் கடைப்பிடித்தது; பிரஷ்யப் பல்கலைக்கழகங்களில் முற்போக்கான விமர்சனச் சிந்தனைக்கு இனி இடமில்லை என்று மார்க்ஸ் எண்ணியதை இது வலுப்படுத்தியது.

முற்போக்கான கருத்துக்களைப் பரப்புவதற்கும் அரசியல் பிற்போக்குவாதத்துக்கும் விஞ்ஞான-மறுப்புப் போக்குக்கும் எதிராகப் போராடுவதற்கும் *Rheinische Zeitung* (''ரைன் பத்திரிகை'') மார்க்சுக்கு மிகவும் துணை புரிந்தது. அவர் 1842 ஏப்ரலில் அந்தப் பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தார்; அதே வருடத்தில் அக்டோபர் மாதத்தில்

அதன் ஆசிரியரானார். அவருடைய ஆசிரியப் பொறுப்பில் *Rheinische Zeitung*இன் புரட்சிகர-ஜனநாயகப் போக்கு மென்மேலும் ஆணித்தரமாக வெளிப்பட்டது. பிரஷ்யாவிலும் ஜெர்மனி முழுவதிலும் நிலவிய சமூக, அரசியல், ஆன்மிக ஒடுக்குமுறை ஆட்சிமுறையை எதிர்த்து அவர் துணிகரமான இயக்கத்தைத் தொடங்கினார். உண்மையான புரட்சிகர ஜனநாயகவாதியான மார்க்ஸ் பெருந்திரளான மக்களின் பொருளாதார நலன்களை ஆதரித்து 6வது ரைன் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற விவாதம் (3ம் கட்டுரை). மரம் திருடுவதைப் பற்றிய சட்டம் குறித்த விவாதம், மோஜெல் நிருபருக்கு ஆதரவாக மற்றும் இதர கட்டுரைகளை எழுதினார். பத்திரிகையில் கிடைத்த அனுபவம் ஜெர்மனியின் அரசியல் வாழ்க்கையைப் பற்றியும் உழைக்கும் மக்களின் நிலைமைகளைப் பற்றியும் மார்க்சுக்கு மேலும் சிறப்பான அறிவைக் கொடுத்தது. மக்களின் அத்தியாவசியமான தேவைகளைப் பற்றி பிரஷ்ய அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் ஈவிரக்கமில்லாமல் நடந்து கொள்வதைப் பற்றிய எண்ணற்ற விவரங்கள் அவருக்குக் கிடைத்தன; அவற்றின் விளைவாக இந்த அரசாங்கமும், அதன் சட்டங்களும் அதிகாரிகளும் மக்களின் நலன்களுக்கு மாறாக, ஆட்சி புரியும் சமூகப் பிரிவுகளான மேன் மக்கள், மதகுருக்களின் நலன்களையே பிரதிபலிக்கிறார்கள், அவர்களுக்காகவே பாடுபடுகிறார்கள் என்ற முடிவுக்கு மார்க்ஸ் வந்தார்.

*Rheinische Zeitung*இல் வேலை செய்ததன் விளைவாகவே பொருளாதாரத்தை ஆராய வேண்

டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. மரம் திருடுவதைப் பற்றிய சட்டம் மற்றும் மோஜெல் விவசாயிகளின் நிலைமையைப் பற்றித் தான் செய்த ஆராய்ச்சிகளே கலப்பற்ற அரசியலிலிருந்து பொருளாதார உறவுகளுக்கும் அதிலிருந்து சோஷலிசத்துக்கும் முன்னேறும்படி தன்னைத் தூண்டின என்று மார்க்ஸ் பிற்காலத்தில் அடிக்கடி கூறுவதுண்டு என்பார் எங்கெல்ஸ்.

ஜெர்மனியிலிருந்த பெருந்திரளான ஏழை மக்களின் பயங்கரமான நிலைமை மட்டுமல்லாமல் அதிக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளான பிரிட்டனிலும் பிரான்சிலும் நடைபெற்ற சம்பவங்களும் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ச்சி செய்யும்படி மார்க்சைத் தூண்டின. 1831 மற்றும் 1834ல் நடைபெற்ற லியோன் தொழிலாளர்களின் எழுச்சி, பிரிட்டனில் 1830க்களின் கடைசியில் ஏற்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தின் எழுச்சி—அது அரசியல் தன்மையைப் பெற்று 1842ல் அதன் சிகரத்தை (சார்ட்டிசம்) எட்டியது—மற்றும் தொழிலாளர்களின் ஏராளமான பல நடவடிக்கைகள் மாபெரும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன. அக்காலத்திலிருந்து ஐரோப்பாவில் அதிகமான வளர்ச்சியடைந்த நாடுகளில் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் வர்க்கப் போராட்டம் முக்கியமான பிரச்சினையாயிற்று.

பாட்டாளி வர்க்கம் என்ற புதிய வர்க்கம் போராட்ட அரங்கத்திற்குள் நுழைந்தது புதிய சமூக-பொருளாதாரப் பிரச்சினைகள் என்று அவர்

கருதியவற்றை ஆழமாக ஆராயும்படி மார்க்சைத் தூண்டியது, அப்பொழுது பிரிட்டனிலும் பிரான் சிலும் வெளியாகிக் கொண்டிருந்த சோஷலிஸ்டு நூல்களில் அவர் அக்கறையைத் தூண்டியது.

*Rheinische Zeitung* பத்திரிகைப் பணி, ஜெர்மனியின் பெருந்திரளான மக்களின் வாழ்க்கை மற்றும் போராட்டத்துடன் அவருக்கேற்பட்ட நேரடியான தொடர்பு மற்றும் இதர நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்தோடு அவருக்கு ஏற்பட்ட உறவு இளம் மார்க்சிடம் மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தின. ''மார்க்ஸ் கருத்துமுதல் வாதத்திலிருந்து பொருள்முதல்வாதத்துக்கும் புரட் சிகரமான ஜனநாயகத்திலிருந்து கம்யூனிசத்துக்கும் மாறுகின்ற அறிகுறிகளை நாம் இங்கே பார்க் கின்றோம்.''*

பத்திரிகையின் போக்கு மற்றும் அதன் செல் ாக்கு வேகமாக வளர்ச்சி அடைவதைப் பற்றி ஞ்சிய பிரஷ்ய அரசாங்கம் கடுமையான தணிக் கையை ஏற்படுத்தியது; கடைசியில் 1843 ஏப்ரல் 1ந் தேதியிலிருந்து *Rheinische Zeitung* பத்திரி கையை வெளியிடுவதை நிறுத்த வேண்டுமென்று 1843 ஜனவரி 19ல் ஆணையிட்டது. பத்திரிகையின் பங்குதாரர்கள் அதன் கண்டனக் குரலை மட்டுப் படுத்த உத்தேசித்த பொழுது மார்க்ஸ் அதை ஒத்துக் கொள்ளவில்லை; அவர் ஆசிரியப் பொறுப் பிலிருந்து மார்ச் 17ல் விலகிக் கொண்டார். வெளி நாட்டிலிருந்து ஒரு புரட்சிகரமான சஞ் சிகையை வெளியிடுவது, அதை எல்லையைத்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 21, Progress Publishers, Moscow, p. 80.

தாண்டி ஜெர்மனிக்குள் அனுப்பி வைப்பது என்று ஆலோசித்து அவர் வெளி நாட்டுக்குப் போக முடிவு செய்தார். ''இருக்கின்ற எல்லாவற்றையும் கடுமையாக விமர்சிப்பது'' அந்தச் சஞ்சிகையின் நோக்கம் என்று அவர் திட்டமிட்டார்.

மார்க்ஸ் ஜெர்மனியை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு ஜென்னி -போன் வெஸ்ட்பாலன் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். மார்க்சும் ஜென்னியும் குழந்தைப்பருவத்திலிருந்து பழகியவர்கள். அவர்களிருவரும் திருமணம் செய்து கொள்வதென்று தங்கள் மாணவப்பருவத்திலேயே முடிவு செய்திருந்தார்கள். அவர் 1843ம் வருடத்தின் கோடை காலம் மற்றும் இலையுதிர் காலத்தின் போது கிரேய்ட்ஸ்நாஹில் தங்கியிருந்தார்; அங்கே ஹெகலின் சட்டம் பற்றிய தத்துவஞானத்தைப் பற்றித் தன்னுடைய விமர்சன ஆராய்ச்சியைச் செய்தார். அவர் எழுதிய சட்டம் பற்றிய ஹெகலியத் தத்துவஞான விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை பூர்த்தியடையாத கையெழுத்துப் பிரதியின் வடிவத்தில்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது; புதிய, பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்துக்கு மார்க்ஸ் மாறுவதில் அது ஒரு திருப்பு முனையாகும். ''இருக்கின்ற எல்லாவற்றையும் கடுமையாக விமர்சிப்பது'' என்ற குறிக்கோளை அறிவித்த மார்க்ஸ் *Rheinische Zeitung* பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் எழுந்த, அரசுக்கும் சமுதாயத்தின் பொருளாயத நிலைமைகளுக்கும் இடையிலுள்ள உறவுகள், இடைச்சார்புகள் என்ற பிரச்சினையை எடுத்துக் கொள்வதன் மூலம் இந்த விமர்சனத்தைத் தொடங்கினார். அரசு மற்றும்

சட்டத்தைப் பற்றி ஹெகலின் பிற்போக்கான, கருத்துமுதல்வாதக் கருத்துக்களை முதலில் விமர்சன ரீதியாக ஆராயாமல் இந்தப் பிரச்சினைக்கு விஞ்ஞான ரீதியாகப் பதிலளிக்க முடியாது. இதைச் செய்த முதல் நபர் மார்க்ஸ். லுட்விக் ஃபாயர் பாஹின் புத்தகங்கள் ஹெகலின் கருத்துமுதல் வாதத் தத்துவஞானத்தை மறுத்து எழுதப்பட்டவை; அவை மார்க்சைப் பொருள்முதல்வாதத் துக்குக் கொண்டு வருவதற்கு உதவின. ஆனால் ஃபாயர்பாஹ் இயற்கை நிகழ்வுகளை விளக்குவதில் மட்டுமே பொருள்முதல்வாதியாக இருந்தார்; ஆனால் வரலாறு, சமூக உறவுகள் மற்றும் அரசியலை விளக்கும் பொழுது அவர் கருத்துமுதல் வாதியாகவே இருந்தார். ஹெகலை விமர்சித்த முதல் பொருள்முதல்வாதத் தத்துவஞானி என்று ஃபாயர்பாஹை மார்க்ஸ் பாராட்டிய போதிலும், அதே சமயத்தில் அவருடைய பொருள்முதல்வாதத் தின் வரையறைகளையும் முரணியல் தன்மைகளையும் சுட்டிக் காட்டினர். ஃபாயர்பாஹிடமிருந்து வித்தியாசமான முறையில் இயற்கையை மட்டுமல்லாமல் சமூக வாழ்க்கையையும் விளக்குகின்ற ஒருங்கிணைந்த, முரண்பாடில்லாத பொருள்முதல் வாத உலகக் கண்ணேட்டத்தை வளர்ப்பது மார்க்சின் குறிக்கோளாயிற்று.

சட்டம் பற்றிய ஹெகலியத் தத்துவஞானத்தைப் பற்றி மார்க்சனுடைய ஆராய்ச்சியின் முடிவுகள் பின்னர் அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை என்று அவர் எழுதிய புத்தகத்தின முன்னுரையில் எடுத்துரைக் கப்பட்டன.

''சட்ட உறவுகளையோ அல்லது அரசியல் வடிவங்களையோ, தனித்தனியாகவோ அல்லது மனித அறிவின் பொதுவான வளர்ச்சிப் போக்கு என்று சொல்லப்படுகிற அடிப்படையைக் கொண்டோ புரிந்து கொள்ள முடியாது; அதற்கு மாறாக, அவை வாழ்க்கையின் பொருளாயத நிலைமைகளில் பிறக்கின்றன; இவற்றின் முழுத் தொகுதியையே ஹெகல் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கில, பிரெஞ்சுத் தத்துவஞானிகளின் உதாரணத்தைப் பின்பற்றி 'சிவில் சமூகம்' (civil society) என்ற வார்த்தைகளில் அடைக்கிறார்; எனினும் இந்த சிவில் சமூகத்தின் உள்ளமைப்பை அரசியல் பொருளாதாரத்தில் தேட வேண்டும்—என்னுடைய ஆராய்ச்சியின் பலனாக மேற்கூறிய முடிவுகளுக்கு வந்தேன்.''*

மார்க்ஸ் பொருள்முதல்வாதத்தைச் சமூக நிகழ்வுகளுக்கு விஸ்தரித்தது மட்டுமல்லாமல் அவருக்கு முன்னர் யாந்திரிகமானதாகவும் இயக்க மறுப்பியல் தன்மையைக் கொண்டதாகவும் இருந்த பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்தை அவர் மேலும் வளர்த்துச் சென்றார்.

ஃபாயர்பாஹ் ஹெகலின் இயக்கவியலை முற்றிலும் நிராகரித்தார். ஆனால் மார்க்ஸ் அதற்கு மாறாக அதை விமர்சன முறையில் திருத்தியமைக்கும் பணியை மேற்கொண்டார். ஹெகலின் இயக்கவியல் முறை வளர்ச்சி என்ற கருத்தை, ''அறிவு

---

* கா. மார்க்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 9.

பூர்வமான மூலப் பகுதியைக்'' கொண்டிருந்தது. ஹெகல் சம்பவங்களையும் நிகழ்வுகளையும் அவற்றின் இடை இணைப்புகள் மற்றும் சார்புநிலை அனைத்துடனும் தோற்றம், மாற்றம், அழிவு என்று இடைவிடாமல் நடைபெறுகின்ற நிகழ்வுப் போக்காகக் கண்டார்; எதிர்நிலைகளின் போராட்டம் இந்த நிகழ்வுப் போக்குக்கு மூலவேராக இருக்கிறது என்று காட்டுவதற்கு அவர் முயற்சி செய்தார். இயக்க மறுப்பியல் முறை உலகத்தை ஒன்றோடொன்று சேராதிருக்கின்ற பொருள்கள் மற்றும் நிகழ்வுகளின் தற்செயலான குவியலாக, நிலையான, மாற்றமில்லாத ஏதோ ஒன்றாகக் காட்டியது; அதனுடன் ஒப்பிடும் பொழுது இயக்கவியல் முறை முற்போக்கானதாகும். ஆனால் ஹெகலின் தத்துவஞானத்தில் ஒரு முக்கியமான குறை இருந்தது—அது கருத்துமுதல்வாதமாகும். இயற்கையிலும் சமூகத்திலும் வளர்ச்சி என்பது ஆன்மாவின், ''முழு முதல் கருத்தின்'' வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று ஹெகல் கருதினர். ஹெகல் எல்லாவற்றையும் தலைகீழாக்கினர்; உண்மையான வளர்ச்சிக்குப் பதிலாகச் ''சிந்தனையின் சுயவளர்ச்சியை'', பொருள்களின் இயக்கவியலுக்குப் பதிலாகக் கருத்துக்களின் இயக்கவியலை ஏற்படுத்தினர்.

விஞ்ஞானம், குறிப்பாக இயற்கை விஞ்ஞானம் திரட்டியிருந்த விவரங்களை ஆதாரமாகக் கொண்டு பொருள்முதல்வாதத்தையும் இயக்கவியலையும் ஒற்றை, ஒருங்கிணைந்த உலகக் கண்ணோட்டமாக இணைப்பதற்கு ஹெகலிய இயக்கவியலைத் திருத்தியமைப்பதில் மார்க்ஸ் ஈடுபட்டார்.

சட்டம் பற்றிய ஹெகலியத் தத்துவஞான விமர்சனத்துக்கு ஒரு கருத்துரையின் கையெழுத்துப் பிரதியும் இந்தக் காலகட்டத்தில் அவர் எழுதிய கடிதங்களும் மார்க்ஸ் எப்படி ''...மார்க்சாக, அதாவது சோஷலிசம் என்ற விஞ்ஞானத்தின் மூலவராக, பொருள்முதல்வாதத்தின் இதற்கு முந்திய வடிவங்கள் அனைத்தையும் காட்டிலும் அளவிட முடியாத வளமான உள்ளடக்கத்தையும் ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகமான செறிவையும் கொண்ட **நவீனப் பொருள்முதல்வாதத்தின்** மூலவராக வளர்ந்து கொண்டிருந்தார்...''* என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

1843 அக்டோபர் மாதக் கடைசியில் மார்க்ஸ் பாரிசுக்குச் சென்றார். பிரெஞ்சுத் தலைநகர வாழ்க்கை அவருக்குப் புதிய அறிவையும் அரசியல் அனுபவத்தையும் கொடுத்து வளப்படுத்தியது. அங்கே தொழிலாளர்கள் வசித்த புறநகர்ப் பகுதிகளுக்கு அவர் அடிக்கடி சென்றார். ஜெர்மன் தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களின் இரகசியக் கழகமான நேர்மையாளர்களின் சங்கத்தின் தலைவர்களையும் பிரான்சிலிருந்த இரகசியச் சங்கங்களில் பெரும்பான்மையானவற்றின் தலைவர்களையும் சந்தித்துப் பழகினர்; ஆனால் அவர் இச் சங்கங்களில் ஒன்றில் கூடச் சேரவில்லை. இங்கே அவர் பிரெஞ்சு கற்பனவாத சோஷலிஸ்டுகளை—எத்தியேன் காபே, பியேர் லெரூ, லுயீ பிளான் மற்றும் பியேர் புரூதோனை—சந்தித்தார். அவர் ஜெர்மன் கவிஞரான ஹென்ரிச் ஹேய்னெயுடன்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 14, p. 336.

நண்பரானர்; ருஷ்ய அரசியல் பிரமுகர்களான மி. அ. பகூனின், வ. பெ. போத்கின் மற்றும் இதரர்களையும் அவர் தெரிந்து கொண்டார்.

முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தைப் பற்றி ஒரு மாபெரும் விமர்சன நூலை எழுத வேண்டும் என்ற எண்ணம் மார்க்சுக்கு ஏற்பட்டது; எனவே அவர் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் மூலச்சிறப்புடைய பிரதிநிதிகளான ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ மற்றும் இதர பொருளியலாளர்களுடைய புத்தகங்களைப் படித்தார். அவருடைய ஆராய்ச்சிகளின் விளைவாகப் பொருளாதார-தத்துவஞானக் கையேடுகள் (*1844*) எழுதப்பட்டன. மார்க்ஸ் முதலாளித்துவப் பொருளியலாளர்களை விமர்சிக்கும் பொழுது முதலாளித்துவச் சுரண்டல் முறையின் குறியடையாளமான சில கூறுகளை ஏற்கெனவே கண்டு பிடித்தார். அவர் புராதன, கொச்சைத் தனமான முறையில் சமனுக்கும் கம்யூனிசத்தை விமர்சித்தார்; ஹெகலின் இயக்கவியலையும் பொதுவாக ஹெகலின் தத்துவஞானத்தையும் விமர்சனப் பகுப்பாய்வு செய்தார். இந்தக் கையேடுகளில் ஃபாயர்பாஹின் தாக்கம் இன்னும் இருப்பதைக் காண முடியும்.

அவர் மாபெரும் கற்பனவாத சோஷலிஸ்டுகளான அன்ரீ சான்-சிமோன், ஷார்ல் ஃபூரியே, ராபெர்ட் ஓவன் மற்றும் இதரர்கள் எழுதிய புத்தகங்களைப் படித்தார். கற்பனவாத சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ சமூகத்தைக் கூர்மையாக விமர்சித்த போதிலும் அதன் வளர்ச்சியின் விதிகளைக் கண்டுபிடிக்கத் தவறினார்கள்; புதிய

சமூகத்தின் படைப்பாளியாகக் கூடிய சமூகச் சக்தியையும் அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியைப் பற்றி, குறிப்பாக கன்வென்ஷன் வரலாற்றைப் பற்றி ஆராய்வதில் மார்க்ஸ் அதிகமான காலத்தைச் செலவிட்டார்.

பிரெஞ்சுத் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் போராட்டத்தைப் பற்றி அவருக்கு நேரடியாகக் கிடைத்த அனுபவம், முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் மற்றும் கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் புத்தகங்களைப் பற்றி அவருடைய விமர்சன ஆராய்ச்சிகள் கருத்துமுதல்வாதத்திலிருந்து பொருள்முதல்வாதத்துக்கு, புரட்சிகர ஜனநாயகவாதத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மார்க்ஸ் மாறுவதை நிர்ணயித்தன.

மார்க்சின் வாழ்க்கையில் இந்தத் தீர்மானமான திருப்புமுனை *Deutsch-Französische Jahrbücher* (''ஜெர்மன்-பிரெஞ்சு ஆண்டுமலர்'') என்ற சஞ்சிகையில் அவர் எழுதிய கட்டுரைகளில் தெளிவாகப் பிரதிபலிக்கிறது; இச்சஞ்சிகை 1844 பிப்ரவரியில் பாரிசில் மார்க்ஸ் மற்றும் அர்னோல்டு ரூகேயின் ஆசிரியப் பொறுப்பில் வெளியிடப்பட்டது. **யூதப் பிரச்சினையைப் பற்றி** என்ற தலைப்பில் மார்க்ஸ் எழுதிய கட்டுரையில் தேசியப் பிரச்சினையைப் பற்றிக் கருத்துமுதல்வாத ரீதியான கருத்துக்களை வெளியிட்ட இடதுசாரி ஹெகல்வாதியான புரூனோ பௌவரை விமர்சிக்கின்ற பொழுது முதலாளி வர்க்கப் புரட்சிக்கும் சோஷலிசப் புரட்சிக்கும் இடையிலுள்ள தீவிரமான வேறுபாட்டைப் பற்றி

முதல் தடவையாக—இன்னும் சூக்குமமாகவே—வரையறுப்புக் கொடுக்கிறார். சட்டம் பற்றிய ஹெகலியத் தத்துவஞான விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை. முகவுரை என்ற கட்டுரையின் ஆழமும் சிந்தனை வளமும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ஜெர்மனியில் மதத்தைப் பற்றிய விமர்சனத்தின் ஆக்கபூர்வமான முக்கியத்துவத்தை அங்கீகரித்து விட்டு மதத்துக்கு எதிரான போராட்டத்தை மதத்தைச் சிருஷ்டிக்கின்ற புறவய நிலைமைகளுக்கு எதிரான போராட்டமாக மாற்றுவது, ''சொர்க்கத்தைப்'' பற்றிய விமர்சனத்தைப் ''பூமியைப்'' பற்றிய விமர்சனமாக மாற்றுவது, மதத்தைப் பற்றிய விமர்சனத்தைச் சட்டத்தைப் பற்றிய விமர்சனமாக, இறையியலைப் பற்றிய விமர்சனத்தை அரசியலைப் பற்றிய விமர்சனமாக மாற்றுவது முற்போக்குத் தத்துவஞானத்தின் கடமையாக மார்க்ஸ் கண்டார். இந்த விமர்சனம் பயனுள்ளதாகவும் புரட்சிகரமாகவும் இருக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். ''விமர்சன ஆயுதத்தை ஆயுதங்களின் விமர்சனத்துக்குப் பதிலாக உபயோகிக்க முடியாது என்பது உண்மையே; பொருளாயதச் சக்தியைப் பொருளாயதச் சக்தியைக் கொண்டுதான் தூக்கி எறிய வேண்டும்; ஆனால் தத்துவம் பெருந்திரளான மக்களைப் பற்றி விட்டவுடனே ஒரு பொருளாயதச் சக்தியாகி விடுகிறது''* என்று அவர் எழுதினார்.

பெருந்திரளான மக்களின் ஜீவாதாரமான

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 1, பக்கம் 422 (ருஷ்ய மொழியில்).

தேவைகளை, அவர்களுடைய அடிப்படையான நலன்களைத் தத்துவம் பிரதிபலிக்கின்ற பொழுது தான் அது பெருந்திரளான மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற கருத்தை மார்க்ஸ் தன்னுடைய பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் வளர்த்தார். பாட்டாளி வர்க்கத்தின் நிலை காரணமாகப் புரட்சிகரமான தத்துவத்தை, முற்போக்கான தத்துவஞானத்தைப் பரப்புகின்ற வர்க்கமாக அதுவே இருக்க முடியும், இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். ''தத்துவஞானம் தனது பொருளாயத ஆயுதத்தைப் பாட்டாளி வர்க்கத்தில் காண்பதைப் போல, பாட்டாளி வர்க்கம் தனது ஆன்மிக ஆயுதத்தைத் தத்துவஞானத்தில் காண்கிறது....''*

பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தைப் பற்றிய மேதாவிலாசம் நிறைந்த கருத்தை மார்க்ஸ் இப்படி முதன்முறையாக வகுத்தளித்தார். மார்க்ஸ் பள்ளிக்கூட மாணவனாக இருந்த காலத்திலேயே மனித குலத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார்; அது தற்பொழுது மேலும் ஸ்தூலமான, சுறுசுறுப்பான, புரட்சிகரமான தன்மையைப் பெற்றது. மனித குலத்துக்குச் சேவை செய்வது என்றால் மிகவும் வளர்ச்சியடைந்த, முரண்பாடில்லாத புரட்சிகரமான வர்க்கமாகிய, ஒடுக்குமுறையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் தன்னையும் அனைத்து மனித குலத்தையும் விடுவிக்கின்ற தகுதி கொண்ட

---

* அதே நூல், பக்கம் 428.

பாட்டாளி வர்க்கத்துக்குச் சேவை செய்வதே அதன் பொருள்.

இந்தத் தருணத்திலிருந்து அவருடைய முழுச் சக்தியும் அவருடைய மேதாவிலாசத்தின் முழுத் திறனும் உலகத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதைத் தன்னுடைய வரலாற்றுக் கடமையாகக் கொண்ட பாட்டாளி வர்க்கத்துக்கே அர்ப்பணிக்கப்பட்டன.

பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காக நடத்திய மாபெரும் போராட்டத்தில் மார்க்ஸ் பிரெடெரிக் எங்கெல்ஸ் என்ற உண்மையான நண்பரை, உற்ற தோழரைப் பெற்ருர். 1842ல் எங்கெல்ஸ் இங்கிலாந்துக்குச் செல்லும் வழியில் கொலோனில் தங்கிய பொழுது *Rheinische Zeitung* இன் ஆசிரியர் குழுவின் அலுவலகத்துக்கு வந்தார்; அப்பொழுது தான் மார்க்ஸ் எங்கெல்சை முதன்முறையாகச் சந்தித்தார். எங்கெல்ஸ் இங்கிலாந்தில் இருந்த பொழுது இருவரும் தொடர்ச்சியாகக் கடிதத் தொடர்பு வைத்திருந்தார்கள். அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கான குறிப்புகள் என்ற தலைப்பில் எங்கெல்ஸ் எழுதிய கட்டுரை *Deutsch-Französische Jahrbücher* இல் வெளியிடப்பட்டது. இக்கட்டுரை அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளில் மார்க்சின் ஆர்வத்தைத் தூண்டியது.

1844 ஆகஸ்ட் மாத இறுதியில் எங்கெல்ஸ் பாரிசுக்கு வந்த பொழுது அவர்களுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பு நடைபெற்றது; அவர்களுக்கிடையில் முழுமையான கருத்து ஒற்றுமை இருந்தது. மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இடையில் ஏற்பட்ட, படைப்புத் திறன் கொண்ட ஒத்து

ழைப்பு இவ்விதத்தில் தொடங்கியது; அந்த ஒத்துழைப்பு உலக வரலாற்றில் ஒப்புவமை இல்லாத தாகும். ''மனத்தையுருக்கும் நட்பைக் குறித்துப் பல உதாரணங்கள் காட்டும் பழங்கதைகள் உண்டு. ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம், தனது விஞ்ஞானத்தைப் படைத்தவர்கள் இரண்டு அறிஞர்கள், இரண்டு போராட்ட வீரர்கள், அவர்களிடையே நிலவிய உறவு முன்னோர்கள் மனித நட்பு பற்றி எழுதியுள்ள நெஞ்சையள்ளும் கதைகளையெல்லாம் மிஞ்சக் கூடியதாயிருந்தது என்று சொல்லிக் கொள்ளலாம்.''*

---

* வி. இ. லெனின், கார்ல் மார்க்சும் அவரது போதனையும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 74.

# மார்க்சியக் கோட்பாடுகளை விரித்துரைத்தல். தொழிலாளர்களது கட்சியை நிறுவுவதற்கான போராட்டத்தின் தொடக்கம்

மார்க்சும் எங்கெல்சும் பாரிசில் பத்து நாட்கள் சேர்ந்திருந்த பொழுது புனிதக் குடும்பம் அல்லது விமர்சன ரீதியான விமர்சனம் பற்றிய விமர்சனம். புருனோ பௌவருக்கும் அவரது கம்பெனிக்கும் எதிராக என்ற நூலைக் கூட்டாக எழுதத் தொடங்கினார்கள். அவர்கள் இந்நூலில் இளம் ஹெகல்வாதிகளான பௌவர் சகோதரர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றுபவர்களின் கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்தைக் கடுமையாக விமர்சித்தார்கள். 1845 பிப்ரவரியில் வெளியான இந்நூலின் பெரும் பகுதி மார்க்சினால் எழுதப்பட்டதாகும்.

பௌவர் சகோதரர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும், சில தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களே வரலாற்றைப் படைக்கும் தகுதி உடையவர்கள் என்றார்கள். அவர்களுடைய அகநிலைக் கருத்துமுதல்வாதத்தை விமர்சித்த மார்க்சும் எங்கெல்சும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாக உள்ள ஆய்வுரையை முன்வைத்தார்கள்: வரலாற்றை உண்மையாகவே படைப்பவர்கள் ''வீரர்கள்'' அல்ல, மக்கள்

பெருந்திரளினரே என்பது அந்த ஆய்வுரையாகும். கால வளர்ச்சியில் மென்மேலும் பெருந்திரளான மக்கள் அந்த வரலாற்று நிகழ்வுப் போக்கில் உணர்வு பூர்வமான ''செயல் வீரர்களாக'' இருப்பார்கள் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அவர்கள் எழுதிய **புனிதக் குடும்பத்தில்** பாட்டாளி வர்க்கத்தின் உலக-வரலாற்றுக் கடமையைப் பற்றி அநேகமாக முழுமையான கருத்துக்களின் அமைப்பை வகுத்தளித்தார்கள். கற்பனாவாத சோஷலிஸ்டுகள் பாட்டாளி வர்க்கத்தினரை அனாதரவான, துன்பத்தில் நலிகின்ற பெருந்திரளினராகவே கண்டார்கள்; ஆனால் மார்க்சும் எங்கெல்சும் சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கக் கூடிய தகுதியைக் கொண்ட ஒரே சமூகச் சக்தியாகத் தொழிலாளி வர்க்கத்தைக் கண்டார்கள். பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரம் என்ற கருத்து விஞ்ஞானக் கம்யூனிசம் என்ற மாளிகையின் அடிப்படைக் கல்லாக இருந்தது. ''சோஷலிச சமுதாயத்தின் சிற்பியாய்ப் பாட்டாளி வர்க்கம் வகிக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை மார்க்சின் தத்துவம் தெளிவுபடுத்துகிறது''* என்று லெனின் எழுதினார். இந்த மேதாவிலாசம் நிறைந்த கண்டுபிடிப்பு சோஷலிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றியது, முதல் தடவையாக அதை உறுதியான அடிப்படையில் நிறுவியது, வளர்ச்சியடைகின்ற புரட்சிகரமான வர்க்கத்தின் கதியோடு அதை இணைத்

* வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்கு பாகங்களில், முதற் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977, பக்கம் 20.

தது. புனிதக் குடும்பம் புதிய புரட்சிகரப்-பொருள் முதல்வாத உலகக் கண்ணோட்டத்தின், பாட்டாளி வர்க்கச் சித்தாந்தத்தின் கருவைக் கொண்டிருக்கிறது.

எனினும் மார்க்சும் எங்கெல்சும் வளர்த்த புதிய உலகக் கண்ணோட்டத்தைப் பரப்புவதில் அதிகமான கஷ்டங்கள் ஏற்பட்டன. *Deutsch-Französische Jahrbücher* முதல் இரட்டை இதழ் வெளியிடப்பட்ட பிறகு நிறுத்தப்பட்டது; ஆசிரியர் குழுவில் மார்க்சுக்கும் முதலாளி வர்க்கத் தீவிர வாதியான அர்னோல்டு ரூகேயிற்கும் ஏற்பட்ட ஆழமான கருத்து வேறுபாடுகள் அதற்கு முக்கிய மான காரணமாக இருந்தன. இக்கருத்து வேறு பாடுகள் அவர்களுக்கிடையில் முறிவுக்கும் 1844 ஜூனில் வெடித்த சிலேசிய நெசவாளர்களின் எழுச்சியின் தொடர்பாகப் பகிரங்கமான விவாதத் துக்கும் இட்டுச் சென்றன; இவ்விவாதம் பாரிசிலி ருந்து வெளியான *Vorwärts* (''முன்னே செல்'') என்ற ஜெர்மன் பத்திரிகையில் நடை பெற்றது. அந்த எழுச்சி ஒரு குருட்டுத் தனமான, முட்டாள் தனமான கலகம் என்று ரூகே கூறினர். ஆனல் ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கத்தின் முதல் நடவடிக்கை என்று மார்க்ஸ் அதை உற்சாகத்துடன் வரவேற்றார்; எழுச்சியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் காட்டிய வர்க்க உணர்வுக் கூறு களை அவர் மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்டினர். மார்க்சின் தாக்கத்தின் விளைவாக அந்தப் பத்திரிகை கம்யூனிஸ்டு மற்றும் கூர்மையான பிரஷ்ய-எதிர்ப்புத் திசைவழியைப் பின்பற்றியது.

பிரஷ்ய அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தின் விளை

வாக மார்க்சும் அந்தப் பத்திரிகையில் பணியாற்றிய சிலரும் பிரான்சிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். 1845 பிப்ரவரியில் மார்க்ஸ் பிரஸ்ஸெல்சில் குடியேறினர். பிரஷ்ய அரசாங்கம் மார்க்சைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கோருவதற்கு உத்தேசித்தது; இதை அறிந்ததும் மார்க்ஸ் 1845 டிசம்பரில் பிரஷ்யக் குடியுரிமையைக் கைவிட்டார்.

எங்கெல்ஸ் 1845ம் வருடத்தின் வசந்த காலத்தில் பிரஸ்ஸெல்சுக்கு வந்து சேர்ந்தார். அவர் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற புத்தகத்தை அப்பொழுது எழுதி முடித்திருந்தார்; அதில் பிரிட்டிஷ் தொழிலாளர்களின் அனுபவத்தைத் தொகுத்துக் கூறியதுடன் பாட்டாளி வர்க்கத்தின் உலக-வரலாற்றுப் பாத்திரம் என்ற கருத்தை நிறுவியிருந்தார். பிரஸ்ஸெல்சில் மார்க்சைச் சந்தித்ததைப் பற்றி பிற்காலத்தில் எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினர்: "1845ம் வருடத்தின் வசந்த காலத்தில் நாங்கள் மறுபடியும் பிரஸ்ஸெல்சில் சந்தித்த பொழுது மார்க்ஸ் வரலாறு பற்றிய பொருள்முதல்வாதத் தத்துவத்தை—அதன் முக்கியமான கூறுகளில்—ஏற்கெனவே முழுமையாக வளர்த்திருந்தார்.... புதிதாக உருவாக்கப்பட்ட இந்தக் கண்ணேட்டத்தை மிக வித்தியாசமான பல்வேறு திசைகளில் நுணுக்கமாக விரித்துரைக்கின்ற பணியில் இப்பொழுது நாங்கள் ஈடுபட்டோம்."*

சமூகத்தைப் பற்றிய விஞ்ஞானத்தை நுணுக்

* K. Marx, F. Engels, *Selected Works*, in three Volumes, Vol. 3, Progress Publishers, Moscow, 1977, p. 178.

கமாக விரித்துக் கூறுவதற்காக மார்க்சும் எங் கெல்சும் மற்றொரு புத்தகத்தைக் கூட்டாக எழுதத் தொடங்கினார்கள். அவர்கள் ஜெர்மன் சித்தாந்தம் என்ற புத்தகத்தில் ஹெகலின் கருத்து முதல்வாதத் தத்துவஞானத்தையும் இளம் ஹெகல் வாதிகளின அகநிலைக் கருத்துமுதல்வாதத்தையும் அகல்விரிவான விமர்சனத்துக்கு உட்படுத்தினார் கள். கருத்துமுதல்வாதத்தை எதிர்த்துப் போரா டியதற்காக ஃபாயர்பாஹுக்கு உரிய மரியாதை யளிக்கும் அதே சமயத்தில் அவருடைய பொருள் முதல்வாதத்தின் முரண்பாடான, சிந்தனை மய மான, இயக்க மறுப்பியல் தன்மையை மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் இந்தப் புத்தகத்திலும் ''உண்மையான சோஷ லிசம்'' என்று சொல்லப்பட்ட குட்டி முதலாளி வர்க்க, கற்பனாவாத, பிற்போக்குத் தத்துவத்தை விமர்சித்தார்கள். 1846 ஏப்ரலில் ஜெர்மன் சித்தாந்தம் என்ற நூலை எழுதும் வேலை அநேக மாக முடிந்து விட்டது. ஆனால் அப்புத்தகத்தை வெளியிடுவதற்குப் பதிப்பாளர் யாரும் அந்தச் சமயத்தில் கிடைக்கவில்லை. ஜெர்மன் சித்தாந் தத்தின் முதல் முழுமையான பதிப்பு 1932ல் சோவியத் யூனியனில் ஜெர்மன் மொழியில் வெளி யிடப்பட்டது. அதற்குப் பிறகு 1933ல் ருஷ்ய மொழிப் பதிப்பு வெளியிடப்பட்டது.

ஜெர்மன் சித்தாந்தம் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தின் அடிப்படையான கருதுகோள் களைப் பொதுவான உருவரையில் வகுத்தளித்தது; அது மார்க்சின் மாபெரும் கண்டுபிடிப்பாக, உலக வரலாற்றைப் பற்றிய மொத்தமான அறிவில்

தீவிரமான திருப்பு முனையாக, உண்மையான புரட்சியாக இருந்தது. இக்கண்டுபிடிப்பு வரலாற்றை ஒரு விஞ்ஞானமாக மாற்றியது.

சமூக வாழ்க்கையில் பொருளாயத உற்பத்தியின் தீர்மானமான பாத்திரத்தைப் பற்றி வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் முக்கியமான கருது கோளை நிரூபித்த பிறகு மார்க்சும் எங்கெல்சும் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியின் இயக்கவியலை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் சமுதாய-பொருளாதார அமைப்புகளைப் பற்றித் தங்கள் போதனையை முதலில் ஜெர்மன் சித்தாந்தத்தில் எடுத்துக் கூறினார்கள். அவர்கள் வரலாற்று நிகழ்வுப் போக்கை நிர்ணயிக்கின்ற புறநிலையான விதியை வெளிப்படுத்தி நிலப்பிரபுத் துவத்தை முதலாளித்துவம் அகற்றியதைப் போல முதலாளித்துவ சமூகத்தை சோஷலிசம் என்ற புதிய சமூக அமைப்பு அகற்றிவிடும் என்று நிரூபித் தார்கள்.

முரணியல்பான வர்க்க சமுதாயங்களில் வளர்ச் சியின் இயக்குச் சக்தியாக வர்க்கப் போராட்டம் இருக்கிறது என்ற போதனையின் அடிப்படைகளை மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மன் சித்தாந்தத்தில் எழுதினார்கள். பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டமும் சோஷலிஸ்டுப் புரட்சியும் முதலா ளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுவதற்கு அவசியமான நிபந்தனைகள். முதலாளித்துவ சமூ கத்தை அழிப்பதற்குப் பாட்டாளி வர்க்கம்—ஆட் சியைப் பெற விரும்புகின்ற எந்த வர்க்கத்தையும் போல—முதலில் அரசியல் அதிகாரத்தை வென் றெடுக்க வேண்டும். இக்கருதுகோள் பாட்டாளி

வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றிய போதனையின் கருவைக் கொண்டிருக்கிறது. ஜெர்மன் சித்தாந்தம் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் கம்யூனிஸ்டு சமூகத்தின் சில கூறுகளைப் பொதுவான உருவரையின் வடிவத்தில் தருகிறது.

கற்பனவாத சோஷலிஸ்டுகளுக்கு மாருக மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் கம்யூனிசம் என்பது அழகு மிகுந்த எதிர்காலத்தைப் பற்றிய அதியற்புதமான கனவாக இருக்கவில்லை; நடைமுறையில் புரட்சிகரமான சாதனங்களைக் கொண்டு சாதிக்கப்படுகின்ற எதார்த்தமான, வரலாற்று ரீதியில் வரையறுக்கப்பட்ட இலட்சியமாக இருந்தது. ஃபாயர்பாஹின் செயலற்ற, சிந்தனை மயமான பொருள் முதல்வாதத்தை விமர்சிக்கின்ற பொழுது அவர்கள் புரட்சிகரமான தத்துவத்தைச் செய்முறையுடன் இணைக்கின்ற பிரிக்க முடியாத இணைப்புகளைப் பற்றி, தத்துவம் சுறுசுறுப்பான, மாற்றுகின்ற பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்பதைப் பற்றி விசேஷமாக வலியுறுத்தினர்கள். 1845ல் மார்க்ஸ் எழுதிய ஃபாயர்பாஹ் பற்றிய ஆய்வுரைகளில் இந்தச் சிந்தனை மிகத் தெளிவான முறையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது: ''தத்துவஞானிகள் உலகத்தைப் பல்வேறு வழிகளில் வியாக்கியானப் படுத்தி மட்டுமே வந்திருக்கிருர்கள், ஆனல் அதை மாற்றுவதுதான் இப்போதுள்ள விஷயமாகும்''*.

கம்யூனிசத்தின் தத்துவஞான அடிப்படை

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 11.

களாகிய இயக்கவியல் பொருள்முதல்வாதத்தையும் வரலாற்று பொருள்முதல்வாதத்தையும் உருவாக்கு வதில் ஜெர்மன் சித்தாந்தம் ஒரு திருப்புமுனையாக இருந்தது. விஞ்ஞான கம்யூனிசம் மனிதனுடைய சிந்தனையின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாகும். இயற்கை, சமூகம் மற்றும் மனித சிந்தனையின் வளர்ச்சியின் புறநிலையான விதிகளைச் சரியான முறையில் பிரதிபலித்த இந்த மேதாவிலாசமான கண்டுபிடிப்பு தத்துவஞானத்தை ஒரு விஞ்ஞான மாக மாற்றியது. உலகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு சாதனம், உலகத்தை மாற்றிய மைப்பதற்கு ஒரு ஆயுதம் என்ற இரண்டு முறை களிலும் உண்மையான ஒரே விஞ்ஞானத் தத்துவ மாகிய மார்க்சியத் தத்துவத்துக்குச் சமமாக வேறு ஒன்றுமே இல்லை.

இந்தப் புதிய, புரட்சிகரமான தத்துவத்தை வளர்க்கும் பொழுது அதைப் பெருந்திரளான உழைக்கும் மக்களுக்குக் கொடுப்பதற்கு, போராட் டத்தின் இலட்சியங்களையும் வழிகளையும் பற்றிய தெளிவைப் பாட்டாளி வர்க்கத்துக்குக் கொடுத்து அதை ஆயுதபாணியாக்குவதற்கு மார்க்சும் எங் கெல்சும் மிகவும் பாடுபட்டார்கள். இத்திசையில் முதல் நடவடிக்கையாக பிரஸ்ஸெல்சில் (1846ல்) கம்யூனிஸ்டுத் தொடர்புக் கமிட்டி அமைக்கப்பட் டது; இக்கமிட்டியில் மார்க்சையும் எங்கெல்சையும் தவிர அவர்களுடைய நண்பர்களும் ஆதரவாளர் களுமான வில்ஹெல்ம் வோல்ஃப், எட்கார் போன் வெஸ்ட்பாலன், இயோசிஃப் வேய்தெமெயர், பெர்டினண்டு வோல்ஃப், பெல்ஜியக் கம்யூனிஸ்ட் ஜிகோ மற்றும் இதரர்கள் இருந்தார்கள். 1846ம்

வருடத்தின் நடுப் பகுதியிலேயே பிரஸ்ஸெல்ஸ் கமிட்டி ஆங்கில சார்ட்டிஸ்டுகளுடனும் லண்டனி லுள்ள நேர்மையாளர்களின் சங்கத் தலைவர்களுட னும் அந்தச் சங்கத்தின் பாரிஸ் கிளைகளுடனும் ஜெர்மனியிலுள்ள சில கம்யூனிஸ்டுக் குழுக்களுட னும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றி அடைந்தது. விஞ்ஞான ரீதியான கம்யூ னிஸ்டுக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் வெவ் வேறு நாடுகளையும் சேர்ந்த சோஷலிஸ்டுகளையும் வளர்ச்சியடைந்த தொழிலாளர்களையும் திரட்டு வதற்காக மார்க்சும் எங்கெல்சும் மிகவும் பாடுபட் டார்கள்.

முதலாளித்துவ சமூகத்தில் ஆட்சி புரிந்த முதலாளி வர்க்கச் சிந்தாந்தத்தையும் அப்பொழுது பரவலாக இருந்த குட்டி முதலாளி வர்க்க சோஷ லிசம் மற்றும் கம்யூனிசத்தின் எண்ணற்ற ரகங் களையும்—இவை தொழிலாளர்களை வர்க்கப் போராட் டத்திலிருந்து கற்பனாவாத சொர்க்கங்களுக்குள் திருப்பி விட்டன—எதிர்த்து சமரசத்துக்கு இடமில் லாத முறையில் போராடுவதன் மூலமாக மட்டுமே உழைக்கின்ற பெருந்திரளினர் மத்தியில் புதிய, புரட்சிகரத் தத்துவம் செல்ல முடியும். அந்தக் காலத்திய கற்பனாவாத கம்யூனிசத்தின் முக்கிய மான பிரதிநிதிகளில் ஒருவர் வில்ஹெல்ம் வெயித் லிங். வெயித்லிங் 1846ல் பிரஸ்ஸெல்சுக்கு வந்த பொழுது அவர் தன்னுடைய தவறான கருத்துக் களை மாற்றிக் கொண்டு விஞ்ஞான கம்யூனிசத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவி புரிவதற்கு மார்க்சும் எங்கெல்சும் அரும்பாடுபட்டார்கள். ஆனல் அவர் களுடைய முயற்சிகள் பலனளிக்கவில்லை. எனவே

வெயித்லிங்குடன் உறவை முறித்துக் கொள்வது தவிர்க்க முடியாததாயிற்று. மார்க்சும் எங்கெல்சும் வெயித்லிங்கின் கொச்சையான, சமனுக்கும், கற்பனுவாத கம்யூனிசத்தை எதிர்த்துப் போராடியதுடன் ''உண்மையான சோஷலிசத்தையும்'' மிகவும் ஆணித்தரமாக விமர்சித்தார்கள். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளை மெருகிட்டு அவற்றுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அன்பு மற்றும் சகோதரத்துவத்தைத் தேனினும் இனிய முறையில் வலியுறுத்திய கிருன், கிரிகே, ஹேஸ் மற்றும் இதரர்களுடைய ''உண்மையான சோஷலிசத்தை'' பிரஸ்ஸெல்ஸ் கமிட்டி தன்னுடைய கடிதங்களிலும் சுற்றறிக்கைகளிலும் அம்பலப்படுத்தியது. மார்க்சும் எங்கெல்சும் 1846 மே மாதத்தில் எழுதிய கிரிகேக்கு எதிரான சுற்றறிக்கை ''உண்மையான சோஷலிசத்துக்கு'' எதிராக அவர்கள் நடத்திய போராட்டத்தைச் சித்தரிக்கின்ற முக்கிய ஆவணமாகும். அவர்கள் புரூதோனுக்கு எதிராகவும் சமரசத்துக்கு இடமில்லாத போராட்டத்தை நடத்தினுர்கள். மார்க்ஸ் 1846 டிசம்பர் மாதத்திலேயே பா. வ. ஆன்னென்கவுக்கு எழுதிய கடிதத்தில் புரூதோனுடைய குழப்பமான, கருத்துமுதல்வாத, அற்பவாத-சீர்திருத்தவாதக் கருத்துக்களை விமர்சனம் செய்ததுடன் வரலாற்றைப் பற்றிய தன்னுடைய பொருள் முதல்வாதக் கருதுகோளைச் சுருக்கமாகவும் தெரிவித்திருந்தார். புரூதோன் எழுதிய **வறுமையின் மெய்யறிவு** என்ற புத்தகத்துக்குப் பதிலளிப்பதற்காக **மெய்யறிவின் வறுமை** என்ற புத்தகத்தை மார்க்ஸ்

1847ல் எழுதிய பொழுது புரூதோனுடைய கருத்துக்களை நுணுக்கமாக விமர்சித்தார்.

விஞ்ஞான கம்யூனிசத்தின் தத்துவஞான அடிப்படைகளாகிய இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை வளர்த்துச் செல்வதில் **மெய்யறிவின் வறுமை** மற்றொரு திருப்புமுனையாக இருந்தது; அதன் அடிப்படைக் கருத்துக்கள் முதல் தடவையாக இப்புத்தகத்தில் அச்சேறின. முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தை விமர்சன நோக்குடன் மறுபரிசீலனை செய்யும் பணியை மார்க்ஸ் பாரிசில் வசித்த காலத்தில் தொடங்கியிருந்தார்; அதன் முதல் முடிவுகளை மார்க்ஸ் இப்புத்தகத்தில் தொகுத்துரைத்தார். முதலாளித்துவ சமூகத்தையும் அதன் பொருளாதார விதிகளையும் · அழிவில்லாமல் நிலைத்திருப்பவையாக, மாற்றமில்லாதவையாகக் கருதுவது முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் அனைத்திற்கும் அடிப்படையான குறைபாடாகும்; மார்க்ஸ் இக்குறையை **மெய்யறிவின் வறுமையில்** எடுத்துக் காட்டினர். முதலாளித்துவப் பொருளியலாளர்களுக்கும் அவர்களைப் பின்பற்றுகின்ற புரூதோனுக்கும் மாறுபட்ட முறையில் அரசியல் பொருளாதாரத்தின் பல்வேறு வகையினங்களையும் சமூக உறவுகளின் தத்துவ ரீதியான வெளியீடாக, வரலாற்று ரீதியில் தற்காலிகமான — தங்களைப் படைத்த நிலைமைகள் மறைகின்ற பொழுது தாங்களும் மறைய வேண்டிய — வகையினங்களாக மார்க்ஸ் கருதினர். முதலாளித்துவத்தை ''அபிவிருத்தி செய்வதற்கு'' புரூதோன் தெரிவித்த மருந்துகள் பயனற்றவை என்று சுட்டிக் காட்டிய மார்க்ஸ்,

சுரண்டலும் ஏழ்மையும் நெருக்கடிகளும் முதலாளித் துவத்தின் தவிர்க்க முடியாத விளைவுகள், முத லாளித்துவ உற்பத்தி முறையை ஒழித்தால் மட்டுமே அவற்றை ஒழிக்க முடியும் என்பதை விஞ்ஞான ரீதியாக நிரூபித்தார். மார்க்ஸ் தொழிலாளர் களுடைய பொருளாதாரப் போராட்டத்தின் மகத் தான முக்கியத்துவத்தையும் அரசியல் போராட்டத் துடன் அதன் பிரிக்க முடியாத இணைப்பையும் விளக்கினார்; பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் செயல்தந்திரத்தின் முதல் உரு வரைகளைக் கொடுத்தார்.

மார்க்ஸ் எழுதிய **மெய்யறிவின் வறுமையிலும்** 1847 டிசம்பரில் பிரஸ்ஸெல்சில் தொழிலாளர் களிடம் நிகழ்த்திய—பின்னர் 1849ல் **கூலியுழைப்பும் மூலதனமும்** என்ற தலைப்பில் *Neue Rheinische Zeitung* (''புதிய ரைன் பத்திரிகை'')இல் வெளியிடப்பட்ட — சொற்பொழிவுகளிலும் தன் னுடைய அரசியல் பொருளாதாரத்தின் முக்கிய மான ஆய்வுரைகள் பலவற்றை வகுத்துரைத் தார். முதலாளித்துவ சமூகப் பொருளாதாரத்தை முற்றிலுமாக ஆராய்ந்து தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் வளமான அனுபவத்தைப் பொது மைப்படுத்துவதற்கு மார்க்ஸ் பல வருட காலம் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது; அதன் பிறகே அவருடைய பொருளாதாரத் தத்துவம் இன்றிருக்கின்ற பூர்த்தியடைந்த, மூலச்சிறப்பான தத்துவம் என்ற நிலையை அடைந்தது.

''உண்மையான சோஷலிசம்'', வெயித்லிங் கிசம், புரூதோனிசம் மற்றும் இதர குட்டி முத லாளி வர்க்கக் கருத்துக்களையும் போக்குகளையும்

எதிர்த்து முரணில்லாமலும் சமரசத்துக்கு இடமில்லாத முறையிலும் மார்க்சும் எங்கெல்சும் நடத்திய போராட்டம் வளர்ச்சியடைந்த தொழிலாளர்கள் விஞ்ஞான சோஷலிசத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவி செய்தது. நேர்மையாளர்களின் சங்கத்தில் இப்பொழுது ஜெர்மன் தொழிலாளர்களும் கைவினைஞர்களும் மட்டுமல்லாமல் மற்ற தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் சேர்ந்திருந்தனர்; அச்சங்கத்தின் தலைமை மார்க்சையும் எங்கெல்சையும் சங்கத்தில் சேருமாறும் அதைத் திருத்தியமைப்பதற்கு உதவி புரியுமாறும் 1847 பிப்ரவரியில் கேட்டுக் கொண்டது. அவர்கள் அதற்கு இசைந்தார்கள். நேர்மையாளர்களின் சங்கத்தின் காங்கிரஸ் 1847 ஜூனில் லண்டனில் நடைபெற்றது. பாரிஸ் கிளைகள் எங்கெல்சை அதில் பங்கெடுப்பதற்கு அனுப்பின; பிரஸ்ஸெல்ஸ் கிளைகள் வில்ஹெல்ம் வோல்ஃபை அனுப்பின. சங்கத்தைத் தீவிரமான முறையில் திருத்தியமைப்பதென்று காங்கிரஸ் முடிவு செய்தது. அன்று முதல் அது கம்யூனிஸ்டுகள் சங்கம் என்று அழைக்கப்பட்டது. ''எல்லா மனிதர்களும் சகோதரர்கள்!'' என்ற பழைய கோஷத்துக்குப் பதிலாக மார்க்சும் எங்கெல்சும் கூறியபடி ''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!'' என்ற புதிய கோஷம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதத்தின் கோட்பாட்டை வெளியிடுகின்ற இந்தக் கோஷம் அன்று முதல் முதலாளித்துவ அடிமைத் தனத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் போர் முழக்கமாக இருக்கிறது. எங்கெல்ஸ் தயாரித்த கம்யூனிஸ்டுகள்

சங்கத்தின் விதிகளின் முதல் பாரா பாட்டாளி வர்க்க இயக்கத்தின் நோக்கங்களைச் சுருக்கமாக வும் தெளிவாகவும் வரையறுத்தது: ''முதலாளி வர்க்கத்தை முறியடித்துப் பாட்டாளி வர்க்க ஆட்சியை ஏற்படுத்துவது, வர்க்கப் பகைமையை அடிப்படையாகக் கொண்ட பழைய, முதலாளித் துவ சமூகத்தை ஒழித்து வர்க்கங்களும் தனிச் சொத்துடைமையும் இல்லாத புதிய சமூகத்தை நிறுவுவது இச்சங்கத்தின் நோக்கம்.''*

மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிஸ்டுகள் சங்கப் பணிகளைத் தவிர சர்வதேச ஜனநாயகத்தை ஒன்று படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஜனநாயகச் சங்கத்தை பிரஸ்ஸெல்சில் நிறுவுவதில் தீவிரமாகப் பங்கெடுத்தார்கள். முற்போக்கான ஜனநாயக இயக்கம் ஒவ்வொன்றையும் ஆதரிப்பது பாட்டாளி வர்க்கத்தின் கடமை என்று மார்க்சியத்தின் மூலவர்கள் கருதினார்கள். அவர்களுடைய கருத்துக் களின் தாக்கத்தினால் ஜனநாயக மற்றும் கம்யூனிஸ்டுப் பிரச்சார ஏடாக மாறிய *Deutsche-Brüsseler-Zeitung* (''ஜெர்மன்-பிரஸ்ஸெல்ஸ்-பத்திரிகை'') இல் அப்பொழுது ஜெர்மனியில் முதிர்ச்சி அடைந்து கொண்டிருந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட் சிக்கு ஜெர்மன் தொழிலாளர்களைத் தயாரிக்கின்ற நோக்கத்துடன் அவர்கள் சில கட்டுரைகளை எழு தினார்கள்; அதுவே இறுதி நோக்கம் அல்ல, பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு மாறுவதற்கு அது அவசியமான நிபந்தனை என்று அவர்கள் கருத வேண்டும் என்று மார்க்சும் எங்கெல்சும்

---

* K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 6, Progress Publishers, Moscow, p. 585.

இக்கட்டுரைகளில் விளக்கினார்கள். இக்காலகட்டத்தில் அவர்கள் எழுதிய கட்டுரைகளில் நிரந்தரமான புரட்சி என்று அவர்கள் பிற்காலத்தில் வகுத்த கருத்தின் கரு காணப்பட்டது.

கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் இரண்டாவது காங்கிரசின் தயாரிப்புப் பணிகளுக்கு மார்க்சும் எங்கெல்சும் அதிகமான முக்கியத்துவம் அளித்தார்கள். 1847 நவம்பர் கடைசியிலும் டிசம்பர் தொடக்கத்திலும் லண்டனில் நடைபெற்ற இக் காங்கிரசில் சங்கத்தின் விதிகள் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டன, செயல்திட்டம் விவாதிக்கப் பட்டது. விவாதத்தின் பலனாக மார்க்சும் எங்கெல்சும் வலியுறுத்திய கோட்பாடுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அறிக்கையைத் தயாரிக்கின்ற பொறுப்பு அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

அவர்கள் லண்டனில் தங்கியிருந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சார்ட்டிஸ்டுகளுடன் தங்களுடைய உறவுகளை வலுப்படுத்திக் கொண்டார்கள். எங்கெல்ஸ் முதல் தடவையாக 1842—1843ம் வருடங்களிலும் மார்க்ஸ் 1845ம் வருடத்திலும்—அவர்கள் லண்டனுக்கு வந்திருந்த பொழுது—சார்ட்டிஸ்டுகளுடன் தொடர்பு கொண்டார்கள். அவர்கள் மற்ற நாடுகளைச் சேர்ந்த ஜனநாயகவாதிகளுடனும் கம்யூனிஸ்டுகளுடனும் தங்கள் தொடர்புகளைப் பெருக்கிக் கொண்டார்கள். 1830ம் வருடப் போலிஷ் எழுச்சியின் சர்வதேசக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டார்கள். அக்கூட்டத்தில் மார்க்ஸ் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதத்தை ஆதரித்துப் பேசினார்; பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியே ஒடுக்கப்பட்ட எல்லா

தேசிய இனங்களையும் விடுவிக்கும், எல்லா சர்வ தேசச் சண்டைகளையும் யுத்தங்களையும் ஒழித்து தேசிய இனங்களின் உண்மையான சகோதரத் துவத்துக்கு உறுதியான அடிப்படையை அமைக்கும் என்று அவர் கூறினர். எங்கெல்ஸ் தன்னுடைய உரையில் ''மற்ற தேசிய இனங்களை ஒடுக்குகின்ற எந்தத் தேசிய இனமும சுதந்திரமாக இருக்க முடியாது''* என்றார்; இக்கருத்து பிற்காலத்தில் தேசியப் பிரச்சினையில் பாட்டாளி வர்க்கத்துக்கு வழி காட்டும் கொள்கையாயிற்று.

மார்க்ஸ், எங்கெல்சினல் எழுதப்பட்ட அழியாப் புகழ் பெற்ற **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** 1848 பிப்ரவரியில் லண்டனில் வெளியிடப்பட்டது.

விஞ்ஞான கம்யூனிசத்தின் செயல்திட்டமாகிய **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** பாட்டாளி வர்க்கத் தின் புரட்சிகரத் தத்துவத்தை முதல் தடவை யாகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கியது. ''இந்த நூல் மாமேதைக்குரிய தெளிவுடனும் பெருந்திறமையுடனும் ஒரு புதிய உலகக் கண் ணேட்டத்தை விவரிக்கிறது; சமுதாய வாழ்வுத் துறையையும் அணைத்து நிற்கும் முரணற்ற பொருள் முதல்வாதம், வளர்ச்சியைப் பற்றிய மிகவும் முழுமையான, ஆழ்ந்த போதனையான இயக்கவியல், வர்க்கப் போராட்டத்தைப் பற்றியும் புதிய, கம்யூனிஸ்டு சமுதாயத்தின் படைப்பாளி என்கிற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் உலக-வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, புரட்சிகரமான பாத்திரத் தைப் பற்றியும் அமைந்த ஒரு தத்துவம் ஆகியவை

* K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 6, p. 389.

இந்த உலகக் கண்ணோட்டத்தில் அடங்கியவை''*
என்று லெனின் எழுதினார். மொத்தத்தில் அறிக்கை முதலாளித்துவத்தின் அழிவும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் விளைவாக அதனிடத்தில் ஒரு புதிய, வர்க்கமில்லாத சமூகம் ஏற்படுவதும் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சி நிறுவப்படுவதும் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதவை என்று நிரூபிக்கிறது.

முதலாளித்துவ சமூகத்தின் உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தடை செய்யும் விலங்குகளாக மென்மேலும் தாங்கிக் கொள்ள இயலாதபடி மாறுகின்ற பொழுது உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமையைக் காத்து நிற்கும் முதலாளி வர்க்கம் ஒரு காலத்தில் முற்போக்காக இருந்த நிலைமையிலிருந்து மென்மேலும் பிற்போக்கான வர்க்கமாக, கம்யூனிசம் என்ற உயர்வான சமூக அமைப்பை நோக்கி முன்னேறிச் செல்கின்ற மனித குலத்தின் பாதையில் தடையாக மாறும் என்று மார்க்சும் எங்கெல்சும் நிரூபித்தனர்.

அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் உலக-வரலாற்றுப் பாத்திரம் என்ற கருத்தை வளர்த்து முதலாளித்துவத்துக்குச் சவக் குழி தோண்டுபவன் மற்றும் புதிய, வர்க்கம் இல்லாத சமூகத்தைப் படைப்பவன் என்ற கடமையைத் தொழிலாளி வர்க்கம் வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்கப் புரட்சி,

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 45.

முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கியெறிதல் ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றும் என்று எடுத்துக் காட்டினர்.

பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிகரமான போராட்டத்துக்கும் வெற்றிக்கும் அவசியமான நிபந்தனை என்ற முறையில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையான பாத்திரத்தை **அறிக்கை** வகுத்தளிக்கிறது; கம்யூனிஸ்டுக் கட்சியே தொழிலாளி வர்க்கத்தின் மிக உறுதியான, வளர்ச்சியடைந்த பகுதி என்று எடுத்துக் காட்டுகிறது; பாட்டாளி வர்க்க இயக்கத்தின் நிலைமைகள், முன்னேற்றம், விளைவுகளைப் புரிந்து கொள்ள உதவுகின்ற புரட்சிகரமான தத்துவத்தைக் கம்யூனிஸ்டுகள் வைத்திருப்பது மற்ற தொழிலாளர்களைக் காட்டிலும் அவர்களுக்குள்ள சாதகம் என்றும் **அறிக்கை** எடுத்துக் காட்டுகிறது. கம்யூனிஸ்டுகளின் நோக்கங்களையும் உத்தேசங்களையும் பற்றி முதலாளி வர்க்கம் பரப்பிய அவதூறுகளையும் பொய்களையும் அம்பலப் படுத்திய மார்க்சிய மூலவர்கள் பாட்டாளி வர்க்கக் கட்சியின் நோக்கங்கள் முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கியெறிவதும் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதும் என்று வகுத்துரைத்தார்கள். ''பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், **அதாவது** ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்திச் சக்திகளது ஒட்டுமொத்தத்

தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிகமாக்கும்.''* இந்த ஆய்வுரையில் அரசைப் பற்றி மார்க்சியத்தின் மிகவும் மேதாவிலாசமான கருத்துக்களில் ஒன்று அடங்கியிருக்கிறது. ''அரசு, **அதாவது ஆட்சி புரிகின்ற வர்க்கமாக அமைக்கப் பட்ட பாட்டாளி வர்க்கம்,** அதுவே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்''** என்று லெனின் எழுதினர்.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றிய போதனை மார்க்சியத்தின் அடிப்படையான கூறு கும்.

மார்க்சும் எங்கெல்சும் பிரகடனம் செய்த பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதக் கோட் பாட்டை அறிக்கை ஆழமாகத் தத்துவ ரீதியில் நிறுவு கிறது. பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி தேசிய ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டும், காட்டு மிராண்டித் தனமான கொள்ளைக்கார யுத்தங்களிலிருந்து மனிதனை விடுவிக்கும் என்று அவர்கள் எழுதினர் கள். முதலாளித்துவத்துக்குப் பதிலாக ஏற்படுகின்ற புதிய சமூகத்தின் அளவிட முடியாத உயர்வை யும் மேன்மையான மனிதாபிமானத்தையும் மார்க் சும் எங்கெல்சும் வலியுறுத்தினர்கள். உழைப்பவர் களுக்கு எதுவும் கிடைக்காது, உழைக்காதவர்களுக்கு எல்லாமே கிடைக்கும் என்பது முதலாளித்துவ சமூகத்தின் வழி காட்டும் கொள்கை; இதற்கு

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 226.

** வி. இ. லெனின், நூல் திரட்டு, ஐந்தாம் பதிப்பு, தொகுதி 33, பக்கம் 199 (ருஷ்ய மொழியில்).

மாருகக் கம்யூனிஸ்டு சமூகத்தில் உழைக்கும் மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துகின்ற, இனி மையாக்குகின்ற சாதனமாக உழைப்பு இருக்கும் என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினுர் கள்.

எல்லா விதமான சுரண்டலிலிருந்தும் விடுதலே தனி மனிதனுக்கும் சமூகத்துக்குமிடையில் ஒத்தி சைவான இணைப்புக்குப் பொருளாயத அடிப்படை யாக இருக்கும், தனி நபரின் உண்மையான சுதந்திரத்துக்கும் மனிதன் மற்றும் அவன் திறமை கள், தகுதிகளின் சர்வாம்ச வளர்ச்சிக்கும் அடிப் படையாக இருக்கும். ''வர்க்கங்களேயும் வர்க்கப் பகைமைகளேயும் கொண்டிருந்த பழைய முதலாளித் துவ சமுதாயத்துக்குப் பதிலாய், ஒவ்வொருவரும் தங்குதடையின்றிச் சுதந்திரமாய் வளர்வதையே எல்லோரும் தங்குதடையின்றிச் சுதந்திரமாய் வளர்வதற்கான நிபந்தனேயாய்க் கொண்ட மக்கட் கூட்டு ஒன்று எழுந்துவிடும்.''*

அக்காலத்திலிருந்த பல்வேறு சோஷலிஸ்டுப் போக்குகளேயும் மார்க்சும் எங்கெல்சும் **அறிக்கையில்** நுணுக்கமான விமர்சனத்துக்கு உட்படுத்தினுர்கள்; இப்போக்குகள் விஞ்ஞான கம்யூனிசக் கருத்துக்கள் பரவுவதற்குத் தடையாக இருந்தன, பாட்டாளி வர்க்கக் கட்சி ஏற்படுவதைத் தடுத்தன.

**அறிக்கையில்** விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்ட செயல்திட்டத்தைத் தவிர பாட்டாளி வர்க்கக்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 228.

கட்சியின் செயல் தந்திரத்தைப் பற்றிய தத்துவ ரீதியான கோட்பாடுகளும் இடம் பெற்றிருந்தன. இச்செயல்தந்திரத்தின் அடிப்படைக் கோட்பாடு பின்வருமாறு வகுத்துரைக்கப்பட்டது: ''கம்யூனிஸ்டு கள் தொழிலாளி வர்க்கத்தின் உடனடி நோக்கங் கள் சித்தி பெறுவதற்காக, உடனடி நலன்கள் நிறைவேற்றம் பெறுவதற்காகப் போராடுகிறூர்கள்; ஆனால் தற்காலத்திய இயக்கத்தில் இந்த இயக்கத் தின் எதிர்காலத்தையும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்து பேணிப் பாதுகாக்கின்றனர்.''* பிற்போக் கான சமூக, அரசியல் அமைப்புக்கு எதிராக உள்ள ஒவ்வொரு முற்போக்கான, புரட்சிகர இயக்கத்தையும் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்க வேண்டு மென்று மார்க்சிய மூலவர்கள் போதித்தார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பெருமிதமான, பகிரங்கமான அறைகூவலுடன் **அறிக்கை** முடி வடைகிறது: ''பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர் கள். அவர்கள் வென்று பெறுவதற்கு அனைத்து உலகும் இருக்கிறது.

**''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!''****

மார்க்ஸ், எங்கெல்ஸ் படைத்த அழியாச் சிறப்புடைய **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** மிக மேன்மையான சிருஷ்டி ஆதர்சத்தில், புரட்சிகர மான ஆவேசத்தில் தோய்ந்திருக்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான தத்துவத்தின் வளர்ச்சி யில் **அறிக்கை** முன்னே வைக்கப்பட்ட புதிய,

---

* அதே நூல், பக்கம் 247.

** அதே நூல், பக்கம் 249.

மாபெரும் காலடியாக இருந்தது. 1844ல் *Deutsch-Französische Jahrbücher*இல் எழுதப்பட்ட கட்டுரைகளில் மார்க்சியம் உருவாயிற்று; அந்த நிகழ்வுப் போக்கை இந்த மூலச்சிறப்பான நூல் நிறைவு செய்து எதிர்காலத்தில் அது இன்னும் வளர்ச்சி அடைவதற்கு உறுதியான அடிப்படையைக் கொடுத்தது.

பாட்டாளி வர்க்கம் என்ற புதிய புரட்சிகர வர்க்கம் ஏற்கெனவே களத்திலே தோன்றியிருக்காவிட்டால், முதலாளித்துவ சமூகத்துக்குப் பிரத்யேகமான, சமரசப்படுத்த முடியாத உள்முரண்பாடுகள் வெளிப்பட்டிருக்காவிட்டால் மார்க்சியப் போதனை தோன்றியிருக்க முடியாது. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அனுபவத்தை ஆழமாகப் பொதுமைப்படுத்தியதன் விளைவாக மார்க்சியம் தோன்றியது. 18ம் நூற்றாண்டின் கடைசியையும் 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தையும் சேர்ந்த ஜெர்மனியின் மூலச்சிறப்பான தத்துவஞானம், இங்கிலாந்தின் மூலச்சிறப்பான அரசியல் பொருளாதாரம் மற்றும் பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிசம் தத்துவ ரீதியில் அதன் தோற்றுவாய்களாக இருந்தன. மார்க்சின் மாபெரும் விஞ்ஞான சாதனையை லெனின் பின்வரும் சொற்களில் வர்ணித்தார்: ''மனிதச் சிந்தனை தோற்றுவித்திருந்தவை யாவற்றையும் அவர் மறுபரிசீலனை செய்தார், விமர்சனத்துக்கு உட்படுத்தினார், தொழிலாளி வர்க்க இயக்கத்தைக் கொண்டு சரிபார்த்தார். முதலாளித்துவ வரம்புகளால் கட்டுப்படுத்தப்பட்டோரால் அல்லது முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் கட்டுண்டோரால் வந்தடைய முடியாத

முடிவுகளை இவ்வழியில் வந்தடைந்து அவர் வரையறுத்துக் கொடுத்தார்.''*

விஞ்ஞானச் சிந்தனையினால் படைக்கப்பட்ட மிகச் சிறந்த அனைத்தையும் சுவீகரித்துக் கொண்ட மார்க்சின் போதனை தத்துவஞானத்திலும் அரசியல் பொருளாதாரத்திலும் சோஷலிஸ்டுச் சிந்தனையின் வளர்ச்சியிலும் ஒரு தீவிரமான மாற்றமாக, உண்மையான புரட்சியாக இருந்தது. மார்க்சியம் வளர்ச்சியடைந்த பொழுது சோஷலிசத்தைத் தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைப்பதற்குரிய நிலைமைகள் முதன்முறையாக ஏற்பட்டன. முதலாளித்துவ அடிமைத் தனத்திலிருந்து விடுதலை அடைவதற்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தில் மார்க்சின் தத்துவம் அதற்கு ஆன்மிக ஆயுதமாகப் பயன்படுகிறது.

இந்தப் புரட்சிகரமான போதனையை வளர்த்துக் கூறியதில் முக்கியமான பங்கு மார்க்சைச் சேர்ந்ததென்று எங்கெல்ஸ் எப்பொழுதும் வலியுறுத்தினார். ''மார்க்ஸ் ஒரு மேதை. நாங்கள் எல்லோரும், அதிகபட்சமாகச் சொன்னால், திறமைசாலிகளே. அவரில்லாமல் இந்தத் தத்துவம் இன்றிருப்பது போல் இவ்வளவு தூரம் வந்திருக்காது. எனவே அது அவருடைய பெயரைத் தாங்கி நிற்பது சரியே''** என்று எங்கெல்ஸ் எழுதினார்.

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்காம் பாகம், பக்கம் 214.

** பி. எங்கெல்ஸ், லுட்விக் ஃபாயர்பாஹும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977, பக்கம் 62.

# புரட்சிகரமான போராட்டங்கள் (1848 — 1849)

மார்க்சியம் என்ற விஞ்ஞானம் புரட்சிகரமான நடைமுறையுடன் நெருக்கமான தொடர்பில் பிறந்து வளர்ந்தது. மார்க்சும் எங்கெல்சும் பெருந்திரளான மக்களுக்குக் கற்பித்ததோடு தாங்களும் பெருந்திரளான மக்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். புரட்சிகரமான காலகட்டங்கள், பெருந்திரளான மக்கள் வரலாறு படைத்த கொந்தளிப்பான காலங்கள், சமூக வரலாற்றில் மிகவும் முக்கியமான, தீர்மானமான திருப்புமுனைகள் மார்க்சியத்தின் வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன.

அறிக்கை வெளியான அதே சமயத்தில் 1848 பிப்ரவரியில் பிரான்சில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வெடித்தது; ஐரோப்பாவில் மற்ற நாடுகளிலும் அதன் எதிரொலி கேட்டது. புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சியைக் கண்டு கலவரமடைந்த பெல்ஜிய அரசாங்கம் மார்க்சைக் கைது செய்து நாடு கடத்தியது. அவர் புரட்சிகரப் போராட்டத்தில் பங்கெடுப்பதற்காகப் பாரிசுக்குச் சென்றார். அங்கே சென்றவுடன் அவர்—லண்டன்

மற்றும் பிரஸ்ஸெல்ஸ் கமிட்டிகளின் உத்தரவின் பேரில் — கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியைத் திருத்தியமைத்தார்; அதன் தலைவராக மார்க்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தக் கமிட்டிக்கு மார்க்ஸ், எங்கெல்சுடன் கா. ஷாப்பர், பௌவர், இ. மோள், வி. வோல்ஃப் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜெர்மன் கவிஞரான ஹேர்வெக் ஜெர்மனியின் மீது படையெடுத்து அங்கே ஆயுதப் புரட்சியைத் தூண்டுகின்ற உத்தேசத்துடன் பாரிசில் ஜெர்மன் படையை அமைத்துக் கொண்டிருந்தார்; மார்க்சும் அவருடைய ஆதரவாளர்களும் இத்திட்டத்தை உறுதியாக எதிர்த்தார்கள். ''புரட்சியை ஏற்றுமதி செய்கின்ற'' இத்தகைய விளையாட்டுத் தனமான கருத்துக்களை மார்க்ஸ் கண்டனம் செய்தார்; ஜெர்மன் தொழிலாளர்கள், குறிப்பாகக் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்கள் தனித்தனியாக ஜெர்மனிக்குள் சென்று அங்கே பெருந்திரளான மக்களைப் புரட்சிகரமான போராட்டத்துக்குத் திரட்ட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர்.

ஜெர்மனியில் புரட்சி ஏற்பட்ட பொழுது மார்க்சும் எங்கெல்சும் **ஜெர்மனியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் கோரிக்கைகள்** *(1848 மார்ச்)* என்ற முக்கியமான ஆவணத்தைத் தயாரித்தார்கள். கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் புதிய மத்தியக் கமிட்டி இக்கோரிக்கைகளை அங்கீகரித்த பிறகு அவை ஜெர்மனி முழுவதிலும் சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டன. இந்த ஆவணம் ஜெர்மனியில் புரட்சியின் அடிப்படைக் கடமைகளை வகுத்தளித்தது: ஒற்றை,

ஜனநாயக ஜெர்மன் குடியரசை நிறுவுதல், எல்லோருக்கும் வாக்குரிமை, மக்கள் அனைவருக்கும் ஆயுதமளித்தல், நிலப்பிரபுத்துவக் கடன் பாக்கிகள், சேவைகள் அனைத்தையும் ரத்துச் செய்தல், மேன்மக்களுடைய பண்ணைகள் மற்றும் இதர நிலப்பிரபுத்துவ எஸ்டேட்டுகளைத் தேசியமயமாக்குதல், இரும்புத்தாது மற்றும் நிலக்கரிச் சுரங்கங்கள், ரயில் பாதைகள் மற்றும் இதர போக்குவரத்துச் சாதனங்களைத் தேசியமயமாக்குதல், படிப்படியாக அதிகரிக்கும் வருமான வரியை அமுலாக்குதல், அரசிலிருந்து திருச்சபைகளைப் பிரித்தல், இதரவை. கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் அரசியல் நோக்கங்கள் பின்வருவன: 38 பெரிய, சிறிய மற்றும் மிகவும் சிறிய அரசுகளைக் கொண்ட ஜெர்மனியின் அரசியல், பொருளாதாரப் பிரிவினைகளை அகற்றுதல், நிலப்பிரபுத்துவ எச்சங்கள் அனைத்தையும் ஒழித்தல், முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் வெற்றி, அதற்குப் பிறகு பாட்டாளி வர்க்கம் சோஷலிசத்துக்காக நடத்துகின்ற போராட்டத்துக்கு மிகவும் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துதல்.

1848 ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் மார்க்சும் எங்கெல்சும் அவர்களுடைய நெருங்கிய சகாக்களும் பாரிசிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றார்கள். அங்கே புரட்சித் தீ பரவிக் கொண்டிருந்தது. அவர்கள் கொலோனிலிருந்து செயல்படுவதென்று முடிவு செய்தனர். அது ஜெர்மனியில் மிகவும் வளர்ச்சியடைந்த பிரதேசங்களில் ஒன்றான ரைன் மாநிலத்தின் தலைநகரம். அங்கே தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள்; சட்டம்

பத்திரிகைகளுக்கு அதிகமான சுதந்திரத்தைக் கொடுத்தது. எனவே ஒரு புரட்சிகரமான செய்தித்தாளே இந்த நகரத்திலிருந்து வெளியிடுவதென்று மார்க்ஸ் முடிவு செய்தார்.

மார்க்ஸ் செய்தித்தாளே வெளியிடுவதற்கு அவசியமான தயாரிப்புகளேச் செய்து கொண்டிருக்கும் பொழுது அரசியல் துறையிலும் மிகவும் சுறுசுறுப்பான முயற்சிகளேச் செய்தார். அவர் பாரிசில் இருந்த பொழுதே—மாயின்த்ஸ் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்கள் மூலமாக—தொழிலாளர்கள் சங்கங்களே மத்தியப்படுத்துவதற்கும் ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் வெகுஜன அரசியல் ஸ்தாபனத்தை அமைப்பதற்கும் ஆரம்ப நடவடிக்கைகளேச் செய்திருந்தார். கொலோனுக்கு வந்தும் அவர் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் சில உறுப்பினர்களேச் சங்கத்தின் கிளேகள் அமைப்பதற்கும் சட்ட பூர்வமான தொழிலாளர் கழகங்களே அமைப்பதற்கும் அனுப்பினர். ஆனல் அவர்கள் பல கஷ்டங்களேச் சமாளிக்க வேண்டியிருந்தது. ஜெர்மனி அப்பொழுது அரசியல் ரீதியில் பிரிந்திருந்தது, பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலேயில் இருந்தது. அங்கே பெரிய அளவிலான தொழில் துறை அப்பொழுதுதான் தோன்றிக் கொண்டிருந்தது, கைத்தொழில் முறைதான் பரவலாக இருந்தது. தொழிலாளி வர்க்கம் இன்னும் மிகவும் பலவீனமாக, அமைப்பு ரீதியாக்கப்படாமல் அரசியல் ரீதியில் முதிர்ச்சி இல்லாமலிருந்தது. இந்தப் பின்தங்கிய நிலேமையினுலும் தொழிலாளர்கள் கட்சியை நிறுவுவதற்கு அவசியமான நிலேமைகள் இல்லாமையினுலும் மார்க்ஸ், எங்கெல்ஸ் தலேமையிலிருந்த

பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியடைந்த பிரதிநிதிகள் அரசியல் அரங்குத்தில் ஜனநாயகக் கட்சியின் தீவிரவாத, பாட்டாளி வர்க்கப் பகுதி என்ற முறையில் மட்டுமே தோன்ற முடிந்தது; இல்லையென்ருல் அவர்கள் ஒரு குறுங்குழு என்ற நிலையில்தான் இருந்திருப்பார்கள். இத்தகைய நிலைமைகளில் கம்யூனிஸ்டுகள் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளுடன் ஒரே ஸ்தாபனத்தில் ஒத்துழைக்க முடியும்; ஆனுல் அவர்களுடைய முரண்பாடுகளேயும் ஊசலாட்டங்களேயும் அவர்கள் தொடர்ச்சியாக விமர்சிக்க வேண்டும் என்று மார்க்சும் எங்கெல்சும் முடிவு செய்தார்கள். ஆனுல் கம்யூனிஸ்டுகள் பொதுவான ஜனநாயக முகாமில் முன்னணியிலிருந்த போராட்டக்காரர்கள் என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான கடமைகளே மறந்துவிடக் கூடாது, பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி அவசியமான கட்டமே தவிர முடிவான இலட்சியமல்ல என்று அவர்கள் வற்புறுத்திஞர்கள். மார்க்சும் எங்கெல்சும் நிறுவிய *Neue Rheinische Zeitung* ஜனநாயகக் கொடியை உயர்த்திப் பிடித்தது; ஆனுல் அந்த ஜனநாயகம் எங்கும், எல்லா ஸ்தூலமான உதாரணங்களிலும் அதன் பிரத்யேகமான பாட்டாளி வர்க்கத் தன்மையை வலியுறுத்தியது. இச் செயல்தந்திரத்தைப் பின்பற்றியே கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்களும் அவர்கள் தலைமை தாங்கிய தொழிலாளர் ஸ்தாபனங்களின் உறுப்பினர்களும் அப்பொழுது ஜெர்மனியில் தோன்றிக் கொண்டிருந்த ஜனநாயக ஸ்தாபனங்களில் சேர

வேண்டும் என்று மார்க்ஸ் கூறினர். கொலோனி லிருந்த ஜனநாயக ஸ்தாபனத்தில் மார்க்ஸ் உறுப்பினரானர்; ரைன் மாநிலம் மற்றும் வெஸ்ட் பாலியாவின் ஜனநாயக ஸ்தாபனங்களின் தற்காலி கமான மாநிலக் கமிட்டிக்கும் அவர் தேர்ந் தெடுக்கப்பட்டார். அதே சமயத்தில் தொழி லாளர்கள் ஸ்தாபனங்களை அமைப்பதிலும் பாட் டாளி வர்க்கத்துக்கு அரசியல் கல்வி அளிப்பதிலும் பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைப்பதற்குத் தயாரிப்புகளைச் செய்வதிலும் கவனம் செலுத் தும்படி மார்க்ஸ் தன்னுடைய ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

1848 ஜூன் முதல் தேதியன்று *Neue Rheinische Zeitung* இன் முதல் இதழ் ''ஜனநாயகப் பத்திரிகை'' என்ற துணைத் தலைப்புடன் வெளியிடப் பட்டது. அதன் ஆசிரியர் குழுவில் கா. மார்க்ஸ் (பிரம ஆசிரியர்), பி. எங்கெல்ஸ், ஹெ. பியூர்கெர்ஸ், எ. துரோன்கே, கி. வேயெர்த், பெ. வோல்ஃப் மற்றும் வி. வோல்ஃப் ஆகியோர் இருந்தனர். மார்க்சும் ஆசிரியர் குழுவிலிருந்த மற்ற உறுப் பினர்களும் இப்பத்திரிகையின் மூலமாக நாடு முழுவதிலும் சிதறியிருந்த கம்யூனிஸ்டுகள் சங்கத் தின் உறுப்பினர்களுக்கு அரசியல் வழி காட்டுதல் அளித்தார்கள். மார்ச் மாதத்துக்குப் பிந்திய ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகள் சங்கம் ஒரு ரகசிய ஸ்தாபனமாகக் கருதப்படவில்லை. சீக்கிரத்திலேயே ஜெர்மனியிலும் அதற்கு வெளியிலும் பத்திரிகை மிகவும் பிரபலமடைந்தது. மார்க்சும் எங்கெல் சும் கொந்தளிப்பான 1848-1849ம் வருடங்களைப் பற்றி ஆழமான, விஞ்ஞானப் பகுப்பாய்வை

இப்பத்திரிகையில் எழுதினர்கள்; அவர்கள் போராட்டத்தின் கோஷங்களை வகுத்துரைத்தார்கள், புரட்சியின் முக்கியமான கடமைகளைச் சுட்டிக் காட்டினர்கள். அப்பொழுது பாரிஸ், வியென்னவின் தெருக்களிலும், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஹங்கேரியிலுள்ள நகரங்களிலும் கிராமங்களிலும், செக் பிரதேசங்களிலும் போலந்திலும் போர் புரிந்து கொண்டிருந்த பெருந்திரளான மக்களுடைய நலன்களை அப்பத்திரிகை அதிகமான வன்மையுடனும் துணிவுடனும் ஆதரித்தது. *Neue Rheinische Zeitung* ஜெர்மனிக்கு மட்டுமின்றி ஐரோப்பா முழுமைக்குமே ஜனநாயகத்தின் குரலாகத் திகழ்ந்தது.

மார்ச் மாதப் போராட்டங்கள் புரட்சியை நிறைவேற்றி விட்டன, இனி அதன் பலன்களை அனுபவிக்க வேண்டியதே என்ற தவருன கருத்து மக்கள் மத்தியில் விரிவாகப் பரப்பப்பட்டுக் கொண்டிருந்தது; இந்தப் பிரமையை முற்றிலும் அம்பலப் படுத்துவது *Neue Rheinische Zeitung*இன் கடமை என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினர்கள். தீர்மானமான போராட்டம் இன்னும் தள்ளியிருக்கிறது என்று அந்தப் பத்திரிகை நாள் தோறும் மக்களுக்கு விளக்கியது. மார்ச் சம்பவங்களுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஜெர்மன் முதலாளி வர்க்கம் பிரஷ்ய நிலப்பிரபுத்துவ-எதேச்சாதிகாரப் பிற்போக்கு வாதத்துடன் சமரசம் செய்கின்ற கொள்கையைக் கடைப்பிடித்தது; இந்தத் துரோகத்தை இப்பத்திரிகை உணர்ச்சிகரமாக, ஆவேசமாகக் கண்டனம் செய்தது. முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவப் பாக்கிகளை ரத்துச் செய்கின்ற கோரிக்

கையைக் கைவிட்டு விவசாயிகளுக்குத் துரோகம் செய்து விட்டது என்று மார்க்சும் எங்கெல்சும் எழுதினார்கள். மற்ற மக்களினங்களை ஒடுக்குகின்ற பழைய கொள்கையைத் தொடர்ந்து பின்பற்று வதற்காகவும் இப்பத்திரிகை முதலாளி வர்க் கத்தைக் கண்டனம் செய்தது. முற்போக்கான, ஜனநாயக இலட்சியத்துக்காகக் கிளர்ந்தெழுந்த ஒவ்வொரு தேசிய இனத்தையும் *Neue Rheinische Zeitung* உறுதியாக ஆதரித்தது.

ஃபிரான்க்ஃபுர்ட் மற்றும் பெர்லின் தேசிய சபைகளின் உறுப்பினர்கள் துணிவான, உறுதியான புரட்சிகர நடவடிக்கையில் ஈடுபடாமல் வீண் விவாதங்களில் காலத்தைக் கழித்தபடியால் அவர் களுடைய ''நாடாளுமன்ற அறிவீனத்தை'' இப் த்திரிகை அதிகமான ஏளனத்துடன் கிண்டல் சய்தது.

புரட்சி மெய்யாகவே வெற்றியடைய வேண்டு மன்றால் அங்கே மக்களின் புரட்சிகரமான சர்வாதிகாரத்தை நிறுவுவது மிக அவசியம் என்று மார்க்ஸ் கருதினார். ''புரட்சிக்குப் பிறகு அரசின் தற்காலிக அமைப்பு ஒவ்வொன்றிலும் சர்வாதி காரம் அவசியம், அது சுறுசுறுப்பான சர்வாதி காரமாகவும் இருக்க வேண்டும்.''* வரலாற்றின் போக்கைத் திருப்புகின்ற உத்தேசத்தோடு மறு படியும் தங்களுடைய சக்திகளைத் திரட்டிக் கொண் டிருந்த புரட்சியின் எதிரிகளை ஒடுக்கும்படி மார்க்ஸ் மக்களை அறைகூவினார். அவர் புரட்சியில் மிக முக்கியமான பாத்திரத்தைப் பாட்டாளி வர்க்கத்

---

* K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 7, p. 431.

துக்கு ஒதுக்கினர். ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் பொது ஜனநாயக முகாமில் மிகவும் முரணில்லாத, உறுதிமிக்க பகுதியாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினர். ''உண்மையான சோஷலிஸ்டும்'' கொலோன் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான ஆ. கோத்ஷால்கின் குறுங்குழுவாத நிலையை—அது தோற்றத்தில் அதிதீவிரவாதமாகவும் அடிப்படையில் சந்தர்ப்பவாதமாகவும் இருந்தது—அவர் கண்டனம் செய்தார். அதைப் போலவே முன்பு பெர்லின் தொழிலாளர் சங்கத்துக்கும் பின்னளில் தொழிலாளர்கள் சகோதரத்துவத்துக்கும் தலைவராக இருந்த ஸ்தே. போர்னின் சீர்திருத்தவாதக் கொள்கையையும்—அவருடைய தவருன செயல்தந்திரம் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் பிரதான கடமைகளை நிறைவேற்றப் போராடுவதிலிருந்து தொழிலாளர்களைத் திசை திருப்பியது—கண்டனம் செய்தார்.

1848 ஜூன் மாதத்தில் பாரிஸ் தொழிலாளர்களின் எழுச்சியின் போது *Neue Rheinische Zeitung* இன் அடிப்படையான பாட்டாளி வர்க்கத் தன்மை அழுத்தமாக வெளிப்பட்டது. முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் நடைபெற்ற முதல் உள்நாட்டு யுத்தம் என்ற முறையில் மார்க்ஸ் இந்த எழுச்சியின் வரலாற்று முக்கியத்துவத்தை மிகச் சிறப்பாக மதிப்பிட்டார். எழுச்சியில் ஈடுபட்டோரின் இணையற்ற வீரத்தை அவர் போற்றினர்; முதலாளி வர்க்க எதிர்ப்புரட்சியின் காட்டு மிராண்டித் தனத்தை அவர் சீற்றத்துடன் கண்டனம் செய்தார்.

பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்தின் தோல்

விக்குப் பிறகு ஐரோப்பாவின் மற்ற நாடுகளிலும் எதிர்ப்புரட்சி தலையைத் தூக்கத் தொடங்கிய பொழுது மார்க்சும் எங்கெல்சும் மக்களைத் திரட்டுவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டனர். ரைன் மாநிலத்தின் ஜனநாயக ஸ்தாபனங்களின் மாநிலக் காங்கிரஸ் 1848 ஆகஸ்டில் கொலோனில் நடைபெற்ற பொழுது மார்க்ஸ் அதில் சிறப்பாகப் பங்கெடுத்தார். முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்காலிகமான மாநிலக் கமிட்டியை—அதில் மார்க்ஸ் தலைமையான நபராக இருந்தார்—காங்கிரஸ் ஒருமனதாக அங்கீகரித்தது.

தீவிரமான தொழிலாளர்களையும் இடதுசாரி ஜனநாயகவாதிகளையும் சந்தித்து பிரஷ்ய, ஆஸ்திரிய முடியாட்சிகளுக்கு எதிராக அவர்கள் இன்னும் உறுதியாகப் போராடுவதற்குத் தூண்டுதற்காக மார்க்ஸ் ஆகஸ்ட் மாதத்தின் இறுதியில் பெர்லினுக்கும் வியென்னாவுக்கும் சென்றார். ஜூன் எழுச்சிக்காரர்களை *Neue Rheinische Zeitung* ஆதரித்தபடியால் அதன் பங்குதாரர்கள் விலகிக் கொண்டனர்; எனவே அப்பத்திரிகைக்குப் பணம் திரட்டுவதும் இப்பயணத்தின் மற்றொரு நோக்கமாகும். மார்க்ஸ் வியென்னாவில் தங்கியிருந்த பொழுது ஆஸ்திரியாவின் ஜனநாயக மற்றும் தொழிலாளர்கள் ஸ்தாபனங்களின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். வியென்னாவின் ஜனநாயக சங்கத்தின் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார்; மேற்கு ஐரோப்பாவில் சமூக உறவுகள், கூலி உழைப்பு, மூலதனம் என்ற தலைப்புகளில் அவர் தொழிலாளர் சங்கத்தில் பேசினர்.

கொலோனுக்குத் திரும்பியதும் மார்க்சும்

ஆசிரியர் குழுவைச் சேர்ந்த மற்ற உறுப்பினர் களும் எதிர்ப்புரட்சித் தாக்குதலை முறியடிக்க நடவடிக்கைகள் எடுப்பதில் ஈடுபட்டனர். மார்க்ஸ் கொலோனுக்குத் திரும்புவதற்கு முன்பே *Neue Rheinische Zeitung* பத்திரிகையின் ஆதரவில் 1848 செப்டெம்பர் 13ந் தேதியன்று கொலோன் ஃபிரன் கென்பிலாட்சில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தப் பட்டது. இக்கூட்டத்தில் பாதுகாப்புக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது; மார்க்சும் எங்கெல்சும் இக்கமிட்டியின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக் கப்பட்டிருந்தனர். **ஜெர்மனியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் கோரிக்கைகள்** பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்தவர்களிடம் வினியோகிக்கப்பட்டன. *Neue Rheinische Zeitung* பத்திரிகையும் கொலோன் தொழிலாளர் சங்கமும் இணைந்து செப்டெம்பர் 17ந் தேதியன்று கொலோனுக்கு அருகில் வோரின் கேன் என்ற இடத்தில் பொதுக் கூட்டத்தை நடத்தின; அதில் ஆயிரக் கணக்கான தொழி லாளர்களும் விவசாயிகளும் கலந்து கொண்டார் கள். மேய்ன் நதிக்கரையில் உள்ள ஃபிரான்க் ஃபுர்ட்டில் எழுச்சி ஏற்பட்டதன் தொடர்பாக கொலோன் நகரப் பாதுகாப்புக் கமிட்டி செப் டெம்பர் 20ந் தேதியன்று ஒரு பொதுக் கூட்டம் நடத்தியது.

ரைன் மாநிலத்தில் வெகுஜன இயக்கத்தின் வளர்ச்சியினாலும் *Neue Rheinische Zeitung* பத் திரிகையின் செல்வாக்கு வேகமாகப் பெருகிக் கொண்டிருந்ததனாலும் கலவரமடைந்த அரசாங் கம் துருப்புகளைத் தயாராக வைத்துக் கொண்டு மக்களை வேட்டையாடுவதற்குத் தகுந்த சாக்கை

எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது. ஆத்திர மூட்டுகின்ற நோக்கத்துடன் கொலோன் தொழிலாளர் தலைவர்கள் செப்டெம்பர் 25ந் தேதியன்று கைது செய்யப்பட்டனர். மார்க்சும் அவருடைய ஆதரவாளர்களும் நிலைமையை நிதானத்தோடு மதிப்பிட்டனர்; கொதித்துக் கொண்டிருந்த மக்கள் பெருந்திரளினரை அகாலமான, தனியான எழுச்சியில் ஈடுபட வேண்டாம் என்று தடுத்தனர். மக்களை ஆத்திரமூட்டுகின்ற முயற்சியில் வெற்றி அடையாத பிரஷ்ய அரசாங்கம் செப்டெம்பர் 26ந் தேதியன்று கொலோனில் இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்தது; மக்கள் தொண்டர்கள் படையினரிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து அவர்களைக் கலைத்தது; *Neue Rheinische Zeitung* உக்கு முதலிடம் கொடுத்து சில பத்திரிகைகளைத் தடை செய்தது. எங்கெல்ஸ் உள்பட ஆசிரியர்கள் குழுவில் சிலரைக் கைது செய்யும்படி உத்தரவிட்டது; ஆகவே அவர்கள் கொலோன் நகரத்தை விட்டுப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் கொலோனில் இராணுவச் சட்டத்தை எதிர்த்து பிரம்மாண்டமான அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றபடியால் அக்டோபர் 3ந் தேதியன்று அதை ரத்துச் செய்யும்படி அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு, அக்டோபர் 12ந் தேதியன்று *Neue Rheinische Zeitung* மறுபடியும் வெளியிடப்பட்டுக் கொலோன் தெருக்களில் விற்பனையாயிற்று. மார்க்ஸ் தன்னுடைய தகப்பனாரிடமிருந்து குடும்பச் சொத்தை அப்பொழுதுதான் பெற்றிருந்தார்; பத்திரிகையை மறுபடியும் வெளியிடு

வதற்காக மார்க்ஸ் அந்தப் பணத்தைச் செல விட்டார்.

எங்கெல்ஸ் இல்லாதபடியால் பத்திரிகையைத் தயாரிக்கின்ற வேலையில் மார்க்ஸ் இன்னும் அதிக மான நேரத்தைச் செலவிட வேண்டியதாயிற்று. ஜனநாயகச் சங்கம் மற்றும் தொழிலாளர் சங் கத்தின் வேலைகளிலும் அவர் தீவிரம் காட்டினார். கொலோன் தொழிலாளர் சங்கத்தின் தலைவரான மோள் தன்னைக் கைது செய்வார்கள் என்று எதிர் பார்த்து லண்டனுக்குப் போய்விட்டதாலும் ஷாப் பர் சிறையிலிருந்ததாலும் மார்க்சைத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படிக் கமிட்டி கேட்டுக் கொண்டது. அப்பொறுப்பைத் தற்காலி கமாக ஏற்றுக் கொண்ட மார்க்ஸ் அக்டோபர் 16ந் தேதியன்று நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் வியென்னாவில் ஏற் பட்ட புரட்சிகரமான எழுச்சியின் முன்னேற்றத் தைப் பற்றித் தொழிலாளர்களிடம் எடுத்துக் கூறினார்.

1848 நவம்பர் 6ந் தேதியன்று **வியென்னாவின் வீழ்ச்சி** என்ற தலைப்பில் மார்க்ஸ் எழுதிய கட்டு ரையில் எழுச்சி தோல்வி அடைந்ததற்கு உண்மை யான காரணம் முதலாளி வர்க்கத்தின் துரோ கமே என்று சுட்டிக் காட்டினார். எதிர்ப்புரட்சிச் சக்திகளின் திட்டங்களை அம்பலப்படுத்திய மார்க்ஸ் பிரஷ்யாவில் திடீர்ப்புரட்சிக்குத் திட்டங்கள் போடப் படுகின்றன என்று மக்களை எச்சரித்தார்; விரைவில் ஏற்படப் போகின்ற எதிர்ப்புரட்சித் தாக்குதலை முறியடிக்க மிகவும் வெற்றிகரமான, உறுதியான போராட்ட முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டு

மென்று அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

மார்க்ஸ் முன்னறிவித்தபடி வியென்னுவில் எதிர்ப்புரட்சியின் வெற்றியினுல் ஊக்குவிக்கப்பட்ட பிரஷ்யப் பிற்போக்குவாதம் திடீர்ப்புரட்சி நடத்துவதற்குத் தயாரிப்புகளைச் செய்தது. பிரஷ்யாவின் அரசர் தேசிய சபையை பெர்லினிலிருந்து பிராண்டன்பர்க் என்ற ஒரு சிறிய மாகாண நகரத்துக்கு மாற்றி நவம்பர் 9ந் தேதியன்று ஆணையிட்டார். தேசிய சபையைக் கலைப்பதற்கு இது பூர்வாங்க நடவடிக்கை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. எனவே பிரதிநிதிகள் அமைச்சர்களைக் கைது செய்துவிட்டுத் தங்களுக்கு ஆதரவு கொடுக்கும்படி மக்களையும் படை வீரர்களையும் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று மார்க்ஸ் வற்புறுத்தினுர்.

பெருந்திரளான மக்களைச் செயலில் ஈடுபடுத்துவதற்காக வரிகளைக் கொடுக்காதே என்ற கோஷத்தை மார்க்ஸ் நவம்பர் 11ந் தேதியன்று பிரகடனம் செய்தார். இது எதிர்ப்புரட்சிச் சக்திகளின் நிதி பலத்தை அரித்து விட்டிருக்கும், அரசாங்கத்தைத் தீவிரமாக எதிர்ப்பதற்குப் பெருந்திரளான மக்களைத் திரட்டியிருக்கும். நவம்பர் 14ந் தேதியன்று மார்க்ஸ் தலைமை தாங்கிய மாநிலக் கமிட்டி வரிகளைக் கொடுக்க வேண்டாம் என்று பொது மக்களைக் கேட்டுக் கொள்ளும்படி ரைன் மாநிலத்திலுள்ள எல்லா ஸ்தாபனங்களையும் அறைகூவியது. பொது மக்களின் நிர்ப்பந்தத்தினுல் தேசிய சபை நவம்பர் 15ந் தேதியன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது; அத்தீர்மானம் நவம்பர் 17ந் தேதியன்று சட்டமாகும். இதன் தொடர்பாக மாநிலக்

கமிட்டி நவம்பர் 18ந் தேதியன்று இரண்டாவது அறைகூவலை வெளியிட்டது; வரி வசூலிக்கப்படுவதைச் சாத்தியமான எல்லா வழிகளிலும் எதிர்க்கும்படியும் எதிரிகளை விரட்டுவதற்குத் தொண்டர் படைகளை அமைக்கும்படியும் பாதுகாப்புக் கமிட்டிகளை நிறுவும்படியும் அறைகூவல் வற்புறுத்தியது. ரைன் மாநிலத்தில் எழுச்சியின் ஜீவனாக இருந்த மார்க்ஸ் முன்னேறிக் கொண்டிருந்த எதிர்ப்புரட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு மக்களைத் திரட்டுவதில் தன்னுடைய முழு சக்தியையும் ஈடுபடுத்தினார். இயக்கத்தின் சிதறிக் கிடந்த பகுதிகளைத் தேசிய சபை மட்டுமே மத்தியப்படுத்தியிருக்க முடியும்; ஆனால் அது செயலற்ற, சட்டபூர்வமான எதிர்ப்பைத் தவிர வேறு எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. எதிர்ப்புரட்சி இதைப் பயன்படுத்திக் கொண்டு திடீர்ப்புரட்சியை நிறைவேற்றியது; டிசம்பர் 5ந் தேதியன்று தேசிய சபையைக் கலைத்தது.

முதலாளி வர்க்கமும் எதிர்ப்புரட்சியும் என்ற தலைப்பில் 1848 டிசம்பரில் மார்க்ஸ் எழுதிய சிறப்பான கட்டுரைத் தொடரில் அவர் ஜெர்மனியில் மார்ச் புரட்சியின் படிப்பினைகளை ஆழமாகப் பகுப்பாய்வு செய்தார்; ஜெர்மன் முதலாளி வர்க்கத்தின் கோழைத் தனத்தையும் துரோகத்தையும் கண்டனம் செய்தார்.

பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கம் புரட்சியில் வெற்றி அடைந்து ஐரோப்பாவில் புரட்சிக்குப் புதிய உத்வேகமளிக்கும் என்று மார்க்ஸ் நம்பினார். ஐரோப்பாவில் புரட்சிக்கு முக்கியமான ஆபத்து அப்பொழுது ஐரோப்பாவில் பிற்போக்குவாதத்தின்

அரசுக இருந்த ஜாரிஸ்டு ருஷ்யா மட்டுமல்ல, முதலாளி வர்க்கப்-பிரபுத்துவ இங்கிலாந்துமே என்று மார்க்ஸ் கருதினர். பிரான்சில் பாட்டாளி வர்க்கப் புரட்சி உடனடியாக ஏற்படப் போகிற தென்று மார்க்ஸ் தவருக நினைத்தார்; முதலாளித் துவத்தின் ''கிழட்டுத் தன்மையையும்'' அவர் தவருக மிகைப்படுத்தினர். ''ஆனல் இத்தகைய தவறுகள், உலக முழுவதிலுமுள்ள பாட்டாளி வர்க்கத்தையும் அற்பமான, சாதாரணமான, சிறு தரமான கடமைகளின் தரத்துக்கு மேலே உயர்த்த முயற்சித்த, அப்படி உயர்த்திய புரட்சி கரச் சிந்தனையின் மாமேதைகளின் தவறுகள் அதிகார பூர்வமான மிதவாதத்தின் சிற்றறிவைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக மேன்மை யானவை, சிறப்பானவை; வரலாற்று ரீதியில் அதிகப் பயனுள்ளவை, உண்மையானவை''* என்று லெனின் எழுதினர்.

பிரஷ்யாவில் எதிர்ப்புரட்சி தன்னுடைய நிலை களைப் பலப்படுத்திக் கொண்டதும் மார்க்சையும் *Neue Rheinische Zeitung* இல் பணியாற்றிய வர்களையும் ஒடுக்குவது அதிகரித்தது. 1849 பிப்ரவரி 7ல் மார்க்சும் எங்கெல்சும் (எங்கெல்ஸ் அப்பொழுதுதான் ஸ்விட்சர்லாந்திலிருந்து திரும்பி யிருந்தார்) ''அரசாங்கத்தை அவமதித்ததாகக்'' குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். மறு நாள் மார்க்ஸ் மறுபடியும் நீதிமன்றத்தில் ஆஜரானர். இம்முறை அவரும் மாநில ஜனநாயகக் கமிட்டியின் மற்ற தலைவர்

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 12, p. 378.

களும் வரி கொடுக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொண்டு ''அரசாங்க விரோத நடவடிக் கைகளுக்குத் தூண்டியதாகக்'' குற்றம் சாட்டப் பட்டிருந்தனர். இரண்டு சந்தர்ப்பங்களிலும் மார்க்ஸ் குற்றம் சாட்டப்பட்டவராக நீதிமன்றத்தில் பேச வில்லை, குற்றம் சாட்டுபவராகவே பேசினர். இரண்டு வழக்குகளிலும் அவர் குற்றவாளி அல்ல என்று ஜூரிகள் தீர்ப்பளித்தார்கள்.

எதிர்ப்புரட்சியின் தாக்குதலுக்கு எதிராக மக் களைத் திரட்டிய நேரத்தில் *Neue Rheinische Zeitung* இன் உண்மையான பாட்டாளி வர்க்கத் தன்மை மென்மேலும் வன்மையடைந்தது. 1849 ஏப்ரல் மாதத்தின் ஆரம்ப இதழ்களில் மார்க்ஸ் எழுதிய கூலியுழைப்பும் மூலதனமும் அச்சிடப்பட்டது. அவர் எழுதிய பொருளாதார நூல்களில் இது மிகவும் ஆரம்ப காலத்தைச் சேர்ந்தது. முதலாளித்துவ சமூகத்தில் பாட்டாளி வர்க்கத்தின் மற்றும் உழைக் கும் மக்களின் வர்க்கப் போராட்டத்தின் பொருளா யத அடிப்படையாகவுள்ள பொருளாதார உறவு களை அவர் இதில் ஆராய்ந்தார்; முதலாளித்துவச் சுரண்டலைப் பற்றியும் முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளி வர்க்கத்தின் தனிமுதலான மற்றும் சார்பு நிலையான வறுமையடைதலைப் பற்றியும் அவர் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டினர். அரசியல் பொருளாதாரத்தின் மிகச் சிக்கலான பிரச்சினைகள் கருரான விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றன; ஆனல் இந்நூல் மிக எளிமையான முறையில் எழுதப்பட்டிருப்பதால் தொழிலாளர்கள் அதைச் சுலபமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

1849ம் வருடத்தின் வசந்த காலத்தில் அரசியல் நிலைமை மாற்றமடைந்திருந்ததாலும் உழைக்கும் மக்களின் அரசியல் உணர்வு வளர்ச்சி அடைந்திருந்ததாலும் மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய செயல்தந்திரத்தை மாற்றிக் கொண்டனர். புரட்சிகரமான போராட்டத்தில் தொழிலாளர்களுக்குக் கிடைத்த அரசியல் அனுபவம், குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகம் இப்பொழுது கேவலமடைந்துவிட்டபடியால் முதிர்ச்சி அடைந்த தொழிலாளர்கள் அதிலிருந்து பிரிந்து வந்தது, நாடு தழுவிய அளவில் ஒன்றுபட வேண்டும் என்று அவர்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் ஜெர்மனியின் பல பகுதிகளிலும் நடைபெற்ற தொழிலாளர் சங்கங்களின் அதிகமான காங்கிரசுகளில் வெளிப்பட்டது ஆகியவை பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான அரசியல் ஸ்தாபனத்தை அமைப்பதைச் செய்முறைப் பிரச்சினையாக முன்வைப்பதைச் சாத்தியமாக்கின. 1849 ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியில் மார்க்சும் எங்கெல்சும் அவர்கள் தலைமை தாங்கிய கொலோன் தொழிலாளர் சங்கமும் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகத்துடன் முறித்துக் கொண்டனர்; அப்பொழுது அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களின் நாடு தழுவிய அமைப்பில் சேருவதற்காகவும் கம்யூனிஸ்டுகளை முக்கியப் பகுதியாகக் கொண்ட அரசியல் கட்சியாக அதை மாற்றுவதற்காகவும் அவர்கள் ஜனநாயகச் சங்கத்திலிருந்து வெளியேறினார்கள். இக்கட்சியை அமைப்பதற்கு அவசியமான சித்தாந்தத் தயாரிப்புகளில் *Neue Rheinische Zeitung* பத்திரிகையில் வெளியிடப்பட்ட கூலியுழைப்பும்

மூலதனமும் என்ற நூல் முக்கியமான பாத்திரத்தை வகித்தது. மார்க்சும் அவருடைய ஆதரவாளர்களும் ஜெர்மனி முழுவதிலும் சிதறியிருந்த கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர்களுடன் தங்களுடைய தொடர்பை வலுப்படுத்திக் கொள்ளத் தொடங்கினார்கள். இதற்காக மார்க்ஸ் வெஸ்ட்பாலியாவிலும் வடமேற்கு ஜெர்மன் நகரங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்; மத்திய ஜெர்மனிக்கும் கிழக்கு ஜெர்மனிக்கும் தூதர்களை அனுப்பினார்.

எனினும் இந்தச் சமயத்தில் ஜெர்மனியில் எதிர்ப்புரட்சிச் சக்திகளுக்கும் புரட்சிச் சக்திகளுக்கும் இடையில் கடைசிச் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மே மாதத்தின் தொடக்கத்தில், ஃபிரான்க்ஃபுர்ட் தேசிய சபையினால் அங்கிகரிக்கப்பட்ட பேரரசு அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து டிரெஸ்டன், ரைன் மாநிலத்தில் சில நகரங்கள், வெஸ்ட்பாலியா, ஃபால்ஸ் மற்றும் பாதெனில் ஒரு எழுச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இப்பொது மக்களுடைய எழுச்சிக்கு உதவி செய்ய விரும்பிய மார்க்சும் எங்கெல்சும் அதை விரிவுபடுத்துவதற்கும் அதற்கு மத்தியத் தலைமையையும் துணிவையும் வேகத்தையும் கொடுப்பதற்கும் ஒரு திட்டத்தைத் தயாரித்தார்கள்; இத்திட்டம் ஐரோப்பாவில் புரட்சிகரப் போராட்டத்தின் பொது நிலையோடும் பிரான்சிலும் இத்தாலியிலும் புரட்சியின் புதிய எழுச்சியோடும் ஹங்கேரியில் புரட்சிகர யுத்தத்தோடும் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் எழுச்சிக்குத் தலைமை தாங்கிய குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி

கள் உறுதியான புரட்சிகர நடவடிக்கை எடுக்கத் தங்களால் முடியாதென்பதை மறுபடியும் விளம் பரப்படுத்திக் கொண்டார்கள். அவர்களுடைய கோழைத் தனத்தையும் முடிவில்லாத ஊசலாட் டத்தையும் பயன்படுத்திக் கொண்டு பிரஷ்யத் துருப்புகள் எழுச்சிகளை ஒவ்வொன்றாக முறியடித் தன.

எதிர்ப்புரட்சி ரைன் மாநிலத்தில் சிதறிக் கிடந்த எழுச்சி மையங்களை நசுக்கிய பிறகு *Neue Rheinische Zeitung* பத்திரிகை மீது அடக்கு முறையைப் பிரயோகித்தது. மார்க்ஸ் 1845ல் தன்னுடைய பிரஷ்யக் குடியுரிமையைக் கைவிட் டிருந்தார்; 1848ல் அவர் ஜெர்மனிக்குத் திரும் பிய பொழுது குடியுரிமையைக் கோரினார்; ஆனால் அது மறுக்கப்பட்டது. பிரஷ்ய அரசாங்கம் இதைப் பயன்படுத்திக் கொண்டு ''தங்கியிருப்பவர்களுக் குரிய விதிகளை மீறிய அந்நியர்'' என்ற முறையில் மார்க்சை நாட்டிலிருந்து வெளியேற உத்தரவிட் டது. ஆசிரியர் குழுவின் மற்ற உறுப்பினர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவற்றின் பலனாகப் பத்திரிகையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. கடைசி இதழ் 1849 மே 19ந் தேதி யன்று வெளியிடப்பட்டது; அந்த இதழ் சிவப்பு மையில் அச்சிடப்பட்டது. ஆசிரியர் குழுவின் கடைசிக் கட்டுரை கொலோன் தொழிலாளர்களுக்கு என்ற தலைப்பில் வெளியாயிற்று. ''உங்களிடமிருந்து விடை பெறுகின்ற பொழுது *Neue Rheinische Zeitung* இன் ஆசிரியர்கள் உங்களுடைய ஆதரவுக் காக நன்றி செலுத்துகின்றனர். **உழைக்கும் வர்க்கத்தின் விடுதலையே எப்பொழுதும், எங்கும்**

எங்களுடைய கடைசி வார்த்தையாக இருக்கும்'' என்ற சொற்களுடன் இக்கட்டுரை முடிவடைந்தது.

மார்க்ஸ் மேய்ன் நதிக்கரையில் உள்ள ஃபிரான்க்ஃபுர்ட், பாதென் மற்றும் ஃபால்சில் சிறிது காலம் தங்கியிருந்த பிறகு பிரான்சில் புரட்சியின் எழுச்சியை எதிர்பார்த்ததனால் பாரிசுக்குச் சென்றார். எங்கெல்ஸ் ஃபால்சில் வில்லிஹின் வாலன்டியர் படையில் சேர்ந்தார்; எதிர்ப்புரட்சிச் சக்திகளை எதிர்த்து நடைபெற்ற நான்கு சண்டைகளில் பங்கெடுத்தார்.

மார்க்ஸ் பாரிசில் பிரெஞ்சு ஜனநாயகவாதிகளுடனும் தொழிலாளர்கள் சங்கங்களுடனும் தன் தொடர்புகளைப் புதுப்பித்து விரிவுபடுத்திக் கொண்டார். பிரெஞ்சு குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளின் நடவடிக்கை 1849 ஜூன் 13ல் தோல்வியடைந்த பிறகு அரசாங்கம் மார்க்ஸை பிரான்சிலிருந்து வெளியேற உத்தரவிட்டது. ஆகஸ்ட் 24ந் தேதியன்று மார்க்ஸ் லண்டனுக்குப் புறப்பட்டார். சீக்கிரத்தில் எங்கெல்சும் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் இதர உறுப்பினர்களும் அங்கே வந்து சேர்ந்தனர். நாடு துறந்தவர் என்ற முறையில் மார்க்ஸினுடைய வாழ்க்கை இத்தேதியிலிருந்து தொடங்கி அவர் மரணமடைகின்ற வரையிலும் நீடித்தது.

1848-1849ம் வருடங்களின் புரட்சிகள் முறியடிக்கப்பட்டதற்கு உலக வரலாற்றின் அச்சகாப்தத்தின் பிரத்யேகத் தன்மை காரணமாகும்: ''அப்போது முதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகவாதிகளின் புரட்சிகரத் தன்மை (ஐரோப்பா

வில்) ஏற்கெனவே மறைந்து கொண்டிருந்தது; அதே பொழுதில் சோஷலிஸ்டு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தன்மை இன்னும் முதிர்ச்சியடைந்திருக்கவில்லை''*.

இந்தப் புரட்சிகரமான வருடங்களில் மார்க்சின் மேதாவிலாசம், மிகுதியான ஆற்றல், வளையாத மன உறுதி, பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்காகவும் ஒடுக்கப்பட்ட அனைவருடைய நலன்களுக்காகவும் போராடுகின்ற வீரனின் சுய அர்ப்பணிப்பும் உணர்ச்சி வேகமும் குறிப்பிட்ட வன்மையுடன் வெளிப்பட்டன. வரலாற்றிலேயே முதல் தடவையாக ஒரு புரட்சிகரமான தலைவர் தன்னுடைய கொள்கையை விஞ்ஞான அடிப்படையில் அமைத்துக் கொண்டிருந்தார். 1848-1849ம் வருடப் புரட்சிகள் மார்க்சியத்துக்கு ஏற்பட்ட முதல் வரலாற்றுப் பரிசோதனையாக மட்டுமல்லாமல் அவை இது மேலும் வளர்ந்து செழுமையடைவதற்கு மாபெரும் ஆதாரமாகவும் இருந்தன.

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 3, பக்கம் 245.

# புரட்சியின் படிப்பினைகளைத் தொகுத்துரைத்தல்

புரட்சிக்கு ஏற்பட்ட தோல்வி மார்க்ஸ் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த இலட்சியத்தின் நியாயத்திலும் மகத்துவத்திலும் அவருடைய ஆழமான நம்பிக்கையை ஒரு நிமிடத்துக்குக் கூட அசைக்கவில்லை. அக்காலத்திய குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகத்தின் தலைவர்களிடம் பொதுவாகக் காணப்பட்ட குழப்பம், தளர்ச்சி, மனமுறிவு ஆகியவற்றை அவர் சிறிது கூட உணரவில்லை. மார்க்சும் அவருடைய குடும்பத்தினரும் அந்நிய நாட்டில் இருந்தார்கள்; கையில் ஒரு காசு கூட இல்லை; அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களும் இடர்களும் ஏராளம்; ஆனால் மார்க்ஸ் எல்லாத் துன்பங்களையும் பொறுமையுடன் தாங்கிக் கொண்டார்.

*Neue Rheinische Zeitung. Politisch-Ökonomische Revue* ("புதிய ரைன் பத்திரிகை. அரசியல்-பொருளாதார மதிப்புரை") என்ற சஞ்சிகையை வெளியிடுவதற்கு மார்க்ஸ் லண்டனில் உடனடியான முயற்சிகளைச் செய்தார். 1850ல் ஹாம்புர்கில் அச்சிடப்பட்ட இச்சஞ்சிகையின் ஆறு

இதழ்களில் 1848-1849ம் வருடங்களில் பிரான்சி லும் ஜெர்மனியிலும் நடைபெற்ற புரட்சிகளின் விளைவுகளைத் தொகுத்து மார்க்சும் எங்கெல்சும் எழுதிய சில கட்டுரைகள் காணப்படுகின்றன.

1849ம் வருடத்தின் இறுதியில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டி மறுபடியும் செய லாற்றத் தொடங்கியது. 1850 மார்ச்சில் மார்க்சும் எங்கெல்சும் **கம்யூனிஸ்டுகள் சங்கத்துக்கு மத்தியக் கமிட்டியின் வேண்டுகோள்** என்ற ஆவணத் தைச் சுற்றறிக்கையாகக் கிளைகளுக்கு அனுப்பினார் கள். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆவணத்தில் அவர்கள் ஜெர்மனியில் 1848–1849ம் வருடப் புரட்சியின் படிப்பினைகளை ஆராய்ந்து, மற்றொரு புரட்சி ஏற்படக் கூடிய வாய்ப்புகளை மதிப்பிட்டு, இந்த எதிர்காலப் புரட்சியில் பாட்டாளி வர்க்கக் கட்சியின் செயல் தந்திரத்தை உருவரையாகக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் பின்வரும் முக்கியமான முடிவை இந்த **வேண்டுகோளில்** வெளியிட்டனர்: 1848–1849ம் வருடங்களிலிருந்து வித்தியாசமான முறையில் எதிர்காலப் புரட்சியில் தொழிலாளர்கள் கட்சி "மிகவும் அமைப்புத் திரட்சியுடன் அறவே ஒரு முகப்பட்ட நிலையில் ஆகச் சுயேச்சையான முறை யில் இயன்றவரை செயல்பட வேண்டும்"*. குட்டி முதலாளி வர்க்கம் அதிகாரத்தைப் பெற்ற தும் புரட்சியை இயன்ற அளவில் சீக்கிரமாக முடிவுக்குக் கொண்டு வரப் பாடுபடும்; இதிலிருந்து

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி 2, பக்கம் 74.

வித்தியாசமான முறையில் தொழிலாளி வர்க்கக் கட்சியின் கடமை ''புரட்சியை நிரந்தரமாக்கு வது.... நமக்கு இந்தப் பிரச்சினை தனிச்சொத் துடைமையில் மாறுதல் செய்வதல்ல, மாருக அதை அழித்தொழிப்பது மட்டுமே; வர்க்கப் பகைமைகளைச் சுமுகப்படுத்தல் அல்ல, மாருக வர்க்கங்களை ஒழிப்பதே; நிலவும் சமுதாயத்தைத் திருத்துவதல்ல, மாருக புதிய ஒரு சமுதாயத்துக்கு அடித்தளம் இடுவதே.''*

*Neue Rheinische Zeitung* இல் ஏற்கெனவே உருவரையில் எழுதப்பட்ட நிரந்தரமான புரட்சி என்ற கருத்து வேண்டுகோளில் மிக முழுமை யாக விரித்துரைக்கப்பட்டது. முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சி சோஷலிஸ்டுப் புரட்சியாக வளர்ச்சி யடைவதைப் பற்றிய லெனின் தத்துவத்தில் இந்தக் கருத்து மேலும் வளர்க்கப்பட்டது. ருஷ்யா வில் 1917ம் வருடத்தின் புரட்சிகரப் போராட்டங் களிலும் மகத்தான அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றியிலும் அது மிகச் சிறப்பான முறையில் நிரூபிக்கப்பட்டது.

ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் புதிய நிலைமை—பொருளாதாரப் புத்தாக்கமும் பிற்போக்குவாதத் தின் வளர்ச்சியும்—அங்கே உடனடியான புரட் சிக்கு வாய்ப்பில்லாமல் செய்து விட்டது என்று மார்க்சும் எங்கெல்சும் 1850ம் வருடத்தின் இலை யுதிர் காலத்தின் போது முடிவு செய்தார்கள். அவர்கள் புதிய நிலைமையை நிதானமாக மதிப் பிட்டு கட்சியின் செயல்தந்திரத்தையும் போராட்ட

* அதே நூல், பக்கம் 80.

முறைகளையும் மாற்ற வேண்டும் என்று வற்புறுத்தினர்கள். சக்திகளைப் பொறுமையாக, மிகவும் கவனமாகத் திரட்டுவதும் எதிர்காலப் புரட்சிக்கு அவற்றை முறைப்படியாகத் தயாரிப்பதும் புதிய நிலைமையில் அவசியமாக இருந்தன. ஆனல் சங்கத்தில் வில்லிஹ் மற்றும் ஷாப்பரின் தலைமையிலிருந்த சில உறுப்பினர்கள் புறவயமான வரலாற்று நிலைமைகளைப் புறக்கணித்துவிட்டு ஜெர்மனியில் ஆயுதப் போராட்டத்துக்கு—ஆபத்தைப் பற்றிக் கவலைப்படாத முறையில்—திட்டங்களை முன்வைத்தார்கள். 1850 செப்டெம்பர் 15ந் தேதியன்று நடைபெற்ற மத்தியக் கமிட்டியின் கூட்டத்தில் மார்க்ஸ் அவர்களுடைய சதிகார, குறுங்குழுவாத, தன்விருப்ப நிலையை விமர்சித்ததுடன் அவர்கள் ''புரட்சியுடன் விளையாடுவதனல்'' ஏற்படக் கூடிய ஆபத்தையும் தீமையையும் பற்றி எச்சரித்தார். மத்தியக் கமிட்டி உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் மார்க்சை ஆதரித்த போதிலும் சங்கத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு மார்க்ஸ் எல்லாவற்றையும் செய்தார். எனினும் வில்லிஹ்-ஷாப்பர் கோஷ்டி பிளவை ஏற்படுத்த முனைந்தது. இடதுசாரி அதிதீவிரவாதக் குறுங்குழுவாதச் சக்திகளின் பிளவு நடவடிக்கையிலிருந்து மத்தியக் கமிட்டியைக் காப்பாற்றுவதற்காக அதன் தலைமையகம் லண்டனிலிருந்து கொலோனுக்கு மாற்றப்பட்டது.

மார்க்ஸ் கம்யூனிஸ்டுகள் சங்கத்தில் தன்னுடைய பணிகளுடன் சேர்த்து 1848—1849ம் வருடப் புரட்சிகளின் அனுபவத்தைத் தத்துவ ரீதியில் பொதுமைப்படுத்துவதற்கு அதிகமான நேரத்தைச்

செலவிட்டார். அவர் எழுதிய பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள். 1848 முதல் 1850 வரை என்ற புத்தகம் 1850ம் வருடத்திலும் லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர் என்ற புத்தகம் 1852ம் வருடத்திலும் வெளியிடப்பட்டன.

மார்க்ஸ் இப்புத்தகங்களில் ஸ்தூலமான வரலாற்றுச் சம்பவங்களை ஆராய்வதற்கு வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை மேதாவிலாசத்துடன் கையாண்டார். அவர் ஒரு ஆராய்ச்சியாளரின் கவனத்தோடு தலைசிறந்த இலக்கியத் திறமையையும் விஞ்ஞானியின் புறநிலையான ஆராய்ச்சியுடன் அரசியல் போராட்டக்காரரின் புரட்சி உத்வேகத்தையும் இணைத்துக் கொண்டார். புரட்சி நடைபெற்ற கொந்தளிப்பான நாட்களின் போது—அப்பொழுது வரலாற்று நிகழ்வுப் போக்கில் பெருந்திரளான மக்களின் நடவடிக்கை, முன்முயற்சி மற்றும் படைப்பாற்றல் சிகரத்தை எட்டின—பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்கள் நடத்திய போராட்டத்தின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்திய மார்க்ஸ் புதிய, மிக முக்கியமான முடிவுகளைக் கொண்டு தன்னுடைய தத்துவத்தைச் செழுமைப்படுத்தினர். இம்முடிவுகள் பிரதானமாக, பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையில் உள்ள உறவுகள், அரசைப் பற்றி பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை ஆகிய இரண்டு பிரச்சினைகளைப் பற்றியிருந்தன.

பெருந்திரளான விவசாயிகள் மூலதனத்தின் ஆட்சிக்கு எதிராகக் கிளம்பாமல், அவர்கள் பாட்டாளி வர்க்கத்துடன் அணி வகுத்து, அதைத்

தங்களுடைய தலைவனுக அங்கீகரிக்காவிட்டால் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ அமைப்பை ஒழிக்க முடியாது என்று பிரெஞ்சுப் புரட்சியின், குறிப்பாக 1848 ஜூலையில் நடைபெற்ற பாட்டாளி வர்க்க எழுச்சியின் அனுபவம் மார்க்சுக்குப் போதித்தது. விவசாயிகள் உழைக்கும் மக்களாக வும் அதே சமயத்தில் சொத்துடைமையாளர் களாகவும் இருக்கின்ற முரண்பாடான, இரட் டைத் தன்மையை மார்க்ஸ் வெளிக் காட்டினர்; அவர்களுடைய நலன்களைச் சரியாகப் புரிந்து கொள்வதன் மூலம் விவசாய வர்க்கத்தையும் நகரப் புறப் பாட்டாளி வர்க்கத்தையும் கூட்டணி யாக அமைக்க முடியும் என்றார். "...விவசாயிகள் முதலாளித்துவ ஆட்சி அமைப்பை ஒழிப்பதைக் கடமையாகக் கொண்டுள்ள நகரப் புறப் பாட்டாளி வர்க்கத்தைத் தங்களுடைய இயற்கையான தோழ ணுக, தலைவனுகக் காண்கின்றனர்."* இந்த மிக முக்கியமான அரசியல் முடிவை மார்க்ஸ் 1856 ஏப்ரல் 16ல் எங்கெல்சுக்கு எழுதிய கடிதத் தில் பின்வருமாறு வகுத்தளித்தார்: "ஜெர் மனியில் எல்லாமே பாட்டாளி வர்க்கப் புரட் சிக்கு விவசாயப் போரின் ஏதாவதொரு வகை யான இரண்டாம் பதிப்பின் மூலம் ஆதரவளிக் கின்ற சாத்தியத்தைப் பொறுத்திருக்கின்றது"**.

---

* கா. மார்க்ஸ், லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 179.

** K. Marx, F. Engels, *Selected Correspondence*, Progress Publishers, Moscow, 1982, p. 86.

இந்தச் சிறப்புமிக்க மார்க்சின் கருத்து, சோஷலிஸ்டுப் புரட்சி மொத்த முதலாளி வர்க்கத்துக்கும் எதிராகப் பாட்டாளி வர்க்கம் தனியாக நடத்துவதல்ல, பாட்டாளி வர்க்கத்தைத் தலைமையான வர்க்கமாகவும் மக்களின் அரைப் பாட்டாளி வர்க்கச் சக்திகள், உழைக்கின்ற, சுரண்டப்படுகின்ற கோடிக் கணக்கான மக்களைத் துணைவர்களாகவும் கொண்டு அது நடைபெறும் என்ற லெனினிஸ்டுத் தத்துவத்தில் மேலும் வளர்க்கப் பட்டது.

1848—1849ம் வருடப் புரட்சிகளின் வளமான அரசியல் அனுபவம் அரசு பற்றித் தன்னுடைய போதனையை வளர்ப்பதற்கும் ஸ்தூலப்படுத்துவதற்கும் மார்க்சுக்கு உதவியது. பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள். 1848 முதல் 1850 வரை என்ற புத்தகத்தில் ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்'' என்ற மூலச்சிறப்பான சொற்றொடர் முதல் தடவையாக உபயோகிக்கப்படுகிறது. பல்வேறு ரகங்களைச் சேர்ந்த முதலாளி வர்க்க, குட்டி முதலாளி வர்க்க மற்றும் கற்பனாவாத சோஷலிசத்திலிருந்து தனியான முறையில் விஞ்ஞான சோஷலிசம் ''புரட்சியின் நிரந்தரத் தன்மையின் பிரகடனமாகும், பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கச் சர்வாதிகாரம் பொதுவாக வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதற்கும் அவை சார்ந்து நிற்கும் எல்லா உற்பத்தி உறவுகளையும் ஒழிப்பதற்கும் இந்த உற்பத்தி உறவுகளுக்கு ஒத்ததான எல்லாச் சமுதாய உறவுகளையும் ஒழிப்பதற்கும் இந்தச் சமுதாய உறவுகளில் இருந்து விளையும் எல்லாக் கருத்துக்களையும் புரட்சிகரப்படுத்துவதற்கும் அவசியமான இடை

மாற்றக் கட்டமாகும்''* என்று மார்க்ஸ் எழுதினர். மார்க்ஸ் லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர் என்ற புத்தகத்தில் அரசு பற்றிப் பாட்டாளி வர்க்கத்தின் அணுகுமுறையை வரையறுத்துக் கூறினர்: இதற்கு முந்திய அனைத்துப் புரட்சிகளும் பழைய அரசு இயந்திரத்தைச் செம்மைப்படுத்தி வலுப்படுத்தின; இந்த அதிகார வர்க்க, இராணுவக் கருவியைச் சுரண்டப்படுகின்ற பெருந்திரளான மக்களை ஒடுக்குகின்ற இன்னும் அதிக பலமான ஆயுதமாக ஆக்கின; பழைய அரசு இயந்திரத்தை அழிப்பது, நொறுக்குவதே பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கடமை. ''எல்லாப் புரட்சிகளுமே இந்த இயந்திரத்தை உடைத்து நொறுக்கி விடுவதற்குப் பதிலாக அதை முழுநிறைவாக்கின.''** ''இம்முடிவுதான் அரசு பற்றிய மார்க்சியப் போதனையில் தலையாயதும் அடிப்படையானதுமான அம்சம்''*** என்று லெனின் எழுதினர்.

அரசு மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றித் தன்னுடைய போதனைக்கு மார்க்ஸ் எவ்வளவு முக்கியத்துவம் அளித்தார் என்பதை அவர் வேய்தெமெயருக்கு 1852 மார்ச் 5ல் எழுதிய கடிதத்திலிருந்து அறிய முடியும். ''என்னைப் பொறுத்த வரையிலும் நவீன சமூகத்தில்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், தொகுதி 2, பக்கங்கள் 279–280.

** கா. மார்க்ஸ், லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், பக்கம் 170.

*** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 6, பக்கம் 47.

வர்க்கங்கள் இருப்பதையோ அல்லது அவற்றுக்கிடையே நடைபெறுகின்ற போராட்டத்தையோ கண்டு பிடித்த பெருமை என்னைச் சேர்ந்ததல்ல. எனக்கு வெகு காலத்துக்கு முன்பே முதலாளித்துவ வரலாற்ருசிரியர்கள் இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சியையும் முதலாளித்துவப் பொருளியலாளர்கள் இந்த வர்க்கங்களின் பொருளாதார உள்ளமைப்பையும் வர்ணித்திருக்கிருர்கள். நான் புதிதாக என்ன செய்தேன் என்ருல் கீழ்க்கண்டவற்றை விளக்கியதுதான்: 1) வர்க்கங்கள் இருந்து வருவது உற்பத்தியின் வளர்ச்சியில் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் மட்டுமே தொடர்புடையதேயாகும்; 2) வர்க்கப் போராட்டம் கண்டிப்பாகப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்கிறது; 3) இந்தச் சர்வாதிகாரமே எல்லா வர்க்கங்களையும் ஒழிப்பதற்கான, வர்க்கங்களற்ற சமுதாயத்தை நிறுவுவதற்கான மாற்றக் கட்டமாக மட்டுமே இருக்கிறது'' என்று அவர் எழுதினுர்.

புரட்சி வருடங்களின் போது பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் போராட்ட அனுபவம் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தத்துவத்தை மேலும் வளர்ப்பதற்கு, பாட்டாளி வர்க்கக் கட்சியின் போர்த்திட்டத்தையும் செயல்தந்திரத்தையும் விரித்துக் கூறுவதற்கு வளமான தோற்றுவாயாக உதவியது. 1848 ஜூன் மாதத்தில் பாரிஸ் எழுச்சி மற்றும் 1848 மே மாதத்தில் தென்மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற எழுச்சியின் படிப்பினைகளிலிருந்து மார்க்சும் எங்கெல்சும் புரட்சிகர எழுச்சி ஒரு

கலே என்ற போதனையை வகுத்துக் கொடுத்தார்கள்.

அவர்கள் 1848–1849ம் வருடங்களின் புரட்சிகளைத் தத்துவ ரீதியில் பொதுமைப்படுத்தியதுடன் முன்னேற்றமடைந்த தொழிலாளர்களைத் திரட்டுவதற்கும் கம்யூனிஸ்டுகள் சங்கத்தைப் பலப்படுத்துவதற்கும் கடுமையாகப் பாடுபட்டார்கள். மார்க்ஸ் தலைமை தாங்கிய சங்கத்தைப் பற்றிப் பிரஷ்ய அரசாங்கம் மென்மேலும் அதிகமாகக் கலவரமடைந்தது. எனவே பிரஷ்ய போலீஸ் அதன் நடவடிக்கைகளை நிறுத்தி விடுகின்ற நோக்கத்துடன் 1851 மே மாதத்தில் சில நகரங்களில் தொழிலாளர்கள் மத்தியில் சிலரைக் கைது செய்தது; ஒற்றர்களின் தகவல்களையும் கள்ள ''ஆவணங்களையும்'' உபயோகித்துக் கொலோனில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக வழக்குத் தயாரித்தது. இந்த ஆவணங்கள் போலியானவை என்று நிரூபிப்பதற்கும் தன்னுடைய கட்சித் தோழர்களுக்கு உதவி செய்வதற்கும் மார்க்ஸ் தான் எழுதிக் கொண்டிருந்த எல்லாவற்றையும் நிறுத்தி வைத்தார். ஆனல் அவர்கள் வழக்கு நடைபெறத் தொடங்கு முன்னரே தண்டிக்கப்பட்டார்கள். ஏனென்றல் ஆளும் வர்க்கங்களின் நலன்களை ஆதரிக்கின்ற நீதிமன்றம் அது; அவர்களோ உதவியில்லாத புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள். **கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கின் உண்மை உருவம்** என்ற தலைப்பில் மார்க்ஸ் எழுதிய பிரசுரத்தில் பிரஷ்ய அரசாங்கம், போலீஸ் மற்றும் நீதிமன்றத்தின் கீழான தந்திரங்களை அவர் அம்பலப்படுத்தினர். கம்யூ

னிஸ்டுகள் சங்கத்தின் கொலோன் மத்தியக் கமிட்டியின் சில உறுப்பினர்கள் கைது செய்யப் பட்ட பிறகு மார்க்சும் எங்கெல்சும் கண்டத் துடன் வைத்திருந்த தொடர்பு முறிந்தது; ஜெர் மனியில் அந்த ஸ்தாபனம் அநேகமாக இல்லாமற் போயிற்று. 1852 நவம்பரில் மார்க்சின் ஆலோ சனையின் பேரில் கம்யூனிஸ்டுகள் சங்கம் தன்னைக் கலைத்துக் கொண்டதை அறிவித்தது.

எனினும் மார்க்ஸ், எங்கெல்சினால் பயிற்று விக்கப்பட்ட அந்தச் சங்கத்தின் மிகச் சிறந்த உறுப்பினர்கள் புரட்சிகரத் தத்துவத்தைப் பிரச் சாரம் செய்வதைத் தொடர்ந்தார்கள்; எதிர் காலத்தின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு உழைக் கும் மக்களைப் பயிற்றுவிப்பதையும் தயாரிப்பதை யும் தொடர்ந்தார்கள்.

# பிற்போக்குவாதம் ஆட்சி புரிந்த வருடங்கள்

*1848 — 1849*ம் வருடங்களில் நடைபெற்ற புரட்சிகளுக்குப் பிறகு ஐரோப்பாவில் பிற்போக்கு வாதம் நிலவியது. புரட்சிகர ஸ்தாபனங்கள் நொறுக்கப்பட்டு விட்டன; தொழிலாளி வர்க்கத்தின் தலைவர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர் அல்லது நாடு துறந்து போகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். இது மார்க்சின் வாழ்க்கையில் மிகவும் நெருக்கடியான காலம். எதிரிகள் அவரைத் தூற்றினார்கள்; பணக் கவலைகள் அவரை வாட்டின. மாபெரும் சிந்தனையாளரும் புரட்சியாளருமான மார்க்ஸ் வேலை செய்யக் கூடிய பத்திரிகையோ, சஞ்சிகையோ, பதிப்பகமோ, பல்கலைக்கழகமோ ஒன்றுமில்லை. ஆனால் அவருடைய இலட்சியத்தின் நியாயத்தில் அவர் வைத்திருந்த ஆழமான நம்பிக்கை, சமூக வளர்ச்சியின் புறநிலையான விதிகளை விஞ்ஞான முறையில் புரிந்து கொண்டதிலிருந்து உருவான அவருடைய வெல்லற்கரிய நம்பிக்கை, எந்தச் சூழ்நிலையிலும் துவண்டு போகாத அவருடைய அசைக்க முடியாத ஆன்மபலமும் உற்சாகமும் ஒருக்காலும் மார்க்சை விட்டுப் பிரியவில்லை.

இந்த நெருக்கடியான வருடங்களில் அவருடைய தன்னலமற்ற, மேன்மையான நண்பரான எங்கெல்சிடமிருந்து மார்க்ஸ் அதிகமான உதவியையும் ஆதரவையும் பெற்றார். 1850ல் எங்கெல்ஸ் மாஞ்செஸ்டர் நகரத்தில் குடியேறினர்; அங்கே ஒரு அலுவலகத்தில் வேலை செய்தார்; மார்க்ஸ் குடும்பத்தின் வாழ்க்கைச் செலவுகளில் கணிசமான பகுதியை அவர் ஏற்றுக் கொண்டார். இரண்டு நண்பர்களும் இப்படிப் பிரிந்து வாழ நேர்ந்ததைப் பற்றி அடிக்கடி வருத்தமடைந்தார்கள்; அவர்கள் *Neue Rheinische Zeitung*இல் ஒன்ருகப் பணியாற்றிய அற்புதமான நாட்களை நினைத்து ஏங்கினர்கள். ''நாம் இனிமேல் சேர்ந்து வாழ முடியாது, கூட்டாக உழைக்க முடியாது, ஒன்றுகூடிச் சிரிக்க முடியாது என்பதை நினைத்தாலே பைத்தியம் ஏற்படுகிறது...''* என்று மார்க்ஸ் எங்கெல்சுக்கு எழுதினர்.

அவர்கள் அநேகமாக நாள் தோறும் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொண்டார்கள். [illegible]ன் இக்கடிதங்களின் மாபெரும் மதிப்பைச் [illegible] காட்டி அவற்றின் அடிப்படையான உள்ள[illegible]க்கத்தைப் பின்வருமாறு வரையறுத்தார்: ''இக்கடிதங்களின் குவிமையத்தை, இவற்றில் வெளியிடப்பட்டிருக்கின்ற, விவாதிக்கப்படுகின்ற கருத்துக்களின் மொத்தத் தொகுதியும் இணைகின்ற மையப் புள்ளியை ஒரு வார்த்தையில் வரையறுத்துக் கூறலாமென்ருல் இயக்கவியல் என்பதே

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 265 (ருஷ்ய மொழியில்).

அந்த வார்த்தையாக இருக்கும். எல்லா அரசியல் பொருளாதாரத்தையும் அதன் அடிப்படைகளி லிருந்து திருத்தியமைப்பதற்குப் பொருள்முதல் வாத இயக்கவியலைக் கையாள்வது, வரலாறு, இயற்கை விஞ்ஞானம், தத்துவஞானம் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் கொள்கைக்கும் செயல் தந்திரத்துக்கும் அதைக் கையாள்வது—மார்க்சும் எங்கெல்சும் கொண்டிருந்த அக்கறை இதுவே; எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் கொடுத்த மிக அவசியமான, புதிய பங்களிப்பு இதுவே; புரட்சிகரச் சிந்தனையின் வரலாற்றில் அவர்கள் சாதித்த சிறப்பான முன்னேற்றமும் இதுவே."*

அது அரசியல் துறையில் தேக்கமான காலம். ஆனால் மார்க்ஸ் தொழில் முறைப் புரட்சியாளர் களைப் பயிற்றுவிக்கும் பணியில் தொடர்ந்து ஈடு பட்டார்; இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் பிரான்சி லும் அமெரிக்காவிலும் மற்றும் இதர நாடு களிலும் தன் ஆதரவாளர்களோடு இடைவிடாமல் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்.

இப்பொழுது மார்க்ஸ் தன்னுடைய முழு நேரத்தையும் தன் போதனையை மேலும் விரித் துரைப்பதில் ஈடுபடுத்த முடிந்தது. அவர் நிகழ் கால வரலாற்றின் அனுபவத்தைப் பொதுமைப் படுத்தினார்; அறிவின் எல்லாத் துறைகளிலும் செய்யப்பட்ட ஒவ்வொரு முன்னேற்றத்தையும் நுணுக்கமாக ஆராய்ந்தார்; விஞ்ஞானத்தின் ஒவ்வொரு புதிய சாதனையையும் விமர்சன ரீதி யாகக் கிரகித்துக் கொண்டார். இயற்கை விஞ்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 19, p. 554.

ஞானத்தில் சில முக்கியமான கண்டுபிடிப்புகளை, குறிப்பாக சார்ல்ஸ் டார்வின் எழுதிய **உயிரினங்களின் தோற்றம்** என்ற புத்தகத்தின் முக்கியத்துவத்தை அவர் நுண்ணறிவுடன் போற்றினார். ''இப்புத்தகம் நம் தத்துவத்துக்கு ஒரு இயற்கை-வரலாற்று அடிப்படையைக் கொடுக்கிறது''* என்று அவர் எங்கெல்சுக்கு எழுதினார். அவர் முன் போலவே வெவ்வேறு காலங்கள் மற்றும் தேசிய இனங்களின் வரலாறுகளைப் பற்றி மிகவும் அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டார், பல முக்கியமான தத்துவப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகளைக் கண்டுபிடித்தார்.

எனினும் ஐம்பதுக்களிலும் அறுபதுக்களிலும் மார்க்ஸ் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றியே முக்கியமான விஞ்ஞான ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருந்தார். 1848க்கு முன்பு அவர் பிரதானமாகத் தத்துவஞானப் பிரச்சினைகளில், விஞ்ஞானக் கம்யூனிசத்தின் தத்துவஞான அடிப்படைகளை வரையறுப்பதில் ஈடுபட்டார்; 1848—1849ம் வருடங்களில் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கருத்துக்கள், போர்த்தந்திரம் மற்றும் செயல்தந்திரத்தை விரித்துரைத்தார்; ஐம்பதுக்களிலும் அறுபதுக்களிலும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

நாடு துறந்து வந்திருப்பவருடைய வாழ்க்கையின் துன்பங்கள் எப்படியிருந்தாலும் முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய்வதற்கு இங்கிலாந்தை—அதுதான் அக்காலத்தில் அதிகமான

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 30, பக்கம் 102 (ருஷ்ய மொழியில்).

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு—மிகச் சிறந்த நாடாக மார்க்ஸ் கண்டார். பிரிட்டிஷ் மியூசியத்தின் நூல்நிலையத்தில் தன்னுடைய ஆராய்ச்சிக்கு உதவக் கூடிய ஏராளமான நூல்கள் இருப்பதை மார்க்ஸ் கண்டார்; அவர் அநேகமாக நாள் தோறும் காலையில் 9 மணியிலிருந்து மாலையில் 7 மணி வரை அந்த நூல்நிலையத்தில் படித்தார். அவர் மிகவும் அதிகமான விஞ்ஞான நேர்மையைக் கொண்டவர்; தன்னைப் பற்றிச் சிறிதும் இரக்கமில்லாத விமர்சன அணுகுமுறையைக் கடைப்பிடித்தவர். எனவே அவர் மலையளவுக்கு ஏராளமான விவரங்களைத் திரட்டினார்; புதியதாக ஒரு விவரம் கிடைக்கும் பொழுது பழைய பிரச்னையை மறுபடியும் மறுபடியும் ஆராய்ந்தார். பொருளாதார ஆராய்ச்சிகளின் தொடர்பாக அவர் தொழில்நுட்பவியல் வரலாறு, விவசாய இரசாயனம், புவி இயல், கணிதம் மற்றும் இதர துறைகளைச் சேர்ந்த நூல்களையும் படித்தார்.

மார்க்ஸ் மூன்று தொகுதிகளைக் கொண்ட இப்புத்தகத்தை 1851க்குள் எழுதி முடிக்க உத்தேசித்தார். ஆனால் ஆராய்ச்சியாளர் என்ற முறையில் அவர் எடுத்துக்கொண்ட கடுமையான முயற்சிகளும் அவர் குடும்பம் அனுபவித்த வறுமையும் அவர் இத்திட்டத்தை நிறைவேற்றுவதைத் தடுத்தன. எங்கெல்ஸ் சாதாரண அலுவலராகப் பணிபுரிந்த காலத்தில் குறைவான ஊதியமே பெற்றார்; அவரால் மார்க்சுக்கு அதிகமான உதவி செய்ய முடியவில்லை. மார்க்ஸ் தன்னுடைய ஒரே ஒரு நல்ல கோட்டையும் சூட்டையும் அடிக்கடி அடமானம் வைக்க வேண்டிய அவசியமேற்பட்டது;

அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவர் தன்னைப் பற்றி ''வீட்டுச் சிறையிலிருப்பதாகக்'' குறிப்பிடு வார். அவர் குடும்பம் பல வாரங்கள் வெறும் ரொட்டியும் உருளைக்கிழங்கும் மட்டுமே சாப்பிட்ட துண்டு.

மார்க்சும் அவர் மனைவியும் லண்டனில் வசிக்கத் தொடங்கிய ஆரம்ப வருடங்களில் அவர் களுடைய மூன்று குழந்தைகள் மரணமடைந்தன. அவர்களுடைய ஒரே மகனை எட்கார் (அந்த எட்டு வயதுப் பையனைக் குடும்பத்தில் மூஷ் என்று செல்லமாகக் கூப்பிடுவார்கள்) மரணம டைந்த சோகத்தை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மகனுடைய சவ அடக்கத்துக்குப் பிறகு மார்க்ஸ் எங்கெல்சுக்குப் பின்வருமாறு எழுதினார்:

''நான் பல துன்பங்களுக்கு ஆளாகியிருக் கிறேன்; ஆனால் உண்மையான துன்பம் என்றால் என்ன என்பதை இப்பொழுதுதான் அறிந்தேன்.... கடும் வேதனையை அனுபவித்த இந்த நாட்களில் உங்களையும் உங்கள் நட்பையும் பற்றிய நினைப்பும் இந்த உலகத்தில் நாம் இருவரும் உபயோகமுள்ள ஏதாவதொன்றைச் செய்வதற்கு இன்னமும் முடி யும் என்ற நம்பிக்கையும் எனக்குத் துணிவைக் கொடுத்தன.''*

ஆனால் மார்க்சின் சொந்த வாழ்க்கை துன் பமும் வருத்தமும் மட்டுமே நிறைந்ததல்ல. மார்க்சின் குடும்பம் மிகவும் ஆனந்தமான குடும்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 371 (ருஷ்ய மொழியில்).

பம். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் மிகவும் நேசித்தனர். மார்க்சின் மனைவியான ஜென்னி ''கணவனுடைய வாழ்க்கையையும் உழைப்பையும் போராட்டத்தையும் வெறுமளவில் பகிர்ந்து கொண்ட பெண்ணல்ல, அவள் இம்மூன்றிலும் மிகவும் முழுமையான உணர்வுடனும் முழுப் பரவசத்துடனும் சுறுசுறுப்புடனும் ஈடுபட்டாள்''*. காதலும் நட்பும் அக்குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களையும் ஆனந்தமான குடும்பமாக இணைத்தன. மாவ்ர் (மார்க்சின் கறுப்பு முடியின் காரணமாக அவருடைய நண்பர்களும் உறவினர்களும் அவரை இப்பெயரில் அன்பாக அழைத்தனர்) குழந்தைகளுக்குச் சிறந்த நண்பராக இருந்தார். அவருடைய பெண் குழந்தைகளான ஜென்னியும் லௌராவும் எலியனோராவும் (முறையே 1844, 1845 மற்றும் 1851ல் பிறந்தனர்) வளர்ச்சியடைந்து கொண்டிருந்த பொழுது அவர் மனித குலத்தின் பண்பாட்டுச் செல்வத்தைப் பற்றி அவர்களிடம் எடுத்துக் கூறுவார். மார்க்ஸ் சிறப்பான இலக்கிய அறிவு உடையவர்; ஹோமர், எஷ்கிலஸ், ஷேக்ஸ்பியர், ஃபீல்டிங், டான்டே, செர்வான்டெஸ், டிட்ரோ மற்றும் பல்சாக் அவர் மிகவும் விரும்பிய எழுத்தாளர்களாவர். அவர் ஆயிரத்தொரு இரவுகள், நீபுலுங்சரிதம், ஹோமர் மற்றும் ஷேக்ஸ்பியரின் பெரும்பான்மையான நாடகங்களைத் தன் குழந்தைகளிடம் படித்துக் காட்டுவார் (அந்தக் குடும்பத்தில் எல்லோரும் ஷேக்ஸ்பியரை மிகவும் ரசிப்பார்கள்). ''மனித

* அதே நூல், தொகுதி 19, பக்கம் 302.

இயல்பியல் பற்றிப் படித்தறிந்தவர்களுக்கு இத் தகைய போராட்டக்காரராக இருக்கும் இந்த மனிதர் அதே சமயத்தில் இத்தனை கருணை மிகுந்தவராக, கனிவு மிகுந்தவராக இருப்பது விசித்திரமாகத் தெரியாது. அவர் அத்தனை ஆழ மாக அன்பு செலுத்தும் காரணத்தினால்தான் இவ்வளவு கடுமையாக அவரால் பகைக்கவும் முடிகிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்வார் கள். அவரது கடுமையான பேனா டான்டேயைப் போல ஒரு ஆத்மாவை நரகத்தில் நிச்சயமாகச் சிறைப்படுத்த முடியும் என்றால் அதற்குக் காரணம் அவர் உண்மையாகவும் மென்மையாகவும் இருந் ததுதான். அவரது கூர்மையான நையாண்டி ஒரு அரிக்கும் அமிலம் போலக் கடிக்கும் என்றால் இதே நகைச்சுவை தொல்லையிலும் துன்பத்திலும் இருப்போருக்குச் சுகம் தரும் மருந்தாகவும் இருந் தது''* என்று எலியனோரா மார்க்ஸ் பிற்காலத் தில் எழுதினாள்.

மார்க்சின் வீட்டுக்கு அடிக்கடி வந்தவர்கள் அவர்களுடைய குடும்பப் பொறுப்பாளராகவும் அக்குடும்பத்தில் ஒரு உறுப்பினராகவும் இருந்து அவர்களுடைய இன்ப, துன்பங்கள் அனைத்தையும் பகிர்ந்து கொண்ட எலேன் தேமுத்தைப் பற்றி மிகவும் அன்பான நினைவுகளைக் கொண்டிருந்தனர். மார்க்சுக்கும் அவருடைய மனைவிக்கும் விசுவாச மான நண்பர்கள் பலர் இருந்தனர்; அவர்களுடைய உறவும் நட்பும் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. இந்த நண்பர்கள் குழுவில் மிகவும்

---

* மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக்குறிப்புகள், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1973, பக்கம் 376.

நெருக்கமானவராக எங்கெல்ஸ் எப்பொழுதும் இருந்தார்.

அமெரிக்காவில் பிரபலமான, முற்போக்கான கருத்துக்களைக் கொண்ட செய்தித்தாளாகிய *New York Daily Tribune* (''நியூயார்க் தினசரிப் பிரசங்கி'') ஐரோப்பிய நிருபர் பொறுப்பை ஏற்கும்படி 1851 ஆகஸ்டில் மார்க்சைக் கேட்டுக் கொண்ட பொழுது அவர் இசைந்தார். ஆனால் அப்பொழுது மார்க்ஸ் அரசியல் பொருளாதார ஆராய்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தபடியால் ஜெர்மனியைப் பற்றி இப்பத்திரிகைக்குத் தொடர் கட்டுரைகள் எழுதும்படி எங்கெல்சிடம் கூறினர். எனவே எங்கெல்சின் குறிப்பிடத்தக்க நூலாகிய ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் *New York Daily Tribune*இல் அச்சிடப்பட்டது. இதற்குப் பிறகும், மார்க்ஸ் *Tribune* நிருபராக இருந்த பத்து வருட காலத்தில் எங்கெல்ஸ் அவருக்காகக் கட்டுரைகள் எழுதி உதவுவது வழக்கம்; அதிலும் இராணுவப் பிரச்சினைகளைப் பற்றி அவர் இப்படி உதவி செய்வார். மார்க்ஸ் எங்கெல்சைத் தன்னுடைய ''மாஞ்செஸ்டர் யுத்த அமைச்சரவை'' என்று கூறுவதுண்டு; அவர் எங்கெல்சிடம் முழு நம்பிக்கை வைத்துப் பயன்படுத்திக் கொண்டார். எனினும் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவதற்காக மார்க்ஸ் அதிக நேரத்தைச் செலவிட்டார். ஏனென்ருல் அவருடைய கட்டுரைகள் முற்றிலும் விஞ்ஞான பூர்வமாக இருந்தன; எழுதப்பட்ட ஒவ்வொரு பிரச்சினையையும் முற்றிலும் ஆராய்ச்சி செய்வது அவருக்கு அவசியமாக இருந்தது. அவருடைய இலக்கிய வாழ்க்கையின் தொடக்

கத்தில் அவர் அறிவித்த கொள்கைக்கு அவர் விசுவாசமாக நடந்து கொண்டார்: ''ஒரு எழுத்தாளன் தன்னுடைய வாழ்க்கைக்காகவும் எழுதுவதற்காகவும் பணம் சேர்க்க வேண்டியது அவசியமே, ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் அவர் பணம் சேர்ப்பதற்காக வாழ்வதோ, எழுதுவதோ கூடாது.''*

மார்க்ஸ் *Tribune* உக்கு எழுதியது ஓரளவுக்குப் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது. இந்தியாவையும் சீனவையும் பற்றி, ஸ்பெயினில் நடைபெற்ற புரட்சி மற்றும் அமெரிக்காவில் உள்நாட்டு யுத்தத்தைப் பற்றி அவர் எழுதிய எண்ணற்ற கட்டுரைகள் பிற்போக்குவாதத்துக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக ஒவ்வொரு முற்போக்கான புரட்சிகரப் போராட்டத்தையும் ஆதரிக்கின்ற, புரட்சியின் சக்திகளைப் பன்மடங்கு பெருக்கி முதலாளித்துவ அடிமைத் தனத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்கத்தின் எதிர்காலப் போராட்டங்களில் இன்னும் அதிகச் சிறப்பான நிலைமைகளைப் படைக்கின்ற ஒவ்வொரு ஜனநாயகப் பொதுஜன இயக்கத்துக்கும் உதவி செய்கின்ற ஒரே விருப்பத்தில் தோய்ந்திருக்கின்றன. பிரிட்டனுடைய பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் அரசியல் அமைப்பைப் பற்றி மார்க்ஸ் சில கட்டுரைகளை எழுதினார். ஆங்கில அரசியல் வாழ்க்கையில் நிறைந்திருந்த போலித்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 1, பக்கம் 76 (ருஷ்ய மொழியில்).

தனத்தையும் மோசடியையும் சொத்துடைமை வர்க்கத்தினர் நாடாளுமன்றத்தில் சாதுவான பெரும்பான்மையைப் பெறுவதற்கு உதவுகின்ற ஊழலான, பயமுறுத்துகின்ற அமைப்பையும் அவர் தீவிரமாக அம்பலப்படுத்தினர்.

மார்க்ஸ் ஆங்கிலத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை நுணுக்கமாகக் கவனித்தார். இந்த இயக்கத்தைப் புதிய, சோஷலிஸ்டு அடிப்படைகளில் மறுபடியும் நிர்மாணிப்பதற்கு சார்ட்டிச இடதுசாரிப் பிரிவின் தலைவர்களான ஜார்ஜ் கார்னிக்கும் ஏர்னெஸ்டு ஜோன்சுக்கும் உதவி செய்ய மார்க்சும் எங்கெல்சும் முயற்சி செய்தார்கள். ஜோன்ஸ் *Notes to the People* (''மக்களுக்கான குறிப்புகள்''), *The People's Paper* (''மக்கள் பத்திரிகை'') என்ற இரு செய்தித்தாள்களை நடத்தி வந்தார்; மார்க்ஸ் இப்பத்திரிகைகளில் கட்டுரை எழுதியதுடன் அவற்றை வெளியிடுவதிலும் ஜோன்சுக்கு உதவி செய்தார். ஆனல் அன்றைய நிலைமைகள் சார்ட்டிசத்துக்குப் புத்துயிரளிப்பதற்குச் சாதகமாக இருக்கவில்லை. 1848–1849ம் வருடப் புரட்சிகள் தோல்வியடைந்த பிறகு ஏற்பட்ட பிற்போக்குவாதத்தின் தாக்குதல் என்ற பொதுக் காரணியுடன் சேர்த்து பிரிட்டனில் புரட்சிகர இயக்கத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்திய விசேஷக் காரணிகளும் இருந்தன. மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டியதைப் போல, அக்காலத்தில் பிரிட்டன் கொண்டிருந்த தொழில் துறை மற்றும் காலனி ஏகபோகத்தின் விளைவாக அதன் முதலாளிகளுக்கு மிக அதிகமான மிகை லாபம் கிடைத்தது; அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின்

மேல்தட்டினரை விலைக்கு வாங்குவதற்கு அதில் ஒரு பகுதியைப் பயன்படுத்தினார்கள். இக்கொள்கையின் விளைவாக பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தில் அதிகத் தொழில்நுட்பத் தகுதி கொண்ட பிரிவினர் வர்க்கப் போராட்டம் என்ற நேரான, அகன்ற பாதையைக் கைவிட்டனர்; முதலாளித்துவத்தின் சுற்றுவட்டத்துக்குள் குறைவான சலுகைகளுக்காகத் தனித்தனியாகப் போராடுதல் என்ற பாதையைக் கடைப்பிடித்தனர்.

இந்தியாவில் பெருந்திரளான மக்களுக்கு ஏழ்மையையும் பட்டினித் துன்பத்தையும் ஏற்படுத்திய பிரிட்டிஷ் காலனியாதிக்கக் கொள்கையை மார்க்ஸ் கண்டனம் செய்தார். 1857ல் இந்தியாவில் தேசிய விடுதலைக்காக எழுச்சி ஏற்பட்ட பொழுது மார்க்ஸ் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக எழுதினார். பிரிட்டிஷ் காலனியாதிக்கக் கொள்கையை ஆராய்ந்த மார்க்ஸ், பிரிட்டனில் பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வருகின்ற வரையிலும் அல்லது காலனியாதிக்க நுகத்தடியை நிரந்தரமாகத் தூக்கி எறிவதற்குப் போதுமான பலத்தை இந்தியர்கள் பெறுகின்ற வரையிலும் இந்தியாவின் வறுமையையும் துன்பத்தையும் அகற்ற முடியாது என்று முடிவு செய்தார்.

ஆங்கில-சீன யுத்தங்களைப் பற்றியும் டாய்பிங் கலகத்தைப் பற்றியும் மார்க்ஸ் எழுதிய கட்டுரைகள் நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடுகின்ற பெருந்திரளான மக்களிடம் இதே அனுதாபத்தைக் கொண்டிருக்கின்றன.

ஸ்பெயினில் 1854—1856ம் வருடங்களில் நடைபெற்ற புரட்சிகரமான சம்பவங்களைப் பற்றி

மார்க்ஸ் தொடர் கட்டுரைகளை எழுதினர்; அவர் அந்த நாட்டு வரலாற்றைச் சுருக்கிக் கூறி அங்கே யுத்தம் வெடித்ததற்குரிய காரணங்களையும் அதன் தன்மையையும் விளக்கினர்.

1857ம் வருடத்தில் தொடங்கிய உலகப் பொருளாதார நெருக்கடியும் ஐரோப்பாவில் முக்கியமான அரசியல் சம்பவங்கள் நடைபெறப் போகின்றன என்ற உணர்ச்சியும் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளை வேகமாக முடிக்கும்படி மார்க்சைத் தூண்டின. **Grundrisse der Kritik der politischen Ökonomie** (''அரசியல் பொருளாதார விமர்சனத்தின் அடிப்படைக் கூறுகள்'') என்ற தலைப்பில் அவர் அப்பொழுது எழுதிய நூல் 1939—1941ல் தான் முதல் தடவையாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஆதரவிலுள்ள மார்க்சிய-லெனினிய ஆய்வுக் கழகத்தினல் வெளியிடப்பட்டது; இது அவர் எழுதிய மூல மொழியில் வெளியிடப்பட்டது. மார்க்சின் பொருளாதாரத் தத்துவத்தின் வளர்ச்சியில் மற்றும் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தைப் பற்றி அவருடைய விமர்சனத்தில் மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தை இந்நூல் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பின்னர் மூலதனத்தில் மூலச்சிறப்புடன் வகுத்துரைக்கப்பட்ட சில முக்கியமான தத்துவ முடிவுரைகள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. மார்க்ஸ் உபரி மதிப்பு பற்றித் தன்னுடைய போதனையை—அதன் பொதுவான உருவரையில்—இந்நூலில்தான் முதன்முதலாக எடுத்துரைக்கிருர். இம்மாபெரும் கண்டுபிடிப்பைப் பற்றி எங்கெல்ஸ்

பின்வருமாறு எழுதினார்: ''மார்க்ஸ் உபரி மதிப்பு பற்றித் தன்னுடைய தத்துவத்தை ஐம்பதுக்களில் தானாகவே உருவாக்கினார்; தன்னுடைய முடிவுகளைப் பற்றித் தனக்கு முழு உறுதி ஏற்படுகின்ற வரை அதைப் பற்றி எதுவும் வெளியிட மாட்டேன் என்று அவர் பிடிவாதமாக இருந்தார்''*.

எதிர்கால கம்யூனிஸ்டுச் சமூகத்தைப் பற்றியும் அந்தச் சமூகத்தில் பொருளாயத மற்றும் ஆன்மிக சக்திகள் முன் எப்போதுமில்லாத வளர்ச்சி அடைவதைப் பற்றியும் தத்துவ ரீதியில் முக்கியமான சிந்தனைகள் இந்த ஆராய்ச்சி நூலில் இடம் பெற்றிருக்கின்றன. இந்நூலின் அறிமுகம் பூர்த்தியடையாத நகலாகவே அகப்பட்டிருக்கிறது; மார்க்ஸ் இதில் அரசியல் பொருளாதாரத்தின் பொருளையும் முறையையும் பற்றி எழுதியிருப்பதோடு வேறு பல முக்கியமான பிரச்சினைகளையும் எழுப்புகிறார்.

மார்க்ஸ் இதை அச்சிடக் கொடுப்பதற்காகத் தன் கையெழுத்துப் பிரதி முழுவதையுமே மறுபடியும் எழுதினார். அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரையின் முதல் பதிப்பு 1859 ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தில் பணத்தைப் பற்றியும் மதிப்புத் தத்துவத்தையும் அவர் முறைப்படியாக எடுத்துரைக்கும் பகுதிகள் உள்ளன.


இப்புத்தகத்தின் முன்னுரை மிகப் பிரபலமானது; அதில் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 39, பக்கம் 22 (ருஷ்ய மொழியில்).

தைப் பற்றி மார்க்சின் மேதாவிலாசத்தைக் கொண்ட சுருக்கமான, மிகத் தெளிவான சூத்திரம் இடம் பெற்றிருக்கிறது.

''மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டவட்டமான உறவுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும், அதாவது அவர்களுடைய உற்பத்தியின் பொருளாயதச் சக்திகளின் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும். இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டடம் எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன. பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது. மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பதில்லை; அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர்களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது. வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் சமூகத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் அன்றைக்கிருக்கின்ற உற்பத்தி உறவுகளோடு—அல்லது அவற்றைச் சட்ட பூர்வமான வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற சொத்துரிமை உறவுகளோடு—இது வரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் மோது





கார்ல் மார்க்ஸ் பிறந்த நகரமான திரிர்



கார்ல் மார்க்ஸ் பிறந்த திரிரிலுள்ள வீடு



கார்ல் மார்க்சின் மனைவி ஜென்னி
போன் வெஸ்ட்பாலன்


# Manifest

der

# Kommunistischen Partei.

Veröffentlicht im Februar 1848.

Proletarier aller Länder vereinigt euch.

London.

Gedruckt in der Office der „Bildungs-Gesellschaft für Arbeiter"
von J. E. Burghard,
46, Liverpool Street, Bishopsgate.


கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்
மேலட்டை. 1848



கார்ல் மார்க்ஸ். 1861




பிரெடெரிக் எங்கெல்ஸ். *1864*



கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் கார்ல் மார்க்சின் புதல்வியருடன்: ஜென்னி, எலியனோரா, லௌரா. *1864*



கார்ல் மார்க்ஸ் தன்னுடைய முதல் மகள் ஜென்னியுடன். 1869



கார்ல் மார்க்ஸ். 1867



பிரெடெரிக் எங்கெல்ஸ். 1870க்களின் கடைசி

# Das Kapital.

## Kritik der politischen Oekonomie.

Von

**Karl Marx.**

Erster Band.


**Buch I: Der Produktionsprocess des Kapitals.**

Das Recht der Uebersetzung wird vorbehalten

Hamburg
Verlag von Otto Meissner.
1867.

New-York: L. W. Schmidt. 24 Barclay-Street.

மூலதனத்தின் முதல் தொகுதியின் ஜெர்மன் மொழியில் முதல் பதிப்பு



கார்ல் மார்க்ஸ், 1872



ஹைகேட் இடுகாட்டில் கார்ல் மார்க்சின் சமாதி

கின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பதிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறி விடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது.''*

ஒன்றுக்கொன்று விரோதமான வர்க்கங்களை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்புகளில் கடைசியானது முதலாளித்துவம். அந்த அமைப்புடன் மனித சமூகத்தின் வரலாற்றுக்கு முந்திய கட்டம் முடிவடைகிறது என்கிறார் மார்க்ஸ்.

இப்புத்தகம் வெளியிடப்பட்டதும் சில முடிவுகளைத் தனக்குத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கும் அவற்றுக்கு மேலும் இறுதியான ஒரு தன்மையைக் கொடுப்பதற்கும் இன்னும் அதிகமான ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டுமென்று மார்க்ஸ் முடிவு செய்தார். ஆனால் 1859ல் நடைபெற்ற சர்வதேச முக்கியத்துவம் நிறைந்த சம்பவங்கள் அவர் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கவில்லை.

* கா. மார்க்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை, பக்கங்கள் 9–10.

# முதலாளித்துவ-ஜனநாயக மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் புதிய எழுச்சி

மார்க்ஸ் முன்னறிவித்ததைப் போல 1857ல் ஆரம்பமான பொருளாதார நெருக்கடி தீவிர மான அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியது. 1848—1849ம் வருடங்களின் புரட்சிகரமான சண்டை களில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் புதிய சக்தி யோடு மறுபடியும் மேலே எழும்பி வந்தன. இத் தாலியை ஒன்றுபடுத்துவதற்காகவும் ஆஸ்திரியாவின் நுகத்தடியிலிருந்து அதன் சுதந்திரத்துக்காகவும் மறுபடியும் வெடித்த போராட்டம், பிரிவினைக்கு உள்ளாகிய ஜெர்மனியை ஒன்றுபடுத்துவதற்கான இயக்கம் ஆகிய பிரச்சினைகளில் மார்க்ஸ் தன் முழு கவனத்தையும் செலுத்தினர். 1848ல் செய் ததைப் போலவே இப்பொழுதும் ''முதலாளித் துவ-ஜனநாயக இயக்கத்தின் வீச்சை விஸ்தரித்து விரிவான, அதிகச் 'சாமான்யரான' பெருந்திர ளான மக்களை—பொதுவாகக் குட்டி முதலாளி வர்க்கத்தினரையும், குறிப்பாக விவசாய வர்க்கத் தையும், கடைசியாக மொத்தமாக ஏழை வர்க்கத் தினரையும்—அதில் பங்கெடுக்கச் செய்து அதை

உச்ச கட்டத்துக்குக் கொண்டு போவதில்''* அவர் பிரதானமாக கவனம் செலுத்தினர். அவர் இந்தச் சமயத்தில் எழுதிய எல்லாக் கட்டுரை களிலும்—அவை இத்தாலி அல்லது ஜெர்மனி, போலந்து அல்லது ருஷ்யப் பிரச்சினைகளைப் பற்றி எழுதப்பட்டிருந்த போதிலும்—இந்த முயற்சி நெடுகிலும் காணப்படுகிறது.

1859ம் வருட ஆஸ்திரிய-இத்தாலி-பிரெஞ்சு யுத்தத்தின் போது ''இத்தாலியின் விடுதலை'' என்ற கோஷத்துடன் சல்லாபம் செய்வதன் மூலம் தன்னுடைய சொந்தப் பரம்பரையை ஏற்படுத்து கின்ற அக்கறைகளை மூடி மறைக்க முயன்ற லூயி போனபார்ட்டை மார்க்ஸ் அம்பலப்படுத் தினர். இத்தாலியின் உண்மையான சுதந்திரமும் ஒற்றுமையும் தேசிய ரீதியில் ஓர் எழுச்சியின் மூலமாகவே சாதிக்கப்பட முடியும் என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டினர்; அத்தகைய எழுச்சியின் விளைவாக மக்கள் எல்லா இத்தாலியின் அரசர்களை யும் விரட்டியடிப்பார்கள், நிலப்பிரபுக்களின் ஆட்சி யிலிருந்தும் ஆஸ்திரியாவின் நுகத்தடியிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொண்டு ஒற்றை, ஜனநாயக அரசை நிறுவுவார்கள். போனபார்ட்டுக்கு ஆதர வாகச் செய்யப்படுகின்ற எந்தப் பிரச்சாரமும் இத்தாலியப் புரட்சிக்கு மட்டுமின்றி ஜெர்மன் புரட்சிக்கும் நேரடியாகத் தீங்கு விளைவிக்கும், ஐரோப்பாவில் பிற்போக்குச் சக்திகளுக்கு ஆதர வாக இருக்கும் என்று அவர் கருதினர். ஆகவே மார்க்ஸ் ஹெர் ஃபோக்ட் என்ற பிரசுரத்தில்

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 148 (ருஷ்ய மொழியில்).

(1860) ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த நாடு துறந்தோர் அணிகளிலிருந்த போன பார்ட்டிஸ்டு ஏஜண்டுகளைக் காரசாரமாகத் தாக்கினுர்.

ஃபிராங்க்ஃபுர்ட் தேசிய சபையில் முன்பு உறுப்பினராக இருந்த கார்ல் ஃபோக்ட் மார்க்ஸை யும் அவருடைய ஆதரவாளர்களையும் பற்றி வெளியிட்ட அவதூறுன கருத்துக்களே இந்தப் பிரசுரத்தை எழுதும்படி மார்க்ஸைத் தூண்டின. தன் எதிரிகள் பத்திரிகைகளில் தன்னைப் பற்றி எழுதுகின்ற அவதூறு களைப் புறக்கணிப்பது அவருடைய பொதுவான பழக்கம். *"Segui il tuo corso, et lascia dir le genti"* (''அவர்கள் தங்கள் விருப்பம் போல எதையும் சொல் லிக் கொள்ளட்டும், நீ உன் வழியே செல்'') என்ற டான்டேயின் பெருமிதம் நிறைந்த வார்த்தைகளை அவர் தன்னுடைய வழி காட்டியாகக் கொண்டிருந் தார். ஆனுல் ஃபோக்டின் அருவருப்பான சோடனை கள் மக்களுடைய பார்வையில் கம்யூனிஸ்டுகளைத் தார்மிக ரீதியில் அழிப்பதை நோக்கமாகக் கொண் டிருந்தன. கட்சியின் கௌரவத்துக்கு ஆபத்தேற் படுகின்ற நேரங்களில் மார்க்ஸ் முற்றிலும் ஈவிரக்க மில்லாதவராக மாறி விடுவார்; தன்னுடைய எதிரிகள் மீது சரியாகக் குறி பார்த்து வன்மை யான அடிகளைக் கொடுப்பார். அவர் ஃபோக்டின் போலியான, பொருளற்ற குற்றச்சாட்டுகளை மறுத் தார்; அவர் ஒரு போனபார்ட்டிஸ்டு ஏஜண்ட் என்று குற்றம் சாட்டினுர். இது பின்னர் ஆவணங் களின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

அப்போது மார்க்சுக்கும் முன்பு டியுஸல்டார்ஃப் ஜனநாயகவாதியாக இருந்த பெர்டினுண்டு லஸ்ஸா

லுக்கும் இடையில் (மார்க்ஸ் அவரை 1848ல் முதல் தடவையாகச் சந்தித்தார்) கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்றின. ஜெர்மனியை எப்படி ஒன்றுபடுத்துவது என்ற மிக முக்கியமான பிரச்சினையில் லஸ்ஸால் மிகவும் தவறான நிலை யெடுத்திருந்தார்.

லஸ்ஸால் எழுதிய இத்தாலியப் போரும் பிரஷ்யாவின் கடமைகளும் என்ற பிரசுரத்தில் ஜெர்மனியை மேலேயிருந்து, அதாவது எதிர்ப்புரட்சி முறையில் ஒன்றுபடுத்த முயற்சிப்பதில் பிரஷ்யாவை ஆதரிப்பதற்குத் தயார் என்று எழுதியிருந்தார். ஆனால் மார்க்ஸ் கீழேயிருந்து, அதாவது ஒரு ஜனநாயகப் புரட்சியின் மூலம் ஜெர்மனியை ஒன்றுபடுத்துவதற்காகப் போராடிக் கொண்டிருந்தார். லஸ்ஸால் அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் செயல்திட்டத்தை அவர் தயாரித்த பொழுது மார்க்சுக்கும் லஸ்ஸாலுக்கும் இடையிலிருந்த கருத்து வேறுபாடுகள் தீவிரமடைந்தன. லஸ்ஸால் சமாதான பூர்வமான, சட்ட பூர்வமான போராட்ட வழிகளை மட்டுமே வலியுறுத்தினர்; பொது வாக்குரிமையை அடைந்துவிட்டால் உழைக்கும் மக்களின் அனைத்துத் துன்பங்களும் மறைந்துவிடும் என்று கருதினர். உற்பத்தியாளர்கள் சங்கங்களை அமைப்பதற்கு பிரஷ்ய அரசு உதவி செய்யும், அதன் மூலம் சுரண்டல் கொடுமையிலிருந்து தங்களை விடுவிக்கும் என்ற ஆபத்தான பிரமையைத் தொழிலாளர்களிடம் லஸ்ஸால் ஏற்படுத்தியிருந்தார். லஸ்ஸால் வர்க்கப் போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள், தொழிற்சங்கங்கள்

ஆகியவற்றை எதிர்த்தார். மார்க்சும் எங்கெல்சும் விவசாயிகளைப் பாட்டாளி வர்க்கத்தின் தோழனுகக் கருதினர்கள்; ஆனல் லஸ்ஸால் விவசாய வர்க்கத்தை ''ஒரு பிற்போக்கான பெருந்திரளாகக்'' கருதினர். பிஸ்மார்க் பொது வாக்குரிமையை ஏற்படுத்தினல் அவருடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கையைத் தொழிலாளி வர்க்கம் ஆதரிக்கும் என்று வாக்குறுதியளித்து பிஸ்மார்குடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். பிஸ்மார்குக்கும் லஸ்ஸாலுக்கும் இடையில் நடைபெற்ற ரகசியப் பேச்சுவார்த்தைகள் அந்தச் சமயத்தில் மார்க்சுக்குத் தெரியாது என்ருலும் கூட பிரஷ்யப் பிற்போக்குவாதத்துடன் லஸ்ஸால் சல்லாபம் செய்வது மார்க்சின் கூரிய பார்வையிலிருந்து தப்ப முடியவில்லை. லஸ்ஸால் அழுத்தமான போனபார்ட்டிசப் போக்குகளைக் கொண்ட ''பிரஷ்ய ராஜசபை ஜனநாயகவாதி'' என்று மார்க்சும் எங்கெல்சும் தங்கள் கடிதங்களில் அவரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

லஸ்ஸால் தொழிலாளர்கள் மத்தியில் தன்னுடைய கிளர்ச்சியைத் தொடங்கிய பொழுது மார்க்சும் எங்கெல்சும் முதலில் பொறுத்திருந்தார்கள்; முதலாளி வர்க்க முற்போக்காளர் கட்சியின் செல்வாக்கிலிருந்து தொழிலாளர்களை விடுவிப்பதில் லஸ்ஸால் ஓரளவுக்கு உபயோகமான பாத்திரத்தை வகித்தபடியால் அவருக்கு எதிராகப் பகிரங்கமாக எதுவும் சொல்லாமலிருந்தார்கள். லஸ்ஸால் மரணமடைந்த பிறகு பிஸ்மார்குடன் அவர் நடத்திய ரகசியப் பேச்சுவார்த்தைகளைப் பற்றித் தெரிந்து கொண்டதும் அது தொழிலாளர் இயக்

கத்துக்குச் செய்த துரோகம் என்று மார்க்சும் எங்கெல்சும் மதிப்பிட்டார்கள்; லஸ்ஸாலியர்களின் ''பிரஷ்ய ராஜாங்க சோஷலிசத்தை'' எதிர்த்து இயக்கத்தைத் தொடங்கினர்கள்.

மார்க்ஸ் இந்தக் காலகட்டத்தில் பிரஷ்யப் பிற்போக்குவாதத்தை அம்பலப்படுத்துவதைத் தொடர்ந்தார். அவர் இந்த இயக்கத்தை *Rheinische Zeitung* நாட்களிலேயே ஆரம்பித்து விட்டார்; குறிப்பாக, 1848–1849ம் வருடப் புரட்சிகளின் போது அதைத் தீவிரப்படுத்தினர். ஆனல் ஜெர்மன் வாசகரிடம் கருத்துக்களைக் கொண்டு போவதற்கு உதவியாக மார்க்சிடம் ஒரு பத்திரிகை இல்லாதது இந்தப் போராட்டத்தை நடத்துவதை மிகவும் கஷ்டமாக்கியது. ஆகவே மார்க்ஸ் லண்டனில் 1859ல் நிறுவப்பட்ட *Das Volk* (''மக்கள்'') என்ற ஜெர்மன் பத்திரிகையை ஆதரித்தார்; அதைக் கம்யூனிஸ்டுப் பிரச்சாரக் கருவியாக மாற்றுவதற்கு முயற்சிகளைச் செய்தார். இப்பத்திரிகை குறைவான காலமே நீடித்தது; மார்க்ஸ் இப்பத்திரிகையில் பிரஷ்யா பின்பற்றி வந்த பிற்போக்குக் கொள்கையைப் பற்றியும் இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் கட்டுரைகளை எழுதினர். மேலும், இந்தப் பிற்போக்கான, இராணுவ வெறி பிடித்த அரசின் நிகழ்காலத்தை மட்டுமின்றி, அதன் கடந்த காலத்தையும், குறிப்பாக போலந்தைப் பற்றி பிரஷ்யா மற்றும் ஜாரிஸ்டு ருஷ்யாவின் கொள்கையையும் விளக்கிக் கூறுகின்ற சில பூர்த்தியடையாத நூல்களையும் மார்க்ஸ் எழுதினர்.

பிரஷ்யாவுக்கும் ஜாரிஸ்டு ருஷ்யாவுக்கும் எதி

ராக போலிஷ் மக்கள் நடத்திய போராட்டம் 1863ம் வருட எழுச்சிக்கு வழி வகுத்தது; அந்தப் போராட்டம் விவசாயப் புரட்சி மற்றும் ஜன நாயகத்துக்கான போராட்டத்துடன் அங்கக ரீதியாக இணைக்கப்பட்டால் மட்டுமே வெற்றி அடைய முடியும் என்று மார்க்ஸ் கருதினர்.

ருஷ்யாவில் ஆரம்பமாகிக் கொண்டிருந்த விவசாயிகளின் இயக்கத்தின் போக்கை மார்க்ஸ் 1850க்களின் இறுதியிலிருந்தே நுணுக்கமாக கவனித்து வந்தார். கிரீமியப் போரில் ருஷ்யாவின் தோல்வி அந்த நாட்டிற்குள் இருந்த ஆழமான முரண்பாடுகள் அனைத்தையும் தீவிரப்படுத்தியது; விவசாயச் சீர்திருத்தத்துக்கு அவசியமான தயாரிப்புகளைச் செய்யும்படி ஜாரிஸ்டு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. பிரபுக்களை உறுப்பினர்களாகக் கொண்ட கமிட்டிகள் தயாரித்த சீர்திருத்த நகல்களை ஆராய்ந்த மார்க்ஸ் ''மேலேயிருந்து வருகின்ற இந்தச் சுதந்திரம்'' விவசாய வர்க்கத்துக்குத் துன்பத்தை மட்டுமே கொடுக்கும் என்று முன்னறிவித்தார். பண்ணையடிமை முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து கொண்டிருந்த ருஷ்ய விவசாயிகள் எதிர்கால ஐரோப்பியப் புரட்சியின் நேச சக்திகள் என்று மார்க்ஸ் கருதினர்.

ருஷ்யாவில் பண்ணையடிமை முறையை எதிர்க்கின்ற இயக்கமும் அடிமை முறைக்கு எதிராக அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தமும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் சம்பவங்கள் என்று மார்க்ஸ் கருதினர். அமெரிக்காவின் உள்நாட்டு யுத்தம் இரண்டு சமூக அமைப்புகளுக்கு—அடிமை முறைச் சமூகம் மற்றும் அதைக்

காட்டிலும் முற்போக்கான முதலாளித்துவ அமைப்பு—இடையில் நடைபெறுகின்ற போராட்டம் என்று அவர் மதிப்பிட்டார். வட பகுதியின் அரசாங்கம் யுத்தத்தை உண்மையிலேயே புரட்சிகரமான முறையில் நடத்தி, அடிமை முறையை அடியோடு ஒழித்து, விவசாயப் பிரச்சினையை விவசாயிகளின் நலன்களுக்குச் சாதகமான முறையில் தீர்த்து, இராணுவத்தில் இருக்கும் தேசத் துரோகமான சக்திகளைக் களையெடுத்து அதைத் திருத்தியமைத்து, தனித்த புரட்சிகர-ஜனநாயகக் கோஷங்களைப் பிரகடனம் செய்தால் மட்டுமே அது வெற்றி அடைய முடியும் என்று அவர் சுட்டிக் காட்டினார். தென் பகுதியின் அடிமை உடைமையாளர்களுக்கு உதவி செய்யாதபடி ஐரோப்பிய அரசாங்கங்களைத் தடுக்க எல்லாவற்றையும் செய்யும்படி அவர் ஐரோப்பியத் தொழிலாளர்களை அறைகூவினார். தென் பகுதியின் அடிமை உடைமையாளர்களுக்கு ஆதரவாகத் தலையிடாதபடி பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் தங்கள் நடவடிக்கையின் மூலம் தடுத்து நிறுத்திய பிரிட்டிஷ் தொழிலாளர்களை அவர் பாராட்டினார். ஐரோப்பியத் தொழிலாளர்கள் மத்தியில் உத்வேகத்தை ஏற்படுத்திய அமெரிக்க உள்நாட்டு யுத்தம் பல வருடங்களாக நிலவிய பிற்போக்குவாதத்தின் பலனாக செயலற்றுப் போன தொழிலாளி வர்க்கத்திடம் மறுபடியும் சுறுசுறுப்பான நடவடிக்கைகளை ஏற்படுத்தும் என்று மார்க்ஸ் கருதினார்.

# ''மூலதனம்''

தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு புதிய எழுச்சி ஏற்படப் போகிறதென்று கருதிய மார்க்ஸ் தான் எழுதிக் கொண்டிருந்த பொருளாதாரப் புத்தகங்களைத் துரிதமாக முடிக்க விரும்பினர். பதினெட்டு மாத இடைவெளிக்குப் பிறகு 1861ல் பொருளாதார ஆராய்ச்சிகளைத் தொடர்ந்த பொழுது அவர் தன்னுடைய புத்தகத்தைத் திருத்தியமைக்க முடிவு செய்தார்; 1859ல் அவர் வெளியிட்டிருந்த அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரைக்குத் தொடர்ச்சியாக இல்லாமல் இப்புத்தகத்தைத் தனி நூலாக வெளியிட விரும்பினர். அதற்கு மூலதனம் என்று பெயர் கொடுத்து அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை என்ற துணைத் தலைப்பைக் கொடுக்கப் போவதாக மார்க்ஸ் 1862ல் கூகல்மனுக்கு எழுதினர்.

அவர் மூலதனத்தை மிகவும் கஷ்டமான நிலைமைகளில் எழுதினர். அமெரிக்க உள்நாட்டு யுத்தம் மார்க்சின் முக்கியமான வருமானத்தை நிறுத்தி விட்டது; அதாவது, அவர் *New York Daily*

*Tribune* உக்கு இனி எழுத முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அவர் குடும்பம் மறுபடியும் மிக மோசமான வறுமைக்கு ஆளாயிற்று. ''எங்கெல்சின் தொடர்ச்சியான, தன்னலமற்ற பண உதவி மட்டும் இல்லையென்றால் மார்க்ஸ் **மூலதனத்தை** எழுதி முடித்திருக்க முடியாதென்பதோடு அவர் தவிர்க்க முடியாதபடி வறுமையினால் நசுக்கப்பட்டிருப்பார்.''*

முதலாவது அகிலம் நிறுவப்பட்ட பொழுது மார்க்ஸ் செய்ய வேண்டிய அரசியல் வேலைகள் ஏராளமாக இருந்தன; ஆகவே அவர் இரவுகளில் கண் விழித்து **மூலதனத்தை** எழுதும்படி நேர்ந்தது. இத்தகைய கடும் உழைப்பினால் அவர் அடிக்கடி நோய்வாய்ப்பட்டார்.

1865ம் வருடத்தின் முடிவில் **மூலதனத்தின்** மூன்று தொகுதிகளின் கைப்படிவ முதல் நகலை எழுதும் பணி முடிந்தது. ஆனால் முதல் தொகுதியை அச்சகத்துக்கு அனுப்பத் தயாரித்த பொழுது மார்க்ஸ் மறுபடியும் அதில் திருத்தங்கள் செய்தார்; சில பகுதிகளைக் குறைக்கத் தொடங்கினார். 1867 ஏப்ரலில் மார்க்ஸ் கையெழுத்துப் பிரதியை ஹாம்பூர்கிலிருந்த பதிப்பாளரிடம் எடுத்துச் சென்றார். 1867 மே 5ந் தேதியில்—தன்னுடைய பிறந்த நாளில்—முதல் புரூஃப்கள் அவருக்குக் கிடைத்தன. இதற்குப் பிந்திய புரூஃப்களை அனுப்புவதில் தாமதங்கள் ஏற்பட்டன; மார்க்சும் அவற்றைத் திருத்திக் கொடுப்பதற்கு

* வி. இ. லெனின், நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 48 (ருஷ்ய மொழியில்).

அதிகமான காலத்தை எடுத்துக் கொண்டார். அவர் தன்னுடைய வாசகத்தில் அதிகமான மாற்றங்களைச் செய்தார், புரூஃப்களை எங்கெல்சுக்கு அனுப்பினார், சில சமயங்களில் எங்கெல்சின் ஆலோசனையின் பேரில் மேலும் மாற்றங்களைச் செய்தார். கடைசி புரூஃப்களான 49வது வரிசை எண் முழு மடித்தாள் திருத்தங்களுடன் 1867 ஆகஸ்ட் 16ல் அச்சிடுபவரிடம் தரப்பட்டது. முதல் தொகுதியின் புரூஃப்களைத் திருத்தும் பணி முடிந்ததும் மார்க்ஸ் எங்கெல்சுக்குப் பின்வருமாறு எழுதினார்: "அப்பாடா! இந்தத் தொகுதியை எழுதி முடித்து விட்டேன். உங்கள் உதவியினால் மட்டுமே இது சாத்தியமாயிற்று. எனக்காக நீங்கள் செய்த தியாகம் இல்லையென்றால் இந்த மூன்று தொகுதிகளுக்கும் தேவைப்பட்ட ஏராளமான வேலையை நான் ஒருபோதும் நிறைவேற்றியிருக்க முடியாது. நன்றிப் பெருக்குடன் உங்களை நெஞ்சாரத் தழுவுகிறேன்!... என் அன்புக்குரிய, அருமை நண்பரே! வாழ்த்துக்கள்."*

மூலதனத்தின் முதல் தொகுதி 1867 செப்டெம்பரில் வெளியிடப்பட்ட பிறகு முதலாவது அகிலத்தின் பணிகள் தீவிரமாக்கப்பட்டது மற்றும் பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தம், பாரிஸ் கம்யூன், முதலிய முக்கியமான சம்பவங்கள் காரணமாக மார்க்ஸ் தன்னுடைய பொருளாதார ஆராய்ச்சிகளை நிறுத்தி வைக்கும்படி நேரிட்டது. எழுபதுக்களின் தொடக்கத்தில்தான் அவர் மறுபடியும் 'மூலதனம் நூல் சம்பந்தப்பட்ட பணிகளைத் தொடர

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, p. 180.

முடிந்தது. முதல் தொகுதியின் இரண்டாவது ஜெர்மன் பதிப்புக்கும் பிரெஞ்சு மொழிபெயர்ப்பைச் சரிபார்ப்பதற்கும் அவர் அதிகமான நேரத்தைச் செலவிட்டார். அடுத்த தொகுதிகளைத் தயாரிப்பது அவர் எதிர்பார்த்ததற்கும் அதிகமான காலத்தை எடுத்துக் கொண்டது. இதற்கு முக்கியமான காரணம் என்ன என்பதை எங்கெல்ஸ் **மூலதனத்தின்** இரண்டாம் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்: ''மார்க்ஸ் தன்னுடைய மாபெரும் பொருளாதாரக் கண்டு பிடிப்புகளை வெளியிடுவதற்கு முன்பு அவற்றை மிகவும் பரிபூரணமான முறையில் விரித்துரைக்க வேண்டும் என்று பாடுபட்டார்; அந்தக் கடும் உழைப்பின் ஈடிணையில்லாத பிழைபடாத் தன்மையையும் கறாரான சுயவிமர்சனத்தையும் நிரூபிப்பதற்கு இரண்டாம் தொகுதிக்கு மார்க்ஸ் விட்டுச் சென்றிருக்கும் கையெழுத்துப் படிவங்களை வெறுமனவில் எடுத்துக் கூறுவது கூடப் போதுமானதே. அவருடைய ஓய்வில்லாத ஆராய்ச்சியின் விளைவாக அவருடைய அறிவுக் களம் மென்மேலும் விரிந்து கொண்டிருந்தது; தன்னுடைய ஆராய்ச்சியைப் பற்றிய முன்வைப்பை—உள்ளடக்கத்திலும் உருவத்திலும்—தன் அறிவுக் களத்துக்கு அவர் தகவமைத்துக் கொள்வதை அவருடைய சுயவிமர்சனம் அபூர்வமாகவே அனுமதித்தது.''*

**மூலதனத்தின்** மூன்றும் தொகுதியில் நிலக் குத்தகையைப் பற்றியுள்ள பகுதி மார்க்ஸ் செய்த ஆழ்மான ஆராய்ச்சிக்கு ஒரு உதாரணமாகும்.

---

* K. Marx, *Capital*, Vol. 2, Progress Publishers, Moscow, 1975, p. 2.

அவர் எழுபதுக்களில் இந்தப் பகுதியை எழுது வதற்காக ருஷ்யாவில் 1861ம் வருடச் சீர்திருத் தத்துக்குப் பிறகு நில உறவுகளைப் பற்றி முழுச் செறிவாக ஆராய்ந்தார். மூலதனத்தின் மூன்றும் தொகுதியின் முன்னுரையில் எங்கெல்ஸ் பின் வருமாறு எழுதினர்: ''ருஷ்யாவில் நிலவுடைமை மற்றும் விவசாய உற்பத்தியாளர்களைச் சுரண்டுவதற் குள்ள பல்வேறுன வடிவங்களின் காரணமாக முதல் தொகுதியில் தொழில் துறை கூலி உழைப்பு சம்பந்தமாக இங்கிலாந்து வகித்த அதே பாத் திரத்தை நிலக் குத்தகை சம்பந்தமாக இந்த நாடு வகிக்கவிருந்தது. இத்திட்டத்தை நிறை வேற்றுகின்ற வாய்ப்பு துரதிர்ஷ்டவசமாக மார்க் சுக்குக் கிடைக்கவில்லை.''*

மூலதனம் நூலின் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது மார்க்ஸ் மரணமடைந் தார். அவர் விட்டுச் சென்ற கையெழுத்துப் படிவங்களை மேலும் செம்மைப்படுத்த வேண்டியிருந் தது. இரண்டாம் மற்றும் மூன்றும் தொகுதிகளை அச்சிடுவதற்குத் தகுந்த முறையில் தயாரிக்கின்ற பொறுப்பை எங்கெல்ஸ் எடுத்துக் கொண்டார். இரண்டாம் தொகுதி 1885இலும் மூன்றும் தொகுதி 1894இலும் வெளியிடப்பட்டன. மூல தனத்தின் இரண்டாம் மற்றும் மூன்றும் தொகுதி கள் மார்க்ஸ், எங்கெல்ஸ் என்ற இரண்டு மாமனி தர்களின் சாதனை என்று லெனின் கூறினர். அரசியல் பொருளாதாரத்தின் முக்கியமான பிரச் சினையாகிய உபரி மதிப்புத் தத்துவத்தை விமர்

---

* K. Marx, *Capital*, Vol. 3, p. 7.

சனப் பகுப்பாய்வு செய்கின்ற நான்காவது தொகுதியுடன் மார்க்சின் மாபெரும் பொருளாதார ஆராய்ச்சி நிறைவு பெற்றிருக்கும். தன்னுடைய நண்பரின் மரணத்துக்குப் பிறகு எங்கெல்ஸ் இக் கையெழுத்துப் பிரதியைத் தனிப் புத்தகமாக, **மூலதனத்தின்** நான்காவது தொகுதியாக வெளியிடத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அவருடைய திட்டம் நிறைவேறவில்லை. எங்கெல்சின் மரணத்துக்குப் பிறகு மட்டுமே கார்ல் காவுத்ஸ்கி **உபரி மதிப்புத் தத்துவம்** என்ற தலைப்பில் *1905—1910* ஆண்டுகளின் போது அத்தொகுதியை வெளியிட்டார்.

காவுத்ஸ்கி பதிப்பித்த வெளியீட்டில் மார்க்சின் கையெழுத்துப் படிவம் ஓரளவுக்கு சுதந்திரமான முறையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஆதரவிலுள்ள மார்க்சிய-லெனினிய ஆய்வுக் கழகம் மார்க்சின் மூலப் படிவத்துக்கு முற்றிலும் ஏற்புடைய முறையில் இத்தொகுதியின் புதிய பதிப்பை *1954—1961*ம் ஆண்டுகளில் வெளியிட்டது. மூல நூல் எழுதப்பட்ட ஜெர்மன் மொழியில் இம்மாதிரியான பதிப்பு பெர்லினில் *1956—1962*ம் ஆண்டுகளில் வெளியாயிற்று.

மாபெரும் விஞ்ஞானியும் புரட்சியாளருமான மார்க்சின் ஆராய்ச்சிகளின் சிகரத்தை **மூலதனம்** குறிக்கிறது. அவருடைய விஞ்ஞானச் சாதனை மிகப் பெரியது, மிகவும் கடினமானது. லஷர்த்ருக்கு எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''விஞ்ஞானத்தை அடைவதற்கு ராஜ பாட்டை எதுவும் கிடையாது; அதன் செங்குத்

தான பாதைகளில் ஏறிச் செல்கின்ற களைப்பைக் கண்டு அச்சமடையாதவர்கள் மட்டுமே அதன் ஒளி, நிறைந்த சிகரங்களை எட்ட முடியும்.''*

மார்க்சின் பொருளாதாரக் கோட்பாடு அரசியல் பொருளாதாரத்தில் ஒரு தீவிரமான திருப்பத்தை, உண்மையான புரட்சியைக் குறித்தது. வளர்ச்சியடைந்த வர்க்கமான, பாட்டாளி வர்க்கத்தின் தத்துவாசிரியரால் மட்டும்தான் ஆட்சியிலிருக்கும் சுரண்டும் வர்க்கங்களின் வரையறைகளுக்கும் தப்பெண்ணங்களுக்கும் கட்டுப்படாமல் முதலாளித்துவ சமூகத்தின் ''உள்ளமைப்பை'', அதன் பொருளாதாரத்தை இந்த உண்மையான விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உட்படுத்தியிருக்க முடியும்.

மார்க்ஸ் முதலாளித்துவ சமூகத்தின் இயக்கத்தின் பொருளாதார விதியைக் கண்டுபிடித்தார்; இந்தச் சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் தேய்வை ஆராய்ந்து வரலாற்று ரீதியில் அதன் குறுகிய, தற்காலிகமான தன்மையை விஞ்ஞான ரீதியில் நிரூபித்தார்.

மார்க்ஸ் தன்னுடைய நூல்களில் முதலாளித்துவ சமூகத்தில் உள்ளுறையாக இருக்கும் சமரசப் படுத்த முடியாத உள்முரண்பாடுகளை வெளிக்காட்டினர்; இந்த முரண்பாடுகளை மொட்டையாக்குவதற்கும் இசைவுபடுத்துவதற்கும் முதலாளி வர்க்க மற்றும் குட்டி முதலாளி வர்க்கச் ''சீர் திருத்தவாதிகள்'' எவ்வளவு முயற்சிகளைச் செய்தாலும் முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சிப்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 25 (ருஷ்ய மொழியில்).

போக்கில் அவை தவிர்க்க முடியாதபடிக் கூர்மை யடையும் என்று நிரூபித்தார்.

முதலாளித்துவம் அதன் வளர்ச்சியின் போது எதிர்கால சோஷலிஸ்டுச் சமூகத்தின் பொருளாயத முன்தேவைகளைப் படைக்கிறது என்று அவர் நிரூபித்தார்; முதலாளித்துவத்தின் மீது வரலாறு விதித்திருக்கும் தண்டனையை நிறைவேற்றக் கூடிய சமூகச் சக்தி பாட்டாளி வர்க்கமே என்பதை அவர் கண்டார்.

மார்க்ஸ் உபரி மதிப்பின் உண்மையான தன்மையை, தொழிலாளர்களின் கூலி கொடுக்கப் படாத உழைப்பை முதலாளி வர்க்கம் ஒதுக்கிக் கொள்வதை அம்பலப்படுத்தி முதலாளித்துவச் சுரண்டலின் பொறியமைப்பை வெளிக்காட்டினர். உபரி மதிப்பு என்பது தொழிலாளியின் உழைப்பு படைத்த மதிப்புக்கும் அவனுடைய உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும், அதாவது தொழிலாளியும் அவன் குடும்பமும் உயிரோடிருப்பதற்கு அவசிய மான பொருள்களின் மதிப்புக்கும் இடையிலுள்ள வேறுபாடாகும். மார்க்சின் உபரி மதிப்பைப் பற்றிய போதனை முதலாளித்துவத்துக்கு ஆதர வாகப் பேசுபவர்கள் ஜாக்கிரதையாக மறைத்த முதலாளித்துவச் சுரண்டலின் இரகசியத்தை, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத் துக்கும் இடையிலுள்ள பகைமையின் பொருளா தார அடிப்படையை வெளிப்படுத்தியது. ''உபரி மதிப்பைப் பற்றிய போதனைதான் மார்க்சின் பொரு ளாதாரத் தத்துவத்துக்கு மூலைக்கல் ஆகும்.''* வர

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 106.

லாற்றுப் பொருள்முதல்வாதத்துக்குப் பிறகு உபரி மதிப்புப் போதனை பாட்டாளி வர்க்கத்தின் மேதாவிலாசம் நிறைந்த தத்துவாசிரியரின் இரண்டாவது அரிய கண்டுபிடிப்பாகும்.

மார்க்ஸ் வகுத்துரைத்த முதலாளித்துவத் திரட்சியின் பொது விதியின்படி, முதலாளித்துவம் வளர்ச்சியடைகின்ற பொழுது அதன் உள்ளுறையாகவுள்ள ஆழமான உள்முரண்பாடுகள் மேலும் கூர்மையடைகின்றன. மென்மேலும் அதிகமான மக்கள் சொத்துடைமை இல்லாத பாட்டாளி வர்க்கத்தினராகின்றார்கள்; மென்மேலும் அதிகமான செல்வம் ஏகபோகமான ஒரு சிறு கோஷ்டியின் கரங்களில் குவிக்கப்படுகிறது. எதிர்கால சோஷலிஸ்டுச் சமூகத்துக்கு அவசியமான பொருளாயத முன்தேவைகள் முதலாளித்துவச் சமூகத்தின் ஆழத்திலேயே உடலெடுக்கின்றன; அதே போல, எல்லா ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலிலிருந்து மனித குலத்தை நிரந்தரமாக விடுவிக்கின்ற, சோஷலிஸ்டுப் புரட்சியை நிறைவேற்றக் கூடிய சமூகச் சக்தியும் பிறக்கிறது.

முதலாளித்துவத் திரட்சியின் வரலாற்றுப் போக்கை மார்க்ஸ் பின்வரும் வார்த்தைகளில் வர்ணிக்கிறார்:

"மூலதன ஏகபோகம் அதனுடன் மற்றும் அதன் கீழ் வளர்ச்சியடைந்த உற்பத்தி முறைக்கு விலங்காகி விடுகிறது. உற்பத்திச் சாதனங்களின் மத்தியப்படுத்துதலும் உழைப்பை சமூகமயமாக்குதலும் அவற்றின் முதலாளித்துவ மேல் ஓட்டுடன் பொருந்த முடியாத ஒரு கட்டத்தைக் கடைசியில் அடைகின்றன. மேல் ஓடு வெடிக்

கிறது. முதலாளித்துவத் தனிச்சொத்துடைமைக்குச் சாவு மணி ஒலிக்கிறது. உடைமை பறித்தோர் உடைமை பறிக்கப்படுகின்றனர்.''*

மூலதனத்தின் முதல் தொகுதியில் மூலதனத்தை உற்பத்தி செய்கின்ற நிகழ்வுப் போக்கு விளக்கப் படுகிறது; இரண்டாம் தொகுதியில் மூலதனச் செலாவணி முறை விளக்கப்படுகிறது. இவ்விரண்டு நிகழ்வுப் போக்குகளின் ஒருமை மற்றும் உற்பத்தி யின் தீர்மானமான பாத்திரத்தை வலியுறுத்தி மார்க்ஸ் மூலதனத்தை அதன் இயக்கத்தில் ஆராய் கிறார்; பணம், உற்பத்தி, பண்டம் என்ற மூலதனத் தின் முக்கியமான வடிவங்களின் செலாவணியைப் பகுப்பாய்வு செய்கிறார். முதலாளித்துவத்தின் கீழ் சாதாரண, விரிவடைந்த ஆகிய இரண்டு புனருற்பத்திகளின் பகுப்பாய்வு இரண்டாம் தொகுதியின் முக்கியமான பகுதியாகும். முதலாளித் துவச் சமூகத்தின் சமரசப்படுத்த முடியாத முரண் பாடுகளில் முக்கியமானது உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் ஒதுக்கீட்டு முறையின் தனியார்-மூலதன வடிவத்துக்கும் இடையிலேற்படும் முரண் பாடாகும்; இதைச் சுட்டிக் காட்டி விட்டு உற் பத்தி அராஜகம், நெருக்கடிகள் மற்றும் வேலை யில்லாத் திண்டாட்டம் முதலாளித்துவ அமைப் பில் தவிர்க்க முடியாதபடி ஏற்படும் என்று மார்க்ஸ் நிரூபிக்கிறார்.

மூலதனத்தின் மூன்றும் தொகுதி முதலாளித் துவ உற்பத்தி நிகழ்வுப் போக்கை மொத்தமாக எடுத்துக் கொண்டு ஆராய்கிறது. ஒரு பாக்டரி

* K. Marx, *Capital*, Vol. 1, p. 763.

உடைமையாளரின் தொழில் துறை லாபம், ஒரு வணிகரின் வர்த்தக லாபம், வட்டிக்கடைக்காரர் மற்றும் வங்கிக்காரர் வசூலிக்கும் வட்டி, நில வுடைமையாளருடைய வருமானம் ஆகிய அனைத் தும் உபரி மதிப்பிலிருந்து கிடைக்கின்றன என்று மார்க்ஸ் நிரூபிக்கிறார். உபரி மதிப்பின் மாற்றப் பட்ட வடிவமான லாபம் மூலதனத்தின் வெவ்வேறு ரகங்களின் பிரதிநிதிகளுக்கு இடையில் பிரிக்கப்படு வதையும் முதலாளிகளுக்குக் கிடைத்த சராசரி லாப விகிதத்தின் — மதிப்பு விதியின் அடிப்படை யில் — உருவாக்கத்தையும் அவர் ஆராய்கிறார். அதன் விளைவாக, பொருள்களின் தனிப்பட்ட தொகுதிகளின் இனத்தின் மதிப்புக்குப் பொருந் தாத, ஆனால் மொத்த பண்ட உற்பத்தியின் மதிப்புக்குப் பொருந்துகின்ற உற்பத்தி விலை களுக்குப் பண்டங்கள் விற்பனை செய்யப்படு கின்றன.

மார்க்சின் பொருளாதாரப் போதனை மிக முழுமையாகவும் பரிபூரணமான முறையிலும் மூலதனம் நூலில் விரித்துரைக்கப்பட்டிருக்கிறது; இப்போதனை மார்க்சின் தத்துவத்தை மிக ஆழ மான, அகல்விரிவான, நுணுக்கமான முறையில் நிரூபிப்பதுடன் அதைச் செய்முறையில் உப யோகிப்பதாகவும் இருக்கிறது என்றார் லெனின். மார்க்சின் தத்துவத்தின் உள்ளடக்கக் கூறுகளான தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம் மற்றும் விஞ்ஞானக் கம்யூனிசத்தை விரித்துரைப்பதில் அது மாபெரும் முன்னேற்றத்தைக் குறிக்கிறது. தன்னுடைய ஆராய்ச்சிக்குப் பொருள்முதல்வாத இயக்கவியலைக் கையாண்ட மார்க்ஸ் அதைப்

படைப்பாற்றலோடு செழுமைப்படுத்தினர்; விஞ்ஞான அறிவின் வன்மைமிக்க இக்கருவியை மேலும் பரிபூரணமாக்கினர். பாட்டாளி வர்க்க விடுதலை இலட்சியக் கோட்பாடாகிய விஞ்ஞானக் கம்யூனிசம், சோஷலிஸ்டுப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஆகியவற்றை மூலதனம் ஆழமான தத்துவஞான, பொருளாதார, வரலாற்று முறையில் நிறுவியது.

மார்க்ஸ் எழுதிய மாபெரும் நூலாகிய மூலதனம் முதலாளித்துவ அடிமை முறையை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில் அதன் வன்மைமிக்க ஆயுதமாக இருக்கிறது.

# முதலாவது அகிலம் மற்றும் பாரிஸ் கம்யூன்

முதலாளித்துவத்தின் வீழ்ச்சியும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியும் தவிர்க்க முடியாதவை என்பதைத் தத்துவ ரீதியில் நிரூபிப்பது மட்டுமின்றி முதலாளித்துவத்துக்குச் சவக் குழியைத் தோண்டுகின்ற பாட்டாளி வர்க்கம் வரப் போகின்ற போராட்டத்துக்குத் தன் சக்திகளைத் திரட்டுவதற்கு அதற்கு உதவியளிப்பதும் தன்னுடைய வாழ்க்கைக் கடமை என்று மார்க்ஸ் கண்டார். **மூலதனத்தின்** முதல் தொகுதியை எழுதுகின்ற வேலை முடிவடைந்து கொண்டிருந்த நேரத்தில் உழைக்கும் மக்களை ஸ்தாபனமாக அமைக்கின்ற, திரட்டுகின்ற, பயிற்றுவிக்கின்ற பணியில் அவர் ஒப்பற்ற சக்தியுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். முதலாவது அகிலத்தில் அவருடைய பணி அவருடைய செய்முறை நடவடிக்கை அனைத்துக்குமே சிகரம் என்று எங்கெல்ஸ் கருதியது நியாயமே.

முதலாளித்துவத்தின் வளர்ச்சி, பாட்டாளி வர்க்கத்தினரையும் உழைக்கும் மக்களையும் சுரண்டுதல் தீவிரமடைந்தது, 1857ம் வருட உலக

நெருக்கடியும் அதற்குப் பிறகு முதலாளித்துவ-ஜனநாயக மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களில் ஏற்பட்ட வேகமும்—குறிப்பாக, 1863ம் வருடப் போலிஷ் மக்களின் எழுச்சி—இவை அனைத்தும் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் விழிப்பை அதிகமாக்கி ஒன்றுபட்ட நடவடிக்கையை நோக்கி அதைச் செலுத்தின. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் முதல் வெகுஜன அமைப்பாகிய சர்வதேசத் தொழிலாளர் சங்கம் 1864 செப்டெம்பர் 28ந் தேதியன்று லண்டனில் சென்ட்-மார்டின்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நிறுவப்பட்டது. அச்சங்கத்தின் வெற்றிக்குக் காரணம் அது தோன்றிய வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் மட்டுமல்ல; அதை நிறுவியவர், அமைத்தவர், அகிலத்தின் சிறப்பான வரலாற்றுக் கால முழுவதும் அதன் தலைவராகவும் ஜீவனாகவும் இருந்தவர் கார்ல் மார்க்ஸ் என்பதும் காரணமாகும்.

அகிலத்தின் முக்கியமான ஆவணங்கள்—சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் தொடக்க அறிக்கை (1864), சங்கத்தின் தற்காலிக விதிகள் (1864)—அனைத்தையும் மார்க்சே எழுதினார். இவற்றைத் தயாரித்த பொழுது மார்க்ஸ் தன்னுடைய கோட்பாடுகளிலிருந்து வழுவாமல் வெவ்வேறு நாடுகளில் வசிக்கின்ற, வெவ்வேறு வளர்ச்சியைக் கொண்டிருக்கின்ற உழைக்கும் மக்களுக்கு அவை ஏற்றவையாக இருக்க வேண்டுமென்று முயற்சி செய்தார். வெகுஜனங்களின் செய்முறையான அனுபவத்தை உபயோகித்து சீர்திருத்தவாதம், குறுங்குழுவாதம், வறட்டுக் கோட்பாட்டுவாதத்தின் பயனற்ற தன்மையைப் பொறுமை

யாகவும் இடைவிடாமலும் தொழிலாளர்களுக்கு விளக்கிக் கூறி பாட்டாளி வர்க்கத்தின் உண்மையிலேயே விஞ்ஞான ரீதியான, மெய்யாகவே புரட்சிகரமான தத்துவத்துக்கும் செயல்தந்திரத்துக்கும் அவர்களுடைய ஆதரவை மெதுவாக வென்றெடுப்பது அகிலத்தில் மார்க்சினுடைய கொள்கையாக இருந்தது.

உழைக்கும் மக்களை அமைப்பு ரீதியாகத் திரட்டுவதற்கும் பயிற்றுவதற்கும் பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் மிகவும் வன்மையான சாதனம் என்று கண்ட மார்க்ஸ் அகிலத்தின் நடவடிக்கைகளின் ஆரம்ப காலத்தில் தன் பெரும் பகுதியான கவனத்தை அத்துறையில் ஈடுபடுத்தினர். 1865ல் பொதுக் கவுன்சிலின் ஒரு கூட்டத்தின் போது வேலை நிறுத்தங்களாலும் தொழிற்சங்கங்களாலும் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படவில்லை என்று ஓவன்வாதியான வெஸ்டன் வாதிட்ட பொழுது மார்க்ஸ் இப்போலியான, ஆபத்தான கருத்தை எதிர்த்துப் பேசினர். ஓவன்வாதிகள், புரூதோனிஸ்டுகள், லஸ்ஸாலியர்களுக்கு மாருக, மூலதனத்தை எதிர்த்து உழைக்கும் வர்க்கத்தின் அன்ருடப் பொருளாதாரப் போராட்டத்தின் அவசியத்தை மார்க்ஸ் வலியுறுத்தினர். ஆனல் அன்ருடப் பொருளாதாரக் கோரிக்கைகளோடு மட்டும் தொழிலாளி வர்க்க நடவடிக்கையைக் குறுக்கிக் கொண்டு உற்பத்திச் சாதனங்களின் மீது தனிச்சொத்துரிமையை ஒழிப்பது பாட்டாளி வர்க்கத்தின் ஜீவாதாரமான நலன்களைக் காப்பதற்கு அவசியம் என்பதைக் காணத் தவறிய பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் சந்தர்ப்ப

வாதத் தலைவர்களையும் அவர் உறுதியாக எதிர்த்துப் போராடினர். கவுன்சிலில் அவர் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் அவர் எழுதிக் கொண்டிருந்த மூலதனத்தின் முக்கியமான கருத்துக்களில் சில வற்றை எளிமையான முறையில் எடுத்துக் கூறினர். இச்சொற்பொழிவை அவருடைய மகள் எலியனோரா மார்க்சின் மரணத்துக்குப் பிறகு கூலி, விலை, லாபம் என்ற தலைப்பில் 1898ல் பிரசுரமாக வெளியிட்டாள்.

அகிலத்தின் முதல் கட்டத்தில் புருதோனிஸ்டுகள் மார்க்சியத்தின் முக்கியமான எதிரிகளாக இருந்தனர். அவர்களுக்கு எதிரான போராட்டம் ஏற்கெனவே அகிலத்தின் லண்டன் மாநாட்டிலும் (1865) ஜினீவா காங்கிரசிலும் (1866) தொடங்கியிருந்தது. மூலதனத்தை எழுதிக் கொண்டிருந்த வேலையின் காரணமாக மார்க்ஸ் ஜினீவா காங்கிரசில் கலந்து கொள்ள முடியவில்லை; ஆனல் காங்கிரசில் முன்வைக்க வேண்டிய உடனடிக் கோரிக்கைகளைப் பற்றி அவர் பொதுக் கவுன்சிலின் பிரதிநிதிகளிடம் பேசினர்; வேலை நிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகளின் போது முதலாளிகள் வெளிநாட்டுத் தொழிலாளர்களை இறக்குமதி செய்யக் கூடாது; எட்டு மணி நேர வேலை நாள் வேண்டும்; குழந்தைகளுக்கும் குறைந்த வயதினருக்கும் வேலை நேரத்தைக் குறைத்தல், அவர்களுடைய மன, உடல் வளர்ச்சிக்கும் தொழில்நுட்பப் பயிற்சிக்கும் வசதிகளை ஏற்படுத்துதல். இதில் தொழிற்சங்கங்களுக்கு முக்கியமான இடத்தை மார்க்ஸ் ஒதுக்கினர்; அவை தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அமைப்புக் கேந்திரங்கள் என்று மார்க்ஸ் கருதி

னர். பொருளாதாரப் போராட்டத்துக்கும் அரசியல் போராட்டத்துக்கும், தொழிலாளி வர்க்கத்தின் அன்ருடப் போராட்டத்துக்கும் அதன் இயக்கத்தின் இறுதி லட்சியத்துக்கும் இடையிலுள்ள இணைப்பை அவர் வலியுறுத்தினர். கூட்டுறவு இயக்கம் முக்கியமானதாக இருப்பினும் பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைப் பெருமல் சமூக அமைப்பின் அடிப்படையை அது மாற்ற முடியாது என்று மார்க்ஸ் அந்த இயக்கத்தின் பாத்திரத்தை விளக்கினர். காரசாரமான விவாதத்துக்குப் பிறகு ஜினீவா காங்கிரசில் பங்கெடுத்த பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் மார்க்ஸ் கொடுத்த நடவடிக்கைத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

நிலவுடைமையைச் சமூகமயமாக்குவதையும் உற்பத்திச் சாதனங்களின் கூட்டு உடைமையையும் வலியுறுத்திய பிரஸ்ஸெல்ஸ் காங்கிரசும் (1868) பாசெல் காங்கிரசும் (1869) அகிலத்தின் தத்துவ ரீதியான செயல்திட்டத்தை விரித்துரைப்பதில் முக்கியமான கட்டங்களாக இருந்தன. அகிலத்தின் செயல்திட்டம் இப்பொழுது தெளிவாக வரையறுக்கப்பட்ட சோஷலிஸ்டுத் தன்மையைப் பெற்றது. இது குட்டி முதலாளி வர்க்கச் சொத்துடைமையின் ஆதரவாளர்களான புரூதோனிஸ்டுகள் மீது சித்தாந்த ரீதியான வெற்றியைக் குறித்தது. பிரஸ்ஸெல்ஸ் காங்கிரஸ் மூலதனத்தைப் பற்றி ஒரு விசேஷத் தீர்மானம் நிறைவேற்றியது முக்கியத்துவம் நிறைந்ததாகும்; மூலதனத்தைப் பற்றி விஞ்ஞானப் பகுப்பாய்வு செய்த முதல் பொருளியலாளரான மார்க்ஸ் மாபெரும் சேவை செய்திருப்

பதைக் குறிப்பிட்டதுடன் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும் இப்புத்தகத்தைக் கற்க வேண்டும் என்று அத்தீர்மானம் கூறியது.

பிரான்சிலும் பெல்ஜியத்திலும் மார்க்சியத்தின் முக்கியமான எதிரிகளாக புரூதோனிஸ்டுகளும் ஜெர்மனியில் லஸ்ஸாலியர்களும் இருந்தனர். அகிலம் நிறுவப்பட்ட சமயத்தில் லஸ்ஸால் உயிருடன் இல்லை, ஆனால் அவரைப் பின்பற்றுபவர்கள் இருந்தார்கள்; அவர்கள் அவருடைய தவறான கருத்துக்களையும் தீங்கான செயல்தந்திரத்தையும் கடைப்பிடித்தார்கள். மார்க்சும் எங்கெல்சும் எழுதிய சில கட்டுரைகளிலும் கடிதங்களிலும் பிரஷ்யப் பிற்போக்குவாதத்துடன் சல்லாபிக்கின்ற லஸ்ஸாலியக் கொள்கையிலிருந்த ஆபத்தையும் தீமையையும் பற்றி ஜெர்மன் தொழிலாளர்களை எச்சரித்தனர். அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் தலைமையும் *Der Social-Demokrat* (''சமூக-ஜனநாயகவாதி'') என்ற அதன் பத்திரிகையும் ஜெர்மனியை மேலேயிருந்து, ''இரத்தம் மற்றும் இரும்பின்'' மூலம் ஒற்றுமைப்படுத்துகின்ற பிஸ்மார்கின் கொள்கையை ஆதரிக்கும் லஸ்ஸாலியச் செயல்தந்திரத்தைத் தொடர்ந்து பின்பற்றியபடியால் மார்க்சும் எங்கெல்சும் இப்பத்திரிகையுடன் தங்கள் கருத்து வேறுபாட்டைப் பகிரங்கமாக அறிவித்தனர்; லஸ்ஸாலியர்களின் ''பிரஷ்ய ராஜாங்க சோஷலிசத்தைக்'' கூர்மையாகக் கண்டனம் செய்தனர்.

ஜெர்மனியில் லஸ்ஸாலியர்களிடமிருந்து வேறுபட்ட ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சியை

நிறுவுவதற்கு மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய ஆதரவாளரான வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் மூலம் முயற்சி செய்தனர். நியூரென்பர்கில் 1868ல் லீப்க்னெஹ்ட் மற்றும் பெபெலின் தலைமையில் நடைபெற்ற தொழிலாளர்களின் கல்விச் சங்கங்களின் காங்கிரஸ் அகிலத்துடன் இணைவதென்று முடிவு செய்தது. சர்வதேசத் தொழிலாளர் சங்கம் ஜெர்மனியிலுள்ள பெருந்திரளான உழைக்கும் மக்களுடன் தொடர்பு கொள்ள இதன் மூலமாக வழி ஏற்பட்டது. 1869ல் எய்செனுஹில் ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி நிறுவப்பட்டது. இதில் பெபெல், லீப்க்னெஹ்ட் தலைமையிலிருந்த தொழிலாளர்கள் சங்கங்களுடன் அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்திலிருந்து பிரிந்து வந்த லஸ்ஸாலியர்களின் ஒரு பகுதியினரும் சேர்ந்து கொண்டனர்.

இப்பொழுது அகிலத்தில் மார்க்சியம் புரூதோனிசத்தை எதிர்த்து சித்தாந்த ரீதியான வெற்றியைப் பெற்றிருந்தது, லஸ்ஸாலியர்களுக்கு எதிரான போராட்டத்திலும் வெற்றியடைந்திருந்தது; ஆனால் பகூனிசம் என்ற புதிய எதிரி களத்திலே தோன்றியது. பகூனிசம் முந்திய எதிரிகளைப் போலவே சம அளவுக்கு ஆபத்தானதாக, அவற்றைக் காட்டிலும் இன்னும் தந்திரமான எதிரியாக இருந்தது. மி. பகூனின் தன்னுடைய அராஜகவாத ஸ்தாபனமான சோஷலிஸ்டு ஜனநாயகத்தின் சர்வதேசக் கூட்டணியைப் பயன்படுத்திக் கொண்டு அகிலத்தின் தலைமையைக் கைப்பற்ற விரும்பினர். அகிலத்தில் சேர்ந்த பொழுது கூட்டணி கலைக்கப்பட்டு விட்டது என்று பகூனின் அறிவித்தார்;

ஆனல் உண்மையில் அது அகிலத்திற்குள் ஒரு இரகசியப் பிரிவாக இயங்கிக் கொண்டிருந்தது.

அகிலத்தின் பாசெல் காங்கிரசுக்குப் பிறகு பகூனிஸ்டுகள் தாங்கள் அது வரை அகிலத்துக்குள் இரகசியமாகச் செய்து வந்த சீர்குலேவு வேலேயுடன் பொதுக் கவுன்சிலுக்கும் அதன் தலேவரான மார்க்சுக்கும் எதிராகப் பகிரங்கமான போராட்டத்தைத் தொடங்கினர்கள். அவர்கள் தங்களுடைய அராஜகவாதக் கலகக் கொடியின் கீழ் ''பிரஷ்ய ராஜாங்க சோஷலிஸ்டுகளான'' லஸ்ஸாலியர்கள் மற்றும் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் மிதவாதத் தலேவர்கள் — அப்போது மார்க்சுக்கு இவர்களுடன் ஆழமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன — இருவரையுமே திரட்டுவதற்கு முயற்சிகளேச் செய்தார்கள்.

பிரிட்டனில் உள்ள தொழிலாளி வர்க்க மேல்தட்டினருடைய பிரதிநிதிகளின் பழமைவாதத்தையும் முதலாளி வர்க்க மிதவாதிகளுக்குப் பின்னல் ஓடுகின்ற அவர்களுடைய ஆழமாகப் பதிந்த பழக்கத்தையும் மார்க்ஸ் இதற்கு முன்பு கூட விமர்சித்திருக்கிருர். அறுபதுக்களின் பிற்பாதியில் பிரிட்டனுடைய அரசியல் வாழ்க்கையில் ஐரிஷ் பிரச்சினே முன்னணிக்கு வந்த பொழுது மார்க்சுக்கும் மிதவாதத் தொழிலாளர் கொள்கையின் இந்தத் தலேவர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் குறிப்பிடத்தக்க அழுத்தத்தைப் பெற்றன. மார்க்சினுடைய முன் முயற்சியின் காரணமாக அகிலத்தின் பொதுக் கவுன்சில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலே பெறுவதற்காக ஐரிஷ் மக்கள் நடத்திய தேசிய

விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தது. ஐரிஷ் தேசிய விடுதலை இயக்கம் ஆங்கில நிலவுடைமை முறைக்கு எதிரான சக்தி மட்டுமல்ல, அது பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தையும் எதிர்க்கின்ற சக்தி என்று மார்க்ஸ் கண்டார். முதலாளி வர்க்கம் தன்னுடைய ''கூலி அடிமைகளை'' இரண்டு எதிரி முகாம்களாகப் பிரிப்பதற்கு, ஆங்கிலத் தொழிலாளர்களுக்கும் ஐரிஷ் தொழிலாளர்களுக்கும் இடையில் விரோதத்தை ஏற்படுத்துவதற்கு இங்கிலாந்து அயர்லாந்தை ஒடுக்கியது உதவி செய்தது. இந்தப் பிளவே ஆங்கிலத் தொழிலாளி வர்க்கத்தின் கையாலாகாத் தனத்துக்கும் ஆங்கில முதலாளி வர்க்கத்தின் வல்லமைக்கும் இரகசியமான காரணம் என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். அயர்லாந்தின் விடுதலை ஆங்கிலத் தொழிலாளர்களுடைய சொந்த விடுதலைக்கு அடிப்படையான நிபந்தனை என்று அவர் எடுத்துக் காட்டினார். ''ஒரு தேசிய இனத்தை அடிமைப்படுத்துகின்ற மற்றொரு தேசிய இனம் தனக்கே விலங்குகளைத் தயாரித்துக் கொள்கிறது''* என்று மார்க்ஸ் எழுதினார்.

ஐரோப்பா, இந்தியா மற்றும் சீனாவில் தேசிய விடுதலை இயக்கங்களைப் பற்றி மார்க்ஸ் இதற்கு முன்பு எழுதிய கட்டுரைகளில் தேசிய இன மற்றும் காலனியாதிக்கப் பிரச்சினை பற்றி அடிப்படையான கோட்பாடுகளை வகுத்துக் கூறியிருந்தார்; அயர்லாந்து மக்கள் நடத்திய போராட்டத்தின்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 16, பக்கம் 438 (ருஷ்ய மொழியில்).

அனுபவம் அந்தக் கோட்பாடுகளை வளர்த்துச் செல்வதில் அவருக்கு உதவியது. தேசிய இன மற்றும் காலனியாதிக்கப் பிரச்சினையில் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படையான கொள்கையை விரித்துரைக்கின்ற பொழுது புரட்சியின் நலன்கள் என்ற நோக்கிலிருந்து இப்பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கும்படி மார்க்ஸ் தொழிலாளி வர்க்கத்துக்குக் கற்பித்தார். தேசிய இனம் என்பது ''காலாவதியாகிவிட்ட தப்பெண்ணம்'' என்று கூறி தேசியப் பிரச்சினையைப் புறக்கணித்த புரூதோனிஸ்டுகளை அவர் வன்மையாகக் கண்டனம் செய்தார். மறு பக்கத்தில், மார்க்ஸ் முதலாளி வர்க்கத் தேசிய வாதத்தைத் தீவிரமாக எதிர்த்துப் போராடினார்; பெருந்திரளான மக்களுக்குப் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாத உணர்ச்சியைக் கற்பித்தார். பாட்டாளி வர்க்கமே தேசிய ஒடுக்குமுறைக்கும் காலனியாதிக்கத்துக்கும் எதிராக மிக உறுதியாகப் போராடும் என்று மார்க்ஸ் கூறினார்.

முதலாவது அகிலத்தின் ருஷ்யப் பிரிவு ஜினீவாவில் 1870ம் வருடத்தின் தொடக்கத்தில் ருஷ்யாவைத் துறந்து வந்த ஓர் அரசியல் கோஷ்டியினரால் அமைக்கப்பட்டது; இவர்கள் செர்னிஷேவ்ஸ்கி மற்றும் தப்ரல்யூபவ் பிரச்சாரம் செய்த கருத்துக்களை ஆதரித்தவர்கள். அகிலத்தில் பகூனிஸ்டுகளுக்கு எதிராக மார்க்ஸ் நடத்திய போராட்டத்துக்கு அகிலத்தின் ருஷ்யப் பிரிவு தீவிரமாக ஆதரவு கொடுத்தது. அகிலத்தின் பொதுக் கவுன்சிலில் தங்களின் பிரதிநிதியாக இருக்கும்படி ருஷ்யப் பிரிவு மார்க்சைக் கேட்டுக் கொண்டது. மார்க்ஸ் ஏற்கெனவே அகிலத்தில் ஜெர்மனியின் செயலாளர்-

நிருபராகச் செயலாற்றி வந்த போதிலும் இந்தக் கௌரவத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள் வதாக அவர் பதில் எழுதினர்.

ருஷ்யப் பிரிவு தற்செயலாக மார்க்சை நோக்கித் திரும்பவில்லை. அவர் பெயர் ருஷ்யாவின் புரட்சிகரமான இளைஞர்கள் மத்தியில் ஏற்கெனவே பிரபலமடைந்திருந்தது. மூலதனத்தை அந்நிய மொழியில் மொழிபெயர்க்கின்ற முதல் ஆலோசனை ருஷ்யாவிலிருந்துதான் வந்தது. மார்க்ஸ் கூகல் மனுக்கு இதைப் பற்றி எழுதிய பொழுது, தான் எழுதிய மெய்யறிவின் வறுமை, அரசியல் பொருளா தார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை ஆகிய நூல்கள் வேறு எந்த நாட்டையும் காட்டிலும் ருஷ்யாவில்தான் அதிகமாகப் பிரபலமடைந்திருக் கின்றன என்று சுட்டிக் காட்டினர். மார்க்சும் ருஷ்யா, அதன் பொருளாதாரம், பண்பாடு, இலக்கியம், அங்கே ஜாரையும் நிலப்பிரபுக்களையும் எதிர்த்து மக்கள் நடத்திக் கொண்டிருந்த போராட் டம் ஆகியவற்றைப் பற்றி அதிகமாக அக்கறை காட்டினர். 1869ம் வருடத்தில் அவர் ருஷ்ய மொழியைக் கற்கத் தொடங்கினர்; வெகு சீக் கிரத்தில் அவர் புஷ்கின், கோகல், சல்திக்கோவ்-ஷெத்ரின், ஃபிளெரோவ்ஸ்கி, கேர்ட்சென், தப்ரல் யூபவ், செர்னிஷேவ்ஸ்கி மற்றும் இதர ருஷ்ய எழுத்தாளர்களின் புத்தகங்களை மூல மொழி யிலேயே படிக்கலானர். மூலதனத்தின் முதல் தொகுதியின் இரண்டாவது பதிப்புக்கு எழுதிய பின்னுரையில் மார்க்ஸ் செர்னிஷேவ்ஸ்கியை ''மாபெரும் ருஷ்ய அறிஞர், விமர்சகர்'' என்று குறிப்பிட்டார்; செர்னிஷேவ்ஸ்கி எழுதிய மில்

பின்பற்றிய அரசியல் பொருளாதாரக் குறிப்புகள் (1861) என்ற நூலில் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் பயனற்ற தன்மையைச் சிறப்பான முறையில் விளக்கியிருந்தார்.

ஜினீவாவிலிருந்த ருஷ்யப் பிரிவின் கமிட்டி உறுப்பினர்களுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தில் (1870) ஃபிளெரோவ்ஸ்கி எழுதிய ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைகள் (1869) என்ற நூலை அதிகமாகப் பாராட்டினார். ''ஃபிளெரோவ்ஸ்கியின் நூலைப் போன்ற புத்தகங்களும் உங்கள் ஆசான் செர்னிஷேவ்ஸ்கியின் எழுத்துக்களும் ருஷ்யாவுக்கு மெய்யாகவே புகழ் தருபவை; இந்த நூற்றாண்டின் பொது இயக்கத்தில் உங்கள் நாடும் பங்கேற்கத் தொடங்கியிருப்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன''* என்று மார்க்ஸ் எழுதினார்.

மூலதனத்தை ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்த ருஷ்யப் புரட்சியாளரும் நரோத்னிக்குமான ஹெ. லபாதினுடன் மார்க்ஸ் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்; மார்க்சின் ஆலோசனையின் பேரில் அவர் அகிலத்தின் பொதுக் கவுன்சிலில் உறுப்பினராக்கப்பட்டார். 1870ல் சைபீரியாவில் சிறைக்குடியிருப்பில் வைக்கப்பட்டிருந்த செர்னிஷேவ்ஸ்கியை விடுவிப்பதற்கு லபாதின் வீரம் நிறைந்த முயற்சியைச் செய்த பொழுது அவர் மூலதனத்தின் மொழிபெயர்ப்பைப் பூர்த்தி செய்யும் பணியை செண்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்த நரோத்னிக்கான தானியெல்ஸோனிடம் ஒப்படைத்

---

* K. Marx, F. Engels, *Selected Works*, Vol. 2, p. 173.

தார்; அவருடனும் மார்க்ஸ் உற்சாகமான கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். மார்க்ஸ் இன்னும் சில ருஷ்ய அரசியல் பிரமுகர்களுடனும் கடிதத் தொடர்புகள் வைத்திருந்தார். மார்க்சுக்கும் பல நாடுகளிலுமிருந்த வளர்ச்சியடைந்த பிரமுகர்களுக்கும் இம்முறையில் தொடர்புகள் பலமடைந்தன; அவர் தலைமை வகித்த சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் செல்வாக்கும் அதிகரித்தது.

அகிலம் நிறுவப்பட்டதிலிருந்தே மார்க்ஸ் தொழிலாளர்களின் கவனத்தை வெளிநாட்டுக் கொள்கை, யுத்தம் மற்றும் சமாதானம், இராணுவ வெறிக்கு எதிரான போராட்டம் ஆகிய பிரச்சினைகளை நோக்கித் திருப்பினர். தொழிலாளி வர்க்கம் ''தன்னுடைய பொறுப்பை உணர்ந்த, அதன் எசமானர்கள் என்று சொல்லப்படுபவர்கள் யுத்தத்தைப் பற்றிக் கூக்குரலிடுகின்ற பொழுது சமாதானத்தை ஆணையிடுகின்ற தகுதியைக் கொண்ட சுதந்திரமான சக்தியாக''* உலக விவகாரங்களைப் பற்றிப் பேச வேண்டும் என்று அவர் வற்புறுத்தினர்.

சமாதானவாதிகளிடமிருந்து வேறுபட்ட முறையில் மார்க்ஸ் தலைமை தாங்கிய பொதுக் கவுன்சில் கொள்ளைக்கார யுத்தங்களுக்கும் விடுதலைப் போர்களுக்கும் இடையில் வேறுபடுத்தியது. அமெரிக்க ஜனதிபதிகளான ஆப்ரஹாம் லிங்கல்னுக்கும் (1864) ஏன்ட்ரு ஜோன்சனுக்கும் (1865) மார்க்ஸ் அனுப்பிய செய்திகளில் அடிமை முறையை ஒழிப்பதற்காகத் தெற்குப் பகுதிக்கு எதிராக வடக்குப்

* *Ibid.*, p. 157.

பகுதி நடத்திய யுத்தத்தின் முற்போக்கான தன்மையைக் குறிப்பிட்டார்.

1870ம் வருடத்தில் பிரான்சுக்கும் பிரஷ்யாவுக்கும் இடையில் யுத்தம் வெடித்த பொழுது மார்க்ஸ் எழுதித் தயாரித்த பொதுக் கவுன்சிலின் அறிக்கை அந்த யுத்தத்தின் தன்மையை அம்பலப்படுத்தி அதில் பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய செயல்தந்திரத்தை வகுத்துக் கொடுத்தது. ஜெர்மனிக்கு எதிராக லுயீ போனபார்ட் தொடங்கிய யுத்தம் கொள்ளைக்காரத் தனமானது, வாரிசுரிமை நோக்கம் கொண்டது என்று சுட்டிக் காட்டிய மார்க்ஸ் அந்த யுத்தத்தின் விளைவாக போனபார்ட் தன் அரியாசனத்தை இழப்பார் என்று முன்னறிவித்தார். ஜெர்மனி நடத்திய யுத்தத்தின் தன்மையை வரையறுக்கும் பொழுது அந்த யுத்தத்தில் ஜெர்மனியின் உண்மையான நலன்களுக்கும் பிரஷ்யாவின் பிற்போக்குத் தனமான, கொள்ளையடிக்கின்ற யுத்த நோக்கங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அவர் வலியுறுத்தினர். பிரான்சிலும் ஜெர்மனியிலும் வளர்ச்சியடைந்த தொழிலாளர்கள் சரியான, சர்வதேசியவாத நிலை எடுத்திருப்பதைப் பற்றி அவர் திருப்தியடைந்தார். ''கடந்த கால வரலாற்றில் ஒப்புவமை இல்லாத இந்த மாபெரும் உண்மை இன்னும் பிரகாசமான எதிர்காலத்துக்குப் பாதையைத் திறக்கிறது. பொருளாதாரத் துன்பங்களும் அரசியல் பைத்தியமும் உள்ள பழைய சமூகத்துக்கு மாருக ஒரு புதிய சமூகம் தோன்றிக் கொண்டிருக்கிறது என்பதை அது நிரூபிக்கிறது. அங்கே சமாதானம் சர்வதேச அளவில் ஆட்சி புரியும்;



10*

ஏனென்றால் தேசிய அளவில் எங்கும் ஒரே சக்தி—உழைப்பு—ஆட்சி செய்யும்''* என்று மார்க்ஸ் எழுதினார்.

இன்னும் அதிக இரத்தக்களறியான யுத்தங்களிலிருந்து மனித குலத்தை விடுதலை செய்து உலகில் நிரந்தர சமாதானத்தை நிறுவுதல்—பாட்டாளி வர்க்கத்தின் மிக முக்கியமான, மிகவும் பண்பு நிறைந்த கடமைகளில் ஒன்றை மார்க்ஸ் இப்படி வகுத்துக் கொடுத்தார்.

பிரெஞ்சு இராணுவம் செதானில் தோல்வி அடைந்த பிறகு, பிரான்சில் குடியரசு பிரகடனம் செய்யப்பட்ட பிறகு எழுதித் தயாரிக்கப்பட்ட இரண்டாவது வேண்டுகோளில் இரண்டாவது பேரரசின் வீழ்ச்சி நெருங்கி விட்டது என்று முதல் வேண்டுகோளில் பொதுக் கவுன்சில் எவ்வளவு சரியாகச் சுட்டிக் காட்டியது என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். இப்பொழுது ஜெர்மனியைப் பொறுத்த அளவில் யுத்தம் ஒரு கொள்ளைக்காரத் தன்மையைப் பெற்று விட்டதால் மார்க்ஸ் ஜெர்மன் தொழிலாளர்களின் கோஷத்தைப் பின்வருமாறு வகுத்தார்: ''பிரான்சுடன் கௌரவமான சமாதானம், பிரெஞ்சுக் குடியரசை அங்கீகரித்தல்''. பிரெஞ்சுத் தொழிலாளர்களின் கடமைகளை வரையறுக்கும் பொழுது அவர்கள் குடியரசு அளித்திருக்கின்ற எல்லாச் சாதனங்களையும் தங்களுடைய சொந்த வர்க்க ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவதற்கு உபயோகிக்க வேண்டும் என்று

---

* *Ibid.*, pp. 193—194.

மார்க்ஸ் கூறினர். பிரான்சில் வர்க்கப் போராட்டம் கூர்மையடையும் என்று எதிர்பார்த்த மார்க்ஸ் அகாலமான, சரியான தயாரிப்பில்லாத எழுச்சியில் பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கம் ஈடுபடக் கூடாது என்று எச்சரித்தார்.

ஆனல் பிரெஞ்சுத் தொழிலாளர்கள் 1871 மார்ச் 18ல் புரட்சியை நடத்தி விட்டார்கள் என்ற செய்தி லண்டனுக்குக் கிடைத்தவுடன் மார்க்ஸ் எழுச்சியில் கலந்து கொண்ட பாரிஸ் தொழிலாளர்களுக்கு உதவி செய்வதற்காகச் சுறு சுறுப்புடன் செயலாற்றினர். அவர் அகிலத்தின் பிரிவுகள் இருக்கின்ற உலகத்தின் எல்லாப் பகுதி களுக்கும் நூற்றுக் கணக்கான கடிதங்களை அனுப் பினர்; மார்ச் 18 புரட்சியின் உண்மையான அர்த்தத்தைச் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத் துக்கு விளக்கிக் கூறி பாரிஸ் கம்யூனை ஆதரித்து இயக்கம் நடத்தும்படிக் கேட்டுக் கொண்டார்.

1870ம் வருடத்தின் இலையுதிர் காலத்தின் போது எங்கெல்ஸ் கடைசியாகத் தன்னுடைய மாஞ்செஸ்டர் வேலையிலிருந்து விலகி அகிலத்தின் பொதுக் கவுன்சிலில் முழு நேரம் உழைப்பதற் காக லண்டனுக்கு வந்திருந்தார். பாரிஸ் கம்யூ னுக்கு ஆதரவாகச் செய்யப்பட்ட பணிகளில் எங்கெல்ஸ் மார்க்சுக்குப் பேருதவியாக இருந்தார்.

மார்க்சும் எங்கெல்சும் நம்பிக்கையானவர்கள் மூலம் கொடுத்தனுப்பிய கடிதங்கள் மற்றும் வாய் மொழிச் செய்திகள் மூலம் கம்யூன் வீரர் களுக்கு அறிவுரை கூறினர்கள்; அவர்கள் தவறு களைச் செய்யாமல் தடுக்க முயற்சி செய்தார்கள். எனினும் பாரிஸ் முற்றுகை என்ற இரும்பு

வளையத்திஞல் சூழப்பட்டிருந்தபடியால் அவர்களுடைய வழி காட்டுதல் பல சந்தர்ப்பங்களில் உரிய நேரத்தில் பாரிசுக்குக் கிடைக்கவில்லை. கம்யூனுக்குத் தலைமை தாங்கிய புரூதோனிஸ்டுகளும் பிளாங்கிஸ்டுகளும் தங்களுடைய குறுங்குழுவாத வறட்டுக் கோட்பாடுகளுக்கு எதிராகச் சென்ற நடவடிக்கைகளை மிக அதிகமான தயக்கத்துடனும் காலதாமதத்துடனும்தான் முடிவு செய்தார்கள் என்பதும் மற்றொரு தடையாகும்.

பாரிஸ் கம்யூன் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது அதன் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தை மதிப்பிடுவதற்கும் அதன் பிரதான தவறுகளை வெளிப்படுத்துவதற்கும் ாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தத்துவத் ுக்கும் செயல்தந்திரத்துக்கும் மிகவும் பயனுள்ள ுடிவுகளைப் பெறுவதற்கும் மார்க்சிஞல் முடிந்தது. மார்க்ஸ் 1871 ஏப்ரல் 12ந் தேதியன்று கூகல்மனுக்கு எழுதிய கடிதத்தில் பாரிஸ் கம்யூனின் அடிப்படையான பங்களிப்பை வலியுறுத்திஞர்: ''நான் எழுதிய **பதினெட்டாம் புரூமேரின்** கடைசி அத்தியாயத்தை நீங்கள் படித்தால் பிரெஞ்சுப் புரட்சியின் அடுத்த முயற்சி முன்பு செய்ததைப் போல அதிகார வர்க்க-இராணுவ இயந்திரத்தை ஒருவரிடமிருந்து மற்ருெருவருக்கு மாற்றிக் கொடுப்பதாக ஒருக்காலும் இருக்காது, அந்த இயந்திரத்தை நொறுக்குவதாகவே இருக்கும் என்று நான் அறிவிப்பதை நீங்கள் பார்க்கலாம்; கண்டத்தில் ஒவ்வொரு மெய்யான மக்கள் புரட்சிக்கும் இதுவே பூர்வாங்க நிபந்தனை. பாரிசில் நம்முடைய வீரமிக்க கட்சித் தோழர்கள் இதற்காகவே

பாடுபட்டுக் கொண்டிருக்கிறுர்கள்."*

மார்க்ஸ் கூகல்மனுக்கு எழுதிய இந்தக் கடிதத்தில் பழைய அரசு இயந்திரத்தை நொறுக்குவதன் அவசியத்தைப் பற்றித் தன்னுடைய முடிவுகளை ஐரோப்பியக் கண்டத்துடன் நிறுத்திக் கொண்டு இங்கிலாந்துக்கு விதிவிலக்குத் தருகிறுர். இங்கிலாந்தின் மக்கள் தொகையில் தொழிலாளி வர்க்கம் பெரும்பான்மையாக இருத்தல், அது இராணுவ வெறியர்களின் பிடியில் இல்லாதிருத்தல், இது வரை அதிகார வர்க்கம் மிகக் குறைவான பாத்திரத்தை வகித்தல் ஆகிய காரணங்களினுல் இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைச் சமாதான பூர்வமான வழிகளினுல் அடையக் கூடிய சாத்தியம் இருப்பதாக மார்க்ஸ் கருதினுர். எனினும் ''இந்தச் சமாதான பூர்வமான, சட்ட பூர்வமான புரட்சிக்கு... இங்கிலாந்தின் ஆளும் வர்க்கங்கள் தம்மை உட்படுத்திக் கொள்ளும் என்று தான் அநேகமாக எதிர்பார்க்கவில்லை என்று சேர்த்துக் கூறுவதற்கு'' மார்க்ஸ் ''ஒருபோதும் மறக்கவில்லை''** என்று எங்கெல்ஸ் வலியுறுத்தினுர்.

அதே கடிதத்தில் கம்யூனுர்டுகள் செய்த பேராபத்தான இரண்டு தவறுகளை மார்க்ஸ் சுட்டிக் காட்டினுர்: 1) எதிரி இன்னும் பீதியுடனிருந்த, தன்னுடைய சக்திகளைத் திரட்டிக் குவிப்பதற்கு முடியாதிருந்த நேரத்தில் அவர்கள் உடனடியாக வெர்சால் மீது படையெடுத்திருக்க வேண்டும்; அந்தத் தருணத்தைப் பறிகொடுத்தார்கள்;

---

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, p. 247.
** K. Marx, *Capital*, Vol. 1, p. 6.

2) கம்யூனை ஏற்படுத்துவதற்காக மத்தியக் கமிட்டி தன்னுடைய அதிகாரத்தை மிகவும் முன்னதாகவே விட்டுக் கொடுத்து விட்டது. 1871 ஏப்ரல் 17ந் தேதியன்று கூகல்மனுக்கு எழுதிய மற்றொரு கடிதத்தில் பாரிஸ் கம்யூன் தோன்றியதே பாட்டாளி வர்க்கத்தின் உலக-வரலாற்றுப் பெருஞ் சாதனை என்று மார்க்ஸ் மதிப்பிட்டார்.

மார்க்ஸ் எழுதிய பிரான்சில் உள்நாட்டுப் போர் என்ற நூலில் (1871) கம்யூன் அனுபவத்தை மேதாவிலாசத்துடன் பொதுமைப்படுத்தினார். வரலாற்றிலேயே முதல் தடவையாகப் பாட்டாளி வர்க்க அரசை நிறுவுவதற்கு முயற்சித்ததே கம்யூனார்டுகள் செய்த மாபெரும் சேவை என்பது மார்க்சினுடைய கருத்து. இதற்கு முந்திய புரட்சிகள் அனைத்துமே ஆளும் வர்க்கத்திற்குள்ளாக ஒரு இடமாற்றத்தை, ஒரு சுரண்டல் வடிவத்திலிருந்து மற்றொரு சுரண்டல் வடிவத்துக்கு மாற்றத்தை மட்டுமே ஏற்படுத்தின; அவற்றுடன் பழைய அரசு இயந்திரம் நொறுக்கப்படவில்லை— அதற்கு பதிலாக, அது கை மாற்றிக் கொடுக்கப்பட்டது. ஆனால் மார்க்ஸ் சுட்டிக் காட்டியதைப் போல, முன்னரே தயாரிக்கப்பட்டிருக்கும் அரசு இயந்திரத்தைத் தொழிலாளி வர்க்கம் வெறுமளவில் எடுத்துக் கொண்டு தன்னுடைய சொந்த நோக்கங்களுக்கு உபயோகிக்க முடியாது. மார்க்சும் எங்கெல்சும் இந்த முடிவுக்கு மிக அதிகமான முக்கியத்துவம் அளித்தபடியால் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** 1872ம் வருடப் பதிப்பிற்கு அவர்கள் எழுதிய முன்னுரையில் பாட்டாளி வர்க்கத்தின் செயல்திட்டத்தை வகுக்கின்ற அந்த

ஆவணத்துக்கு இது அவசியமான பிற்சேர்க்கை என்று கருதினர்கள்.

பழைய அரசு இயந்திரத்தை நொறுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி மார்க்ஸ் லூயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேரில் முன்வைத்த மிக முக்கியமான தத்துவக் கருதுகோள் எவ்வளவு சரியானது என்பதைக் கம்யூன் நடைமுறையில் எடுத்துக் காட்டியதுடன் மட்டுமல்லாமல் அந்தப் பழைய அரசு இயந்திரத்தைப் புதிய ரகத்தைச் சேர்ந்த அரசியல் ஸ்தாபனத்தின் மூலம் அகற்றிடத் தொடங்கியது. மார்க்ஸ் கம்யூனுடைய அனுபவத்தைப் பயன்படுத்திக் கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைப் பற்றித் தன்னுடைய போதனையை வளர்ப்பதில் புதிய, மிகச் சிறப்பான முன்னேற்றத்தை அடைந்தார். பாரிஸ் கம்யூன் ரகத்தைச் சேர்ந்த அரசு ''உழைப்பின் பொருளாதார விடுதலையை நிறைவேற்றுவதற்குக் கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்ட அரசியல் வடிவம்''* என்ற முடிவுக்கு மார்க்ஸ் வந்தார்.

கம்யூன் எடுத்த சமூக-பொருளாதார நடவடிக்கைகளை ஆராய்ந்த பொழுது அவை பலவீனமாக இருந்தாலும் கூட அடிப்படையில் உடைமை பறித்தோரை உடைமை பறிக்கின்ற திசையில் சென்றன என்பதை மார்க்ஸ் வலியுறுத்தினர்.

கம்யூனுக்கு ஜீவாதாரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்த விவசாய வர்க்கத்துடன் அதன் உறவைப் பற்றிய பிரச்சினைக்கு மார்க்ஸ்

* K. Marx, F. Engels, *Selected Works*, Vol. 2, p. 223.

அதிகமான கவனம் செலுத்தினர். பிரெஞ்சு விவசாய வர்க்கத்துக்கு ஆதரவாகக் கம்யூன் செய்திருக்க வேண்டிய—ஆனல் செய்யத் தவறிய—நடவடிக்கைகளை அவர் ஆராய்ந்தார். கம்யூன் விவசாய வர்க்கத்துக்கு மட்டுமல்லாமல் நகரக் குட்டி முதலாளி வர்க்கத்தினருக்கும் இயற்கையான பாதுகாவலன், பிரெஞ்சுத் தேசிய இனத்தின் உண்மையான நலன்களை மெய்யாகவே தாங்கிச் செல்வது என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டினர். மார்க்ஸ் தன்னுடைய நூலின் முடிவில் எதிர்காலத்திய சமூகத்தை முன்னறிவிப்பவன் என்று பாரிஸ் கம்யூனைப் போற்றினர்; அதை நசுக்கியவர்கள் கறைபடிந்தவர்கள் என்று நெருப்பு எழுத்துக்களினுல் முத்திரையிட்டார்.

**பிரான்சில் உள்நாட்டுப் போர்** என்ற நூல் மார்க்சியத்தின் படைப்புத் தன்மையையும் பெருந்திரளான மக்களின் அனுபவத்தையும் அவர்களுடைய வரலாற்று முன்முயற்சியையும் உபயோகித்துத் தன்னை வளர்ப்பதற்கும் அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் அதன் நாட்டத்தையும் சிறப்பான முறையில் எடுத்துக் காட்டியது.

பொதுக் கவுன்சிலின் வேண்டுகோள் என்ற வடிவத்தில் வெளியிடப்பட்ட இந்த நூல் கம்யூனின் விலை மதிப்பற்ற அனுபவம் என்ற ஆயுதத்தை உலகப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தந்து அகிலத்தின் முக்கியமான அரசியல் ஆவணமாயிற்று.

கம்யூன் தோல்வியடைந்த பிறகு அகிலத்துக்கு நெருக்கடியான காலம் ஏற்பட்டது. பல்வேறு நாடுகளின் பிற்போக்கான அரசாங்கங்களும் அகிலத்தின் பிரிவுகளை ஒடுக்குவதைத் தீவிரப்படுத்

தின; அகிலத்தின் தலைவராகிய மார்க்சை அவதூறு செய்யும் இயக்கத்தைத் தொடங்கின. அகிலத்தினுள் போராட்டம் கூர்மை அடைந்தது. 1871 ஜூன் 20ல் பொதுக் கவுன்சிலின் கூட்டம் நடைபெற்ற பொழுது ஓஜெர், லெக்ராஃப்ட் என்ற இரண்டு பிரிட்டிஷ் தொழிற்சங்கத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் பிரான்சில் உள்நாட்டுப் போர் என்ற தலைப்பில் அகிலம் வெளியிட்ட அறிக்கைக்குத் தங்களுடைய கையொப்பங்களை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர். இது பச்சையான துரோகம். இதற்கு நேர் மாறான முறையில் மார்க்ஸ் நடந்து கொண்டார்; இந்த அறிக்கையைத் தானே எழுதியதாகவும் அதிலடங்கியிருக்கும் விஷயங்களுக்குத் தான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் பத்திரிகைகளில் பகிரங்கமாக அறிவித்தார்.

இந்தக் கட்டத்தில் பகூனிஸ்டுகள் மார்க்சியத்தின் மிகவும் ஆபத்தான எதிரிகளாக இருந்தார்கள். அவர்கள் குட்டி முதலாளித்துவ வர்க்கச் சித்தாந்திகள்; அரசியல் போராட்டத்தின் அவசியத்தையும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் தேவையையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் மறுத்தவர்கள். சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் கம்யூன் அனுபவத்தைத் தன்வயப்படுத்திக் கொள்வதைத் தடுக்கின்ற பிரதானமான தடையாக இந்தச் சமயத்தில் அராஜகவாதச் சித்தாந்தம் இருந்தது. 1871ல் லண்டன் மாநாட்டில் மார்க்சும் எங்கெல்சும் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் இந்த அனுபவத்தைக் குறித்துப் பேசும் பொழுது அரசியல் போராட்டத்தைக்

கைவிடுவது பேராபத்தானது என்று சுட்டிக் காட்டினார்கள், புரட்சிகரமான தொழிலாளர்கள் கட்சியை நிறுவுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள்; அத்தகைய கட்சி இல்லாததுதான் கம்யூனிஸ்டுகள் தோல்வி அடைய நேர்ந்த காரணங்களில் ஒன்று. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைப் பற்றி மார்க்சும் எங்கெல்சும் தயாரித்த தீர்மானத்தை மாநாடு நிறைவேற்றியது. அகிலத்தின் கட்டுப்பாட்டைக் குலைப்பதற்கும் பொதுக் கவுன்சிலை வெறும் செய்தி-தொடர்பு மையமாக மாற்றுவதற்கும் பகூனிஸ்டுகள் செய்த முயற்சிகளை எதிர்த்து இம்மாநாடு சில தீர்மானங்களை நிறைவேற்றியது; அகிலத்தின் சித்தாந்த மையம் மற்றும் போராட்டத் தலைமையகம் என்ற முறையில் பொதுக் கவுன்சிலின் பாத்திரத்தை மாநாடு வலியுறுத்தியது.

பொதுக் கவுன்சிலுக்கு எதிராக பகூனிஸ்டுகள் நடத்திக் கொண்டிருந்த அவதூறுப் பிரச்சாரத்தை எதிர்ப்பதற்காக **அகிலத்தில் பிளவுகள் ஏற்பட்டிருப்பதாகக் கற்பனைகள்** என்ற சுற்றறிக்கை லண்டன் மாநாட்டுக்குப் பிறகு வெளியிடப்பட்டது. அகிலத்தை உள்ளேயிருந்து நொறுக்க முயற்சி செய்த பகூனிஸ்டுகளின் சூழ்ச்சிகள், இரட்டை வேடம் மற்றும் பிளவு நடவடிக்கையை மார்க்சும் எங்கெல்சும் இச்சுற்றறிக்கையில் அம்பலப்படுத்தினார்கள். ''அராஜகம்'' என்ற பகூனிசக் கோஷத்தின் வஞ்சகமான சாராம்சத்தை, முழு அளவுக்கு ஆயுதபாணியாக இருக்கின்ற முதலாளி வர்க்கத்துக்கு முன்னால் பாட்டாளி வர்க்கத்தை நிராயுதபாணியாக்குகின்ற அதன் தீங்கான, ஆபத்

தான பாத்திரத்தை அவர்கள் விளக்கிக் கூறினர்கள்.

பகூனிஸ்டுகளுடன் நடத்திய போராட்டம் ஹேக் காங்கிரசில் (1872) அதன் உச்ச கட்டத்தை அடைந்தது. மார்க்ஸ் இக்காங்கிரசில் நிகழ்த்திய உரையில் பகூனிஸ்டுகளின் கொள்கையற்ற சகாக்களான சந்தர்ப்பவாத பிரிட்டிஷ் தொழிற்சங்கத் தலைவர்கள் முதலாளி வர்க்கத்தாலும் அரசாங்கத்தாலும் லஞ்சம் கொடுத்து வாங்கப்பட்டவர்கள் என்று கண்டனம் செய்தார். லண்டன் மாநாட்டில் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கையைப் பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அகிலத்தின் விதிகளில் 7அ ஷரத்தாக— பகூனிஸ்டுகளின் எதிர்ப்பை மீறி—ஹேக் காங்கிரஸ் சேர்த்தது. கட்சியின் பாத்திரத்தைப் பற்றி அறிக்கை பின்வருமாறு கூறியது செயல்திட்ட முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது: "சொத்துடைமை வர்க்கங்களினல் நிறுவப்பட்டிருக்கும் பழைய அரசியல் கட்சிகள் அனைத்தையும் எதிர்த்து நிற்கக் கூடிய அரசியல் கட்சியாகத் தொழிலாளி வர்க்கம் தன்னை அமைத்துக் கொண்டால் மட்டுமே அது சொத்துடைமை வர்க்கங்களின் ஒன்றுபட்ட சக்திக்கு எதிராகத் தன்னுடைய போராட்டத்தில் ஒரு வர்க்கமாகச் செயல்பட முடியும். சோஷலிஸ்டுப் புரட்சி வெற்றியடைவதற்கும் வர்க்கங்களை ஒழித்தல் என்ற அதன் இறுதி லட்சியம் நிறைவேறுவதற்கும் தொழிலாளி வர்க்கத்தை ஓர் அரசியல் கட்சியாக அமைப்பது அவசியமான நடவடிக்கையாகும்."* பகூனிஸ்டுகளின் பிளவு

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 17, பக்கம் 427 (ருஷ்ய மொழியில்).

நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்குமாறு நியமிக்கப் பட்ட விசேஷக் கமிஷனின் அறிக்கையைக் கேட்ட பிறகு ''கூட்டணியின்'' தலைவர்களான பகூனின் மற்றும் கில்யோமைச் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்திலிருந்து வெளியேற்றுவதென்று காங்கிரஸ் மிகவும் அதிகமான பெரும்பான்மையினால் முடிவு செய்தது. மார்க்ஸும் எங்கெல்ஸும் தெரிவித்த ஆலோசனையின்படி, பொதுக் கவுன்சிலின் தலைமை யகத்தை நியூயார்க் நகரத்துக்கு மாற்றுவதென்றும் இக்காங்கிரசில் முடிவு செய்யப்பட்டது.

ஹேக் காங்கிரஸ் முடிவடைந்த பிறகு ஆம்ஸ்டர் டாமில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மார்க்ஸ் பின்வருமாறு கூறினார்: ''இல்லை, நான் அகிலத்தை விட்டு விலகிவிடவில்லை; என்னுடைய முந்திய நடவடிக்கையைப் போலவே என் வாழ்க்கையின் எஞ்சிய பகுதியும், சீக்கிரமாகவோ, தாமதமாகவோ உலக முழுவதிலும் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சிக்கு இட்டுச் செல்லப் போகின்ற—இது நம்முடைய ஆழமான நம்பிக்கை—சமூகக் கருத்துக் களின் வெற்றிக்கே அர்ப்பணிக்கப்படும்.''*

ஹேகில் நடைபெற்ற காங்கிரஸ் அகிலத்தின் கடைசிக் காங்கிரசாக இருந்தது. அகிலம் இயங் கிய எட்டு வருட காலங்களில் அது மார்க்ஸ், எங்கெல்சின் தலைமையில் மாபெரும் பாதையைக் கடந்து புகழடைந்தது. விஞ்ஞானக் கம்யூனிசத் தின் மூலவர்கள் பல்வேறு சோஷலிஸ்டு மற்றும் அரை சோஷலிஸ்டுக் குறுங்குழுக்களை எதிர்த்து

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 18, பக்கம் 155 (ருஷ்ய மொழியில்).

நடத்திய போராட்டம் மார்க்சியத்தின் சித்தாந்த வெற்றியில் முடிவடைந்தது.

எனினும் கம்யூன் வீழ்ச்சியுடன் மொத்த வரலாற்றுச் சூழ்நிலையிலும் ஒரு தீவிரமான மாற்றம் ஏற்பட்டது; லெனின் அதைப் பின்வரும் சொற்களில் வர்ணித்தார்: ''...பிரிட்டனிலுள்ள தொழிலாளி ஏகாதிபத்திய லாபங்களால் ஊழல் படுத்தப்பட்டான்; பாரிசில் கம்யூன் தோற்கடிக்கப் பட்டது; ஜெர்மனியில் அண்மையில் (1871) முதலாளித்துவத் தேசிய இயக்கம் வெற்றி பெற்றிருந்தது; அரை நிலப்பிரபுத்துவ ருஷ்யா நெடுங் காலமாக உறக்கத்தில் இருந்தது.

''மார்க்சும் எங்கெல்சும் காலத்தைச் செம்மையான முறையில் மதிப்பீடு செய்தார்கள்; சர்வதேச நிலையை அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டார்கள்; சமூகப் புரட்சியின் துவக்கத்தை அணுகுவது மெதுவாகவே இருக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.''*

போலீஸ் ஒடுக்குமுறைகளும் பகூனிஸ்டுகளின் பிளவு நடவடிக்கைகளும் ஐரோப்பாவில் அகிலத்தின் வேலைகளுக்கு மிகவும் நெருக்கடியான நிலைமைகளை ஏற்படுத்தின. மேலும், புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் வரலாறு தொழிலாளி வர்க்கத்துக்கு முன்னுல் வைத்த கோரிக்கைகளுக்கு அகிலத்தின் பழைய வடிவங்கள் இனிமேல் பொருத்தமின்றி இருந்தன. மார்க்சும் எங்கெல்சும் புதிய சர்வதேச நிலைமையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 92.

சோஷலிஸ்டுப் புரட்சிக்குச் சரியான தயாரிப்பு களைச் செய்கின்ற கடமையை, முதலில் ஒவ்வொரு நாட்டிலும் பெருந்திரளான பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைக்கின்ற கடமையைப் பாட்டாளி வர்க்கத்துக்கு முன்னால் வைத்தனர். கம்யூனின் அனுபவம் இந்தக் கடமையின் முக்கியத்துவத் தையும் அவசரத்தையும் வலியுறுத்தியது. அதே சமயத்தில் அகிலம் இந்தக்' கடமையை நிறை வேற்றுவதற்கு தளத்தைத் தயாரித்திருந்தது: அகிலத்தில் மார்க்சியச் சித்தாந்தத்தின் வெற்றியும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த ஊழியர்களுக்குத் தரப்பட்ட பயிற்சியும்—இவர்கள் எதிர்காலத்தில் தொழிலாளர்கள் கட்சியின் மூலப் பகுதியாக இருப்பார்கள்—பாட்டாளி வர்க்கக் கட்சிகளை நிறுவுவதற்கு வழி வகுத்தன. மார்க்சின் தலை மையின் கீழ் அகிலம் ''சோஷலிசத்துக்கான பாட் டாளி வர்க்க, சர்வதேசப் போராட்டத்துக்கு அடிப்படைகளை''* அமைத்துக் கொடுத்துத் தன் னுடைய வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி யது. பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒரு மைப்பாடு தொழிலாளர்கள் இயக்கத்தின் புதிய கட்டத்துக்கு ஏற்ற புதிய வடிவங்களில் வளர்ச்சி யடைவதும் பலமடைவதும் தொடர்ந்தது.

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 29, p. 307.

# மார்க்சின் வாழ்க்கையில் கடைசிப் பத்து வருடங்கள்

மூலதனத்தின் இரண்டாம் மற்றும் மூன்றும் தொகுதிகள் சம்பந்தமான வேலைகள் எழுபதுக் களில் மார்க்சின் தத்துவப் பணியில் முதலிடத் தைப் பெற்றன. அவர் புதிய விவரங்களைச் சேகரித் தார், முன்னர் எழுதியவற்றில் சில பகுதிகளை மறுபடியும் திருத்தி எழுதினர். அவர் நிலப் பிரச்சினைகளின் மீது தாக்கத்தைக் கொண்டிருக் கின்ற இரசாயனம், உயிரியல் மற்றும் இதர விஞ்ஞானங்களின் வளர்ச்சியைத் தொடர்ந்து கவனித்து வந்தார். தொழில்நுட்ப முன்னேற்றம், குறிப்பாக மின்சாரத்தை வெகு தூரத்திலுள்ள இடங்களுக்கு அனுப்புவதற்காகச் செய்யப்பட்ட ஆரம்பப் பரிசோதனைகளை அவர் அக்கறையுடன் கவனித்தார். அவர் ஐம்பதுக்களில் தொடங்கிய கணித ஆராய்ச்சிகள் இப்பொழுது சுதந்திரமான அர்த்தத்தைப் பெற்றன.

புதிய, தற்சிந்தனையான முறையில் டிபரென் ஷியல் கால்குலசை நிறுவுகின்ற குறிப்புகளைக் கொண்ட மார்க்சின் கணிதக் கையேடுகளை அவ ருடைய மரணத்துக்குப் பிறகு வெளியிடுவதற்கு எங்கெல்ஸ் உத்தேசித்திருந்தார்.



11-902

அந்த வருடங்களில் மார்க்ஸ் தன்னுடைய நேரத்தில் பெரும் பகுதியை வரலாற்று ஆராய்ச்சிகளில், குறிப்பாகக் கூட்டு நிலவுடைமையின் வரலாற்றை ஆராய்வதற்குப் பயன்படுத்தினர். மோர்கன் எழுதிய **பண்டைய சமுதாயம்** (1877) என்ற புத்தகத்தை அவர் மிகவும் உயர்வாகக் கருதினர்; ஏனென்றல் வட அமெரிக்காவின் செவ்விந்தியர்களின் குடும்ப உறவுகளில் பூர்விக சமூக அமைப்பை விளக்குகின்ற திறவுகோலை மோர்கன் கண்டு விளக்கியிருந்தார். மார்க்ஸ் இப்புத்தகத்திலிருந்து சில பகுதிகளைக் குறிப்பெடுத்துக் கொண்டு தன்னுடைய கருத்துக்களைச் சேர்த்து எழுதி வைத்திருந்தார்; மோர்கனுடைய புத்தகத்தையும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் ஒளியில் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி ஒரு கட்டுரை எழுதுவதற்கு அவர் உத்தேசித்தார். அவர் மரணமடைந்த பிறகு எங்கெல்ஸ் இந்தக் குறிப்புகளைத் தான் எழுதிய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில் பயன்படுத்திக் கொண்டார்; இந்நூலை எழுதுகின்ற பொழுது தன்னுடைய நண்பர் தன்னிடம் ஒப்படைத்துச் சென்ற பணியைச் சிறிதளவிலாவது நிறைவேற்றுவதாக அவர் கருதினர்.

மார்க்ஸ் வரலாற்றில் எவ்வளவு அதிகமான அக்கறை கொண்டிருந்தார் என்பதை அவர் 1879—1880ல் தயாரித்த **இந்திய வரலாற்றுக் குறிப்புகள்** என்ற விரிவான நூலிலும் அவர் 1881—1882ல் இன்னும் விரிவாகத் தொகுத்த உலக வரலாற்றுக் குறிப்புகளிலும் காண முடியும்.

அவர் காலவரிசைப்படித் தொகுத்திருக்கும் குறிப்பு கள் பல்வேறு சகாப்தங்கள் மற்றும் மக்களினங் களின் வரலாற்றுச் சம்பவங்களை சுவாரசியமில் லாமல் அடுக்கித் தரவில்லை; வரலாற்று நிகழ்ச்சி கள் உழைக்கும் மக்கள் மற்றும் சுரண்டப்படுகின்ற மக்களின் நலன்களை எப்படிப் பாதிக்கின்றன என்பதை அவர் ஆராய்கிறார், தன்னுடைய குறிப்பு களில் உழைக்கும் மக்களுடைய எதிரிகளை ஆவேசத் துடன் கண்டனம் செய்கிறார்.

மார்க்ஸ் எந்த அறிவுத் துறையை அணு கினாலும் அவர் எப்பொழுதும் போராட்டக்காரர் என்ற நிலையிலிருந்து, வரலாற்று ரீதியான வளர்ச்சி யின் புற நிலையான போக்குடன் பொருந்துகின்ற நலன்களைக் கொண்ட, மிகவும் வளர்ச்சியடைந்த வர்க்கத்தின் கோணத்திலிருந்து ஆராய்ந்தார். ''மார்க்சுக்கு விஞ்ஞானம் வரலாற்றைச் செலுத்து கின்ற, புரட்சிகரமான சக்தியாகும்.'' (எங்கெல்ஸ்.)

மார்க்சின் மகளான லௌராவைத் திருமணம் செய்து கொண்ட போல் லஃபார்க் மார்க்சி னுடைய பல்துறையிலும் அகல்விரிவான அறிவையும் அவருடைய விஞ்ஞான ஆர்வங்களின் வியக்கத் தக்க நெடும் பரப்பையும் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்: ''மார்க்சின் மூளையில் நம்ப முடியாத அளவுக்கு வரலாற்றிலிருந்தும் இயற்கை விஞ்ஞா னத்திலிருந்தும் தத்துவக் கொள்கைகளிலிருந்தும் ஏராளமான உண்மைகள் குவிந்து கிடந்தன. பல்லாண்டுகளாகப் பணி புரிந்து தாம் சேர்த்து வைத்த அறிவையும் அவதானிக்கைகளையும் பயன் படுத்துவதில் அவர் வியக்கத்தக்க பேராற்றல் படைத்திருந்தார்.... அவரது மூளை துறைமுகத்தில்

நீராவி ஏற்றி நின்றிருக்கும் போர்க் கப்பல் போன்றது; எந்தக் கருத்துக் குவியலுக்கு உள்ளும் நுழையும் ஆற்றல் வாய்ந்தது.

''மூலதனம் என்ற நூல் நமக்கு அற்புதமான பலமும் உன்னதமான ஞானமும் கொண்ட அவரது மனத்தைத் திறந்து காட்டுகிறது என்பதில் ஐய மில்லை. ஆனால் எனக்கு, மார்க்சை மிக நெருக் கமாக அறிந்திருந்த மற்றவர்களைப் போலவே, மூலதனம் நூலோ அல்லது அவரது இதர படைப்பு களோ அவரது மேதையின் முழுப் பரிமாணத் தையோ அல்லது அறிவின் விசாலத் தன்மை யினையோ எடுத்துக் காட்டவில்லை என்றே கூறு வேன். தமது படைப்புகளை விட அவர் மிக மிக உயர்ந்தவர்.''*

மார்க்சினுடைய வாழ்க்கையின் இறுதி வரை யிலும் அவருடைய தத்துவ ஆராய்ச்சிகள் அவரு டைய புரட்சிகரமான நடவடிக்கையுடன் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருந்தன. ''எல்லா வற்றுக்கும் மேலாக மார்க்ஸ் ஒரு புரட்சியாளர். போராட்டமே அவருடைய களம்.'' (எங்கெல்ஸ்.)

அகிலம் கலைக்கப்பட்ட பிறகு சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் மார்க்சின் பாத்திரம் குறைந்துவிட வில்லை; தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சி யுடன் அப்பாத்திரமும் அதிகரித்தது. ''முதலா வது அகிலம் அதன் வரலாற்றுப் பாத்திரத்தை

---

* மார்க்சையும் எங்கெல்சையும் பற்றிய நினைவுக்குறிப்புகள், பக்கம் 112.

முடித்து விட்டது; உலகத்தின் எல்லா நாடுகளிலும் தொழிலாளர் இயக்கத்தின் மிகச் சிறப்பான வளர்ச்சியின் காலகட்டத்துக்கு, இயக்கம் வீச்சில் வளர்ச்சியடைந்து தனிப்பட்ட ஒவ்வொரு நாட்டிலும் வெகுஜன சோஷலிஸ்டுத் தொழிலாளி வர்க்கக் கட்சிகள் அமைக்கப்பட்ட காலகட்டத்துக்கு இப்பொழுது வழி விட்டது.''*

ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைப்பதை முக்கியமான வரலாற்றுக் கடமையாக வற்புறுத்திய மார்க்ஸ் அந்தக் குறிப்பிட்ட நாட்டின் பொருளாதாரம், அரசியல் வாழ்க்கை, வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தத்துவார்த்த நிலை, பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைப்பதில் ஏற்படக் கூடிய தடைகள் ஆகியவற்றை எப்பொழுதும் கவனத்தில் கொண்டிருந்தார்.

''தத்துவத் துறையிலும் நடைமுறையிலும் தன்னுடைய சாதனைகள் மூலம் மார்க்ஸ் தனிச் சிறப்பான நிலையை அடைந்திருந்தபடியால் உலக முழுவதிலுமுள்ள தொழிலாளி வர்க்க இயக்கங்கள் அனைத்தையும் சேர்ந்த மிகச் சிறந்த நபர்கள் அவரிடம் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். நெருக்கடியான நேரங்களில் அவர்கள் மார்க்சிடம் அறிவுரைக்கு வருவார்கள், அவருடைய அறிவுரையே மிகச் சிறப்பாக இருப்பதைக் காண்பார்கள்''** என்று சர்வதேசத் தொழிலாளர்கள்

---

* V.I.Lenin, *Collected Works*, Vol. 21, p. 49.

** K. Marx, F. Engels, *Selected Correspondence*, p. 324.

இயக்கத்தில் மார்க்சினுடைய மகத்தான செல்வாக்கைப் பற்றி எங்கெல்ஸ் 1881ம் வருடத்தில் எழுதினார்.

அன்று பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையிலிருந்த ஸ்பெயின், ஸ்விட்சர்லாந்து மற்றும் இத்தாலியில் பாட்டாளி வர்க்கக் கட்சிகளை நிறுவுவதற்கு முக்கியமான தடையாகக் குட்டி முதலாளி வர்க்க அராஜகவாதச் சக்திகள் இருந்தன. மார்க்சும் எங்கெல்சும் **சோஷலிஸ்டு ஜனநாயகத்தின் கூட்டணி** என்ற விசேஷமான பிரசுரத்தில் அகிலத்தில் பகூனிஸ்டுகளின் பிளவு நடவடிக்கைகளையும் ஸ்விட்சர்லாந்து, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ருஷ்யாவில் தொழிலாளி வர்க்க மற்றும் புரட்சிகர இயக்கத்தில் அவர்களுடைய சீர்குலைவுப் பாத்திரத்தையும் விவரித்தனர்.

ஜெர்மனியில் மார்க்சியம் பரவுவதற்கு லஸ்ஸாலியர்கள் முக்கியமான தடையாக இருந்தனர். பெபெலும் லீப்க்னெஹ்டும் தொடங்கிய எய்செனெஹ் கட்சியில் கூட அவர்களுடைய செல்வாக்கு உணரப்பட்டது. மார்க்ஸ், எங்கெல்ஸ் எச்சரிக்கை செய்திருந்த போதிலும் 1875ல் எய்செனெஹ் கட்சியினர் லஸ்ஸாலியர்களுடன் கூட்டணி அமைத்ததில் அந்தச் செல்வாக்கு வன்மையாக வெளிப்பட்டது. கோத்தா ஒற்றுமைக் காங்கிரசுக்காகத் தயாரிக்கப்பட்ட நகல் திட்டம் இந்தச் சமரசத்தின் விளைவாகும். மார்க்ஸ் இந்த வேலைத் திட்டத்தைக் காரசாரமான, ஈவிரக்க மற்ற முறையில் விமர்சனம் செய்து **கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்** (1875) என்ற நூலை எழுதினார்.

லஸ்ஸாலியர்களின் போலியான, விஞ்ஞான-எதிர்ப்பான, சந்தர்ப்பவாதக் கருத்துக்களையும் கோஷங்களையும் விமர்சித்த மார்க்ஸ் இந்நூலில் ஏராளமான புதிய, மிக முக்கியமான தத்துவப் பிரச்சினைகளை எழுப்பியதோடு அவற்றுக்குத் தீர்வு களையும் கூறினர். மார்க்ஸ் தான் கண்டுபிடித்த வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விதிகளை அடிப் படையாக வைத்து **கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்** என்ற நூலில் தொலைவிலுள்ள எதிர் காலத்தை ஊடுருவிக் கண்டு கம்யூனிஸ்டுச் சமூகத்தின் பிரதான உருவரைகளை விவரித்தார். ''வளர்ச்சித் தத்துவத்தை—அதன் முரணற்ற, முழுநிறை வான, தேர்ந்தாய்ந்த, சாரப்பொருள் வடிவில்—நவீன முதலாளித்துவத்தின் ஆய்வுக்காகக் கையா ளுதலே மார்க்சின் தத்துவம் அனைத்தும். இயற் கையாகவே இந்தத் தத்துவத்தை முதலாளித்துவத் தின் வரப் போகும் வீழ்ச்சி, வருங்காலக் கம்யூனி சத்தின் வருங்கால வளர்ச்சி ஆகிய இரண்டிலும் கையாளும் பிரச்சினை மார்க்சின் முன் எழுந்தது.

''...கற்பனைப் படைப்பை உருவாக்கும் முயற்சி யினை, தெரிந்து கொள்ள முடியாத ஒன்றைப் பற்றிய பயனற்ற ஊகங்களில் இறங்கும் முயற்சி யினை மார்க்சிடம் இம்மியும் காண முடியாது. உதாரணமாய், ஒரு புதிய உயிர்வகை குறிப்பிட்ட இந்த வழியில்தான் தோன்றியது, திட்டவட்ட மான இந்தத் திசையிலேதான் மாறுதலடைந்து வந்தது என்பது தெரிந்ததும், உயிரியல் விஞ்ஞானி ஒருவர் இந்த உயிர்வகையின் வளர்ச்சியைப் பற்றிய பிரச்சினையை எப்படி ஆராய்வாரோ, அதே முறையில்தான் மார்க்ஸ் கம்யூனிசத்தைப் பற்றிய

பிரச்சினையை ஆராய்ந்தார்''* என்று லெனின் எழுதினார்.

மார்க்ஸ் கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனத்தில் இம்முறையைக் கையாண்டு முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறுவதைப் பற்றியும் கம்யூனிசத்தின் இரண்டு கட்டங்களைப் பற்றியும் மேதாவிலாசமான சில கருதுகோள்களை வகுத்துக் கூறினார். கம்யூனிசத்தின் முதல் கட்டத்தில் (வழக்கமாக, சோஷலிசம் என்று சொல்லப் படுவது) — அதாவது, அதன் பொருளாதார முதிர்ச்சியின் முதல் நிலையில் — உழைப்புக்கு ஏற்ற வினியோகம் என்ற கோட்பாடு நிலவ வேண்டும். தொழிலாளி சமூகத்துக்குக் கொடுக்கின்ற மொத்தப் பொருளிலிருந்து உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கும் பொது நுகர்வு நிதிகளுக்கும் செலவிட்ட பகுதிகளைக் கழித்த பிறகு எவ்வளவு எஞ்சுகிறதோ, அதே அளவைத் தொழிலாளி சமூகத்திலிருந்து பெறுகிறார். ''கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில் தனி மனிதனை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன் கூட கருத்து உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்த பின், உழைப்பு என்பது பிழைப்புக்கான சாதனமாக மட்டுமின்றி வாழ்க்கையின் முதற்பெரும் தேவையான பிறகு, தனி மனிதனுடைய சர்வாம்ச வளர்ச்சியுடன் உற்பத்திச் சக்திகளும் அதிகரித்து விட்ட பிறகு, பொதுச் சமுதாயச் செல்வத்தின்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 6, பக்கங்கள் *130 — 131.*

அருவிகள் எல்லாம் மேலும் அபரிமிதமாகப் பெருக்கெடுத்து ஓடும் பொழுது—அப்பொழுதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முழுமையாகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகையில் 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப!' என்பதைப் பொறித்துக் கொள்ளும்''* என்று மார்க்ஸ் எழுதினர்.

கம்யூனிசத்தின் இரண்டு கட்டங்களைப் பற்றிய போதனை மார்க்சின் புதிய, மிக முக்கியமான கண்டுபிடிப்பாகும்; இப்போதனை அவருடைய முன்னறிவிப்புகளின் மேதாவிலாசத்தை நிரூபிக்கிறது.

**கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனத்தில்** மார்க்ஸ் அரசு பற்றித் தன்னுடைய புரட்சிகரமான போதனையைப் பூர்த்தி செய்தார். மாறும் கட்டத்தின் அவசியத்தையும் வரலாற்று ரீதியில் அதன் தவிர்க்க இயலாத தன்மையையும் அவர் நிறுவுகின்ருர்; அந்த மாறும் கட்டத்தில் அரசு பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாகவே இருக்க வேண்டும்.

மாறும் கட்டத்துடன் இணைந்துள்ள பிரச்சினைகளையும் கம்யூனிசத்தின் இரண்டு கட்டங்களையும் பற்றித் தெளிவுபடுத்திக் கூறுவதுடன் மார்க்ஸ் இன்னும் சில தத்துவ ரீதியான மற்றும் அரசியல் பிரச்சினைகளையும் எழுப்பினர்; அவை இன்றும் கூட முக்கியமானவையாக இருக்கின்றன. உதாரணமாக, தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்த

---

* K. Marx, F. Engels, *Selected Works*, Vol. 2, p. 24.

மட்டில் ''மற்ற எல்லா வர்க்கங்களும் ஒரு பிற்போக்குக் குவியலாகவே இருக்கின்றன'' என்ற லஸ்ஸாலியக் கோட்பாட்டில் அடங்கியிருக்கின்ற தவறையும் அரசியல் ஆபத்தையும் மார்க்ஸ் எடுத்துக் காட்டினர். இது மிகவும் குறுக்கப்பட்ட, மிகப் பூர்விகமான கருத்தாகும்; விவசாய வர்க்கம் மற்றும் இதர உழைக்கின்ற மக்களிடமிருந்து பாட்டாளி வர்க்கம் தனிமைப்படுவதற்கு வழி வகுக்கக் கூடியது; ஜனநாயகத்துக்கும் சோஷலிசத்துக்கும் முன்னணியில், முன்வரிசையில் நின்று போராடுகின்ற கடமையைப் பாட்டாளி வர்க்கம் நிறைவேற்ருதபடித் தடுக்கும்.

கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம் மார்க்ஸியத்துக்கு முக்கியமான ஆவணமாகும்; தத்துவ நோக்கில் அது மிகவும் அரிய ஆவணமே.

மார்க்சும் எங்கெல்சும் முன்னறிவித்ததைப் போல, சமரசம் செய்து கொண்டதனுல் கோத்தாவில் ஏற்பட்ட ஒற்றுமை ஸ்திரமில்லாத குட்டி முதலாளி வர்க்கச் சக்திகளுக்குக் கட்சியின் கதவுகளைத் திறந்து விட்டது, கட்சியின் தத்துவார்த்த, அரசியல் மட்டத்தைக் குறைத்தது. பெர்லின் பல்கலைக்கழகத்தில் துணைப்பேராசிரியராக இருந்த ஒய்கேன் டூரிங் புதிதாக அறிவித்த ''சோஷலிஸ்டு அமைப்பை'' அநேகமாக எல்லா ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத் தலைவர்களுமே ஏகமனதாக வரவேற்றனர் என்பது இதற்குச் சான்ருகும். டூரிங்கின் ''அமைப்பு'' காலாவதியான கருத்துக்களையும் குட்டி முதலாளித்துவ வர்க்கத் தத்துவங்களையும் கொண்ட கதம்பக் கூளமாகும்.

மார்க்ஸ் மூலதனத்தை எழுதுகின்ற பணியைத்

தொடர்வதற்காக டூரிங்கை விமர்சிக்கின்ற பொறுப்பை எங்கெல்ஸ் மேற்கொண்டார். தன்னுடைய நண்பர் டூரிங்குக்கு மறுப்பு என்ற நூலை எழுதிக் கொண்டிருந்த பொழுது மார்க்ஸ் அவருடன் சுறுசுறுப்பாக ஒத்துழைத்தார். அதை அச்சிடுவதற்கு முன்பாக எங்கெல்ஸ் கையெழுத்துப் படிவம் முழுவதையுமே மார்க்சிடம் படித்துக் காட்டினார். மேலும், அப்புத்தகத்தில் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய பகுதியின் பத்தாவது அத்தியாயத்தை மார்க்ஸ் எழுதினார்; இந்த அத்தியாயம் அரசியல் பொருளாதாரத்தின் வரலாற்றைச் சுருக்கமான, ஆனால் செறிவான உருவரையில் எடுத்துக் கூறுகிறது. மார்க்சியத்தை உயர்த்திப் பிடிப்பதிலும் வளர்ப்பதிலும் பரப்புவதிலும் டூரிங்குக்கு மறுப்பு பெரும் பாத்திரத்தை வகித்தது. மார்க்சியத் தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம் மற்றும் விஞ்ஞானக் கம்யூனிசத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை விளக்கும் கலைக்களஞ்சியம் என்று கூட அதைக் கூறலாம்.

ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் அணிகளில் நிறைந்திருந்த தத்துவ ரீதியான குழப்பம் ஆபத்தான அரசியல் விளைவுகளை ஏற்படுத்தும் என்று மார்க்சும் எங்கெல்சும் எச்சரிக்கை செய்தனர். இந்த எச்சரிக்கை எவ்வளவு சரியானது என்பதை வாழ்க்கை நிரூபித்தது. 1878 அக்டோபர் மாதத்தில் பிஸ்மார்கின் சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் வந்த பொழுது கட்சிக்கு முதல் பெரிய சோதனை ஏற்பட்ட நேரத்தில் கட்சியில் சந்தர்ப்பவாத ஊசலாட்டம் மிக அதிகமாக இருந்தது. ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி

தொழிலாளர்கள் கட்சியாக இருப்பதற்கே ஆபத் தேற்பட்டது. மார்க்சும் எங்கெல்சும் அதன் தலை வர்களுக்கு எழுதிய கடிதங்களில், குறிப்பாக 1879 செப்டெம்பர் 17—18ன் பிரபலமான சுற்றறிக்கைக் கடிதத்தில் ஜெர்மன் சமூக-ஜனநாயக வாதிகள் மத்தியில் பகிரங்கமான சந்தர்ப்பவாதத் தையும் (கியோஹ்பர்க், பெர்ன்ஷ்டைன் மற்றும் சிலர்) குறுங்குழுவாத மற்றும் அராஜகவாதப் போக்குகளையும் (யோ. மோஸ்த் மற்றும் சிலர்) உறுதியாகக் கண்டனம் செய்தனர். தொழிலாளர் கள் கட்சியை ஒரு குட்டி முதலாளி வர்க்கச் சீர்திருத்தவாதக் கட்சியாக மாற்றுவதற்கு முயன்ற சந்தர்ப்பவாதச் சக்திகளின் மூலம் ஏற்படக் கூடிய பேராபத்தைப் பற்றி மார்க்சிய மூலவர்கள் ஜெர் மன் சமூக-ஜனநாயகத் தலைமைக்கு விளக்கினர் கள். புரட்சிகரத் தத்துவத்தின் தூய்மையைப் பாதுகாத்து தத்துவத்திலும் நடைமுறையிலும் சந்தர்ப்பவாதத்தின் ஒவ்வொரு வெளிப்பாட் டையும் எதிர்த்துப் போராடிய மார்க்சும் எங் கெல்சும் அந்தச் சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் உருவாக்கிய நெருக்கடியான நிலைமைகளில் ஜெர்மன் சமூக-ஜனநாயகம் சரியான புரட்சிகரத் திசை வழியைப் பின்பற்றுவதற்கு உதவி செய்தனர். இரகசியமான ஸ்தாபனத்தை அமைத்தல், கட்சி யின் புரட்சிகரச் செய்தித்தாளை இரகசியமாக வெளியிடுதல், சட்ட பூர்வமான வேலைகளுடன் சட்ட விரோதமான வேலைகளையும் இணைத்தல், நாடாளுமன்ற அரங்கத்தைப் பயன்படுத்தி பெருந் திரளான மக்களுக்கு அறிவூட்டுகின்ற வகையில் அரசாங்கத்தின் கொள்கையை அம்பலப்படுத்துதல்,

முதலிய நடவடிக்கைகளைக் கொண்ட பாதையை அவர்கள் ஜெர்மன் சமூக-ஜனநாயகத்துக்கு வகுத்துக் கொடுத்தார்கள். மார்க்சும் எங்கெல்சும் பிரதானமாக உழைக்கும் மக்களிடம், அவர்களுடைய துணிவிலும் முன்முயற்சியிலும் முழு நம்பிக்கை கொண்டிருந்தனர்.

பிஸ்மார்க் கொண்டு வந்த சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டத்தினால் குழப்பமடைந்திருந்த கட்சித் தலைமை மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் கடுமையான விமர்சனம், உழைக்கும் மக்களின் நிர்ப்பந்தம் ஆகியவற்றினால் தன்னுடைய அரசியல் கொள்கையைச் சரிப்படுத்திக் கொள்ளத் தொடங்கியது. ஆனால் எல்லாச் சந்தர்ப்பவாத ஊசலாட்டங்களும் கட்சியில் உடனே நின்று விட்டன என்பது இதன் அர்த்தமல்ல. வலதுசாரிப் பகுதி நாடாளுமன்றக் குழுவிற்குள் தன் கோட்டையை அமைத்துக் கொண்டு அவ்வப்பொழுது கட்சிக் கொள்கைக்கு எதிராகப் போராடியது. மார்க்சும் எங்கெல்சும் கட்சிக்குள் சந்தர்ப்பவாதத்தின் மூல வேர்களைக் குட்டி முதலாளி வர்க்கத்தின் தன்மையிலும் அதன் உள்ளுறைந்திருக்கும் ஃபிலிஸ்டைன் உணர்ச்சியிலும் கண்டனர்.

மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தில் ஏன் இவ்வளவு அதிகமான கவனம் செலுத்தினார்கள் என்றால் பாரிஸ் கம்யூன் வீழ்ச்சியடைந்த பிறகு சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்கு ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கியது என்பதனால்தான். அகிலத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றி நிறுவப்பட்ட முதல் கட்சியாக இருந்த இந்தக் கட்சி அப்போது மற்ற

நாடுகளில் அமைக்கப்பட்டு வந்த தொழிலாளர் கள் கட்சிகளுக்கு ஒரு உதாரணமாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்கள்.

இந்தக் கட்சிகள் தோன்றிக் கொண்டிருந் ததைக் கவனித்த மார்க்சும் எங்கெல்சும் அவற்றுக்கு ஆலோசனை கூறி உதவி செய்ய முயற்சி செய்தனர். உதாரணமாக, பிரான்சின் தொழிலாளர் கட்சியின் செயல்திட்டத்தைத் தயாரிக்கின்ற பணியில் மார்க்ஸ் பங்கெடுத்தார்: 1880ம் வருடத்தில் லண்டனுக்கு வந்த ஜூல் கேட்டிடம் மார்க்ஸ் முன்னுரையைத் தானே கூற அவர் எழுதிக் கொண்டார். சீர்திருத்தவாதத்தின் ஆதரவாளர்களான சாத்தியப்பாட்டுவாதிகளுக்கு ரதிராக ஜூல் கேட்டும் போல் லஃபார்க்கும் நடத்திய போராட்டத்தை மார்க்சும் எங்கெல்சும் ஆதரித்தார்கள். அதே சமயத்தில் அவர்கள் கேட்டு மற்றும் லஃபார்க்கை (குறிப்பாக, கேட்டை) புரட்சிகரமான சொற்பொழிவை மட்டும் செய் கின்ற போக்கிற்காக, வறட்டுக் கோட்பாட்டு வாதத்திற்காக, போதிய அளவுக்கு நெகிழ்ச்சியான செயல்தந்திரத்தைப் பின்பற்றத் தவறியமை மற்றும் இதரவைகளுக்காக விமர்சனம் செய்தார்கள். 1882இல் கேட்டைப் பின்பற்றுபவர்களுக்கும் சாத்தியப்பாட்டுவாதிகளுக்கும் இடையில் பிளவு ஏற்பட்ட பொழுது மார்க்சும் எங்கெல்சும் அதை ஒரு ஆக்க பூர்வமான நிகழ்வு, தொழிலாளர் கட்சியின் வளர்ச்சியில் முன்னே வைத்த காலடி என்று மதிப்பிட்டனர்.

பிரான்சில் தொழிலாளி வர்க்கம் கட்டுக் கோப்பான குட்டி முதலாளி வர்க்கச் சூழலின்

தாக்கத்தைக் கொண்டிருந்தது; அங்கே தொழிலாளர் கட்சியை நிறுவுகின்ற பொழுதே கூர்மையான உள்கட்சிப் போராட்டத்தையும் நடத்த வேண்டியிருந்ததென்றால், பிரிட்டனில் பாட்டாளி வர்க்கக் கட்சியை நிறுவுவதற்கு இன்னும் அதிகமான கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. மொத்தத்தில் பிரிட்டிஷ் தொழிலாளர்களின் போராட்டங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளுக்கும் முதலாளித்துவ உறவுகள் என்ற வட்டத்துக்குள் சீர்திருத்தங்களுக்கும் மட்டுமே நடைபெற்றன. 1870க்களுக்குப் பிறகு ஜெர்மனி மற்றும் அமெரிக்கா போட்டியிட்டதனால் பிரிட்டனுடைய தொழில் துறை ஏகபோகம் சரிகின்ற சமிக்கைகள் தோன்றத் தொடங்கியிருந்தாலும் அந்த நாடு தன்னுடைய காலனி ஏகபோகத்தை இன்னும் வைத்துக் கொண்டிருந்தது; ஆகவே மிகை லாபங்களைப் பெற்றுக் கொண்டிருந்த பிரிட்டிஷ் முதலாளிகள் பிரிட்டிஷ் தொழிலாளர்களில் மேல்தட்டுக்களைச் சேர்ந்தவர்களுக்குச் சில ரொட்டித் துண்டுகளை வீசி எறிய முடிந்தது. அரசியலில் பிரிட்டிஷ் தொழிலாளர்களின் பின்தங்கிய நிலைமைக்கு அவர்கள் தத்துவத்தைப் புறக்கணிப்பது ஒரு காரணம் என்று மார்க்ஸ் கருதினார்.

1880க்களின் தொடக்கத்திலிருந்து பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் எழுச்சியினாலும் ஐரோப்பாக் கண்டத்தில் சோஷலிஸ்டு இயக்கத்தின் வெற்றிகளினாலும் பிரிட்டனிலும் சோஷலிசத்தைப் பற்றி அக்கறை பெருகியது என்பது மெய்யே. இந்தச் சமயத்தில் ஹைன்ட்மன் எழுதிய **எல்லோருக்கும் இங்கிலாந்து** என்ற பிரசுரம்

வெளியாயிற்று. இப்பிரசுரத்தில் உழைப்பு மற்றும் மூலதனத்தைப் பற்றிய அத்தியாயங்களில் மார்க்சின் மூலதனத்தில் உள்ள அத்தியாயங்களின் உள்ளடக்கம் திருப்பி எழுதப்பட்டிருந்தது; ஆனல் எங்கிருந்து எடுக்கப்பட்டதென்ற ஆதாரமோ, ஆசிரியர் பெயரோ குறிப்பிடப்படவில்லை. இந்த அருவருக்கத்தக்க நடவடிக்கையைக் கண்டு கடுங் கோபமடைந்த மார்க்ஸ் ஸோர்கேக்குப் பின்வருமாறு எழுதினர்: ''இம்மனதுக்கினிய மத்தியதர வர்க்க எழுத்தாளர்கள் — அவர்கள் நிபுணர்களாக இல்லாதிருந்தால் — அனைவரும் அதிர்ஷ்டவசமாக அவர்கள் அறிந்து கொண்ட எப்படிப்பட்ட புதிய சிந்தனைகளையாவது உபயோகித்து உடனடியாகப் பணம் அல்லது பெயர் அல்லது அரசியல் முதலெடுக்க வேண்டுமென்று துடிக்கிறார்கள். என்னிடமிருந்து இயன்ற அளவுக்கு எல்லாவற்றையும் மிகச் சுலபமான வழியில் தெரிந்து கொள்வதற்காக இந்த நபர் பல மாலைப் பொழுதுகளில் பல கருத்துக்களை என்னிடமிருந்து திருடியிருக்கிறார்.''* ''அந்நியர்களால் கற்பிக்கப்படுவதை ஆங்கிலேயர்கள் விரும்புவதில்லை'' என்று கைண்டுமன் தன்னை நியாயப்படுத்துகின்ற முறையில் கூறிய பொழுது மார்க்ஸ் தனக்கேற்பட்ட ஆத்திரத்தை அவரிடமிருந்து மறைக்கவில்லை. குழப்பம் நிறைந்த, சுதம்பக் கருத்துக்களைக் கொண்ட கைண்டுமன் சோஷலிஸ்டுக் கருத்துக்களை ஆதரிப்பவராகவும் கட்சியின் நிறுவகராகவும் செயல்பட முடிவு செய்த பொழுது இந்த மொத்த விவகாரத்தைப் பற்றியும் மார்க்சுக்கு அதிகமான சந்தேகம்

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, p. 326.

ஏற்பட்டது இயற்கையே.

அமெரிக்காவில் தொழிலாளர் கட்சியை அமைத்த பொழுதும் கஷ்டங்கள் ஏற்பட்டன. உழைப்பாளிகளின் அடுக்கமைவு மாறிக் கொண்டிருந்ததும் புதிய நிலத்தைச் சேர்த்துக் கொண்டு விவசாயிகளாவதற்கு அப்பொழுது வாய்ப்புகள் இருந்ததும் இதற்குக் காரணங்களாகும். மேலும், அந்நிய நாடுகளிலிருந்து வந்தவர்கள் மற்றும் நீக்ரோக்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது அமெரிக்கத் தொழிலாளியின் உயர்ந்த அந்தஸ்தும் இதற்கு மற்றொரு காரணமாகும். அந்நிய நாடுகளிலிருந்து வந்தவர்களுக்கு அமெரிக்கத் தொழிலாளியைக் காட்டிலும் குறைவான ஊதியம் கொடுக்கப்பட்டது; நீக்ரோக்கள் எல்லோரையும் காட்டிலும் மோசமான நிலைமையில் இருந்தார்கள். முதலாளி வர்க்கம் கடைப்பிடித்த தேசிய மற்றும் நிற வேறுபாடுகள் தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்தின. அப்போது அமெரிக்காவில் சோஷலிஸ்டுக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஜெர்மானியர்களாகவும் அவர்களில் பலர் லஸ்ஸாலியர்களாகவும் இருந்தது அங்கே இக்கருத்துக்கள் மெதுவாகவே பரவியதற்கு மற்றொரு காரணமாகும். அவர்களுடைய பிரச்சாரம் வறட்டுக் கோட்பாடாக, குறுகிய தன்மையைக் கொண்டதாக, குறுங்குழுவாத உணர்ச்சியில் தோய்ந்ததாக இருந்தது. அமெரிக்கா, பிரிட்டன் இரண்டு நாடுகளின் தொழிலாளர் இயக்கங்களில் வன்மையான செய்முறைத் தன்மையும் தத்துவத்தைப் புறக்கணித்தலும் பொதுவான கூறு எனலாம்.

பல அமெரிக்கத் தொழிலாளர்கள் தத்துவ முதிர்ச்சியின்மையினலும் அனுபவக் குறைவினலும் உடனடியான எதிர்காலத்தில் உருப்படியாக ஏதாவது செய்வதாக உறுதியளித்த பலவிதமான ''சமூகச் சீர்திருத்தக்காரர்களின்'' செல்வாக்குக்கு உட்பட்டார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் **முன்னேற்றமும் வறுமையும்** *(1880)* என்ற பரபரப்பான நூலின் ஆசிரியரான ஹென்ரி ஜார்ஜ். இவருடைய செல்வாக்கு இங்கிலாந்துக்கும் பரவியிருந்தது. நிலத்தைத் தேசவுடைமையாக்கி, அரசிடம் நிலக் குத்தகை வரியைக் கட்டுகின்ற முறை ஏற்பட்டால் எல்லா ஒடுக்குமுறையும் தானுக முடிந்துவிடும் என்று அவர் பிரகடனம் செய்தார்.

''இது பூராவுமே முதலாளித்துவ ஆட்சியைக் காப்பாற்றுவதற்கும் உண்மையில் இன்றிருப்பதைக் காட்டிலும் இன்னும் விரிவான அடிப்படையில் அதை மறுபடியும் நிறுவுவதற்கும் சோஷலிச அலங்காரத்துடன் செய்யப்படுகின்ற முயற்சியே''* என்று மார்க்ஸ் ஸோர்கேக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்தார்.

நிலத்தைத் தேசவுடைமையாக்குதல் முதலாளித்துவச் சமூகத்தின் எல்லாத் தீமைகளேயும் ஒழித்துவிடும் என்ற ஜார்ஜின் கருத்துக்களே விமர்சித்த மார்க்ஸ், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** குறிப்பிட்டிருப்பதைப் போல, சில குறிப்பிட்ட நிலைமைகளில் நிலத்தைத் தேசவுடைமையாக்கும் கோரிக்கையை மாறுகாலத்துக்குரிய ஒரு நடவடிக்கையாக முன்வைக்கலாம் என்று சுட்டிக் காட்டினர்.

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, p. 323.

பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கத் தொழிலாளர்கள் மத்தியில் இன்னும் ஓரளவு தாக்கத்தைக் கொண்டிருந்த முதலாளி வர்க்க மற்றும் குட்டி முதலாளி வர்க்கக் கருத்துக்கள் ஆதாரமற்றவை என்று எடுத்துக் காட்டிய மார்க்சும் எங்கெல்சும் அதே சமயத்தில் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கச் சோஷலிஸ்டுகளின் குறுங்குழுவாதத்தையும் எதிர்த்துப் போராடினர்கள். அவர்கள் ஸோர்கே மற்றும் தங்களுடைய ஆதரவாளர்களுக்கு எழுதிய கடிதங்களில், தொழிலாளர்கள் இயக்கம் தத்துவ ரீதியில் தெளிவான, விஞ்ஞான ரீதியான செயல்திட்டத்தை உருவாக்கிக் கொள்ளும் வரை ஒதுங்கி நிற்கக் கூடாது, அந்த இயக்கத்தில் சேர்ந்து கொண்டு தொழிலாளர்களுடைய தவறுகளின் விளைவுகளை அவர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்று அறிவுரை கூறினர்கள்.

''நம்முடைய போதனை வறட்டுக் கோட்பாடு அல்ல, அது செயலுக்கு வழிகாட்டி'' என்று மார்க்சும் எங்கெல்சும் அதன் படைப்புத் தன்மையை வற்புறுத்தியும் தாங்கள் நிறுவிய வாழ்கின்ற, தொடர்ந்து வளர்ச்சியடைகின்ற போதனையைப் பற்றி ஏட்டறிவான, வறட்டுக் கோட்பாட்டுவாத அணுகுமுறையைக் கண்டித்தும் எழுதினர்கள்.

மார்க்சும் எங்கெல்சும் புரட்சிகரத் தத்துவத்தின் தூய்மையைப் பாதுகாத்து அதைத் தொடர்ச்சியாகச் செழுமைப்படுத்தினர்கள்; புரட்சிகரமான தத்துவத்தின் கருவிகளாக இயங்கக் கூடிய, தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவருடைய உடனடிக் கோரிக்கைகளுக்காகவும்

முதலாளித்துவத்தைத் தூக்கியெறிகின்ற இறுதி லட்சியத்துக்காகவும் பாடுபடக் கூடிய மெய்யான பாட்டாளி வர்க்கக் கட்சிகளை நிறுவுவதற்கு, அவர் கள் முரணில்லாமல் போராடினர்கள். மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய அறிவுரைகள் மற்றும் விமர்சனங்களின் மூலமாக ஐரோப்பாவிலும் அமெரிக் காவிலும் உள்ள சோஷலிஸ்டுகளுக்குச் சிறப்பாக உதவி செய்தார்கள்.

மார்க்சிய மூலவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சோஷலிஸ்டுகளுக்கு எழுதிய கடிதங்களில், அவர்களுடைய ''ஆலோசனைகள், வழிகாட்டுதல் கள், திருத்தங்கள், பயமுறுத்தல்கள், வலியுறுத் தல்கள் ஆகியவற்றில்'' இரண்டு தனிப் பாதைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்று லெனின் எழுதுகிறார். ''பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க சோஷலிஸ்டுகளிடம் அவர்கள் தொழிலாளர்கள் இயக்கத்தில் சேர்ந்து அதன் ஸ்தாபனங்களில் இருக்கின்ற குறுகிய, தடித்துப் போன குறுங் குழுவாத உணர்ச்சியை வேரோடு அகற்ற வேண்டு மென்று மிகவும் விடாப்பிடியாகக் கேட்டுக் கொண் டார்கள். அவர்கள் ஃபிலிஸ்டைன்வாதம், 'நாடாளு மன்ற மூடத் தனம்' (1879 செப்டெம்பர் 19ந் தேதியன்று மார்க்ஸ் எழுதிய கடிதத்திலுள்ள சொற்றொடர்), குட்டி முதலாளி வர்க்க-அறிவு ஜீவி சந்தர்ப்பவாதம் ஆகியவற்றைப் பற்றி எச்சரிக் கையாக இருக்க வேண்டுமென்று ஜெர்மன் சமூக- ஜனநாயகவாதிகளுக்கு இடைவிடாமல் போதித் தார்கள்.''*

* V. I. Lenin, *Collected Works*, Vol. 12, p. 372.

மார்க்சும் எங்கெல்சும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த சோஷலிஸ்டுகளுக்குக் கொடுத்த அறிவுரைகளிலும் உரையாடல்களிலும் அவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வித்தியாசமான நிலைமைகளையும் அந்தந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தை எதிர்நோக்குகின்ற ஸ்தூலமான கடமைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டார்கள். மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய புரட்சிகரமான தத்துவத்தை விரித்துரைக்கும் பொழுது பயன்படுத்தியதைப் போல கொள்கையிலும் செயல்தந்திரத்திலும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குத் தங்களுடைய தலைமையிலும் பொருள்முதல்வாத இயக்கவியல் என்ற சக்திமிக்க ஆயுதத்தைப் பயன்படுத்தினர்கள்.

வெவ்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள், பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் செயல்திட்டம் மற்றும் செயல்தந்திரம் ஆகியவை பற்றி மார்க்சிய மூலவர்கள் கொடுத்த அறிவுரைகள் மாபெரும் அளவிலான தத்துவ மற்றும் அரசியல் அக்கறையைக் கொண்டிருக்கின்றன. அவர்கள் முன்பே கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் கட்சியைப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்று குறிப்பிட்டிருந்தனர். இந்த ஆரம்பக் கருதுகோள்கள் 1848—1849ம் வருடப் புரட்சிகளின் அனுபவம், அதன் பிறகு அகிலம் மற்றும் பாரிஸ் கம்யூனின் இன்னும் செழுமையான அனுபவம், கடைசியாக வெவ்வேறு நாடுகளில் சோஷலிஸ்டுக் கட்சிகளை அமைத்த அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில்

புதியன சேர்த்தலுடன் வளர்த்துச் செல்லப் பட்டன.

கட்சியைப் பற்றிய இக்கருதுகோள்களே, பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்துக்கும் கம்யூனிஸ்டுச் சமூகத்தை நிர்மாணிப்பதற்கும் தொழிலாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தில் கட்சியே முக்கியமான ஆயுதம் என்ற முரணில்லாத கோட்பாடாகப் பிற்காலத்தில் லெனின் வளர்த்தார்.

எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற பெரும் போராட்டங்களுக்குத் தொழிலாளி வர்க்கத்தைத் தயாரிப்பதில் 1870க்களிலேயே, ஈடுபட்டிருந்த மார்க்சும் எங்கெல்சும் ஐரோப்பியப் புரட்சிக்கு 'நஷ்யா பெரும் உந்துதலைக் கொடுக்கப் போகிறது 'ன்ற முடிவுக்கு வந்தார்கள். ருஷ்யாவைப் பற்றி ண்ணற்ற ஆவணங்களையும் புத்தகங்களையும் மார்க்ஸ் படித்ததற்கு நிலக் குத்தகைப் பிரச்சினையைப் பற்றி அவர் தத்துவ ரீதியான அக்கறை கொண்டிருந்தது மட்டும் காரணமல்ல, புரட்சியின் நோக்கில் மாபெரும் வாய்ப்பு வளத்தைக் கொண்டிருந்த ஒரு நாட்டின் மீது அவருக்கு அதிகமான அரசியல் அக்கறை ஏற்பட்டிருந்ததும் அதற்குக் காரணமாகும். எதேச்சாதிகாரத்துக்கு எதிராக ருஷ்யப் புரட்சியாளர்கள்—அவர்கள் இன்னும் எண்ணிக்கையில் ஒரு சிலராகத்தான் இருந்தார்கள்—நடத்திய போராட்டத்தை மார்க்சும் எங்கெல்சும் தீவிரமான அனுதாபத்துடன் கவனித்தார்கள். ருஷ்யாவின் வளர்ச்சியடைந்த மக்களின் வேதனைமிக்க தத்துவத் தேடல்களுக்கு உதவி செய்வது, தங்களுடைய விடுதலைப் போராட்டத்

தின் நோக்கங்களையும் முறைகளையும் அவர்கள் விரைவாகப் புரிந்து கொள்வதைச் சுலபமாக்குவது—இதைத் தங்களுடைய முக்கியமான கடமைகளில் ஒன்றாக மார்க்சும் எங்கெல்சும் கருதினார்கள். மார்க்ஸ் ருஷ்ய நண்பர்களுடன் நடத்திய கடிதப் போக்குவரத்து வருடந்தோறும் அதிகரித்தது; அவருடைய வீட்டுக்கு வருகையளித்த ருஷ்யப் புரட்சியாளர்களுக்கு அன்புமிக்க வரவேற்பும் நல்ல அறிவுரைகளும் உதவியும் கிடைத்தன. மார்க்ஸ் எழுதிய சில கடிதங்களில்—1877ம் வருடத்தில் **ஒதேசெஸ்ட்வென்னியே ஸபீஸ்கி** (''தந்தையர் நாட்டுக் குறிப்புகள்'')இன் பதிப்பாளர்களுக்கு எழுதிய கடிதம், 1881இல் வேரா ஸசூலிச்சுக்கு எழுதிய கடிதம் மற்றும் இதரவை—ருஷ்யாவின் விவசாயக் குழுவைச் சோஷலிசத்தின் கருவடிவமாகவும் அடிப்படையாகவும் கருதிய நரோத்னிக்குகளை விமர்சனம் செய்தார். **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** ருஷ்ய மொழிப் பதிப்புக்கு (1882) மார்க்சும் எங்கெல்சும் எழுதிய முன்னுரையில் ருஷ்யப் புரட்சியாளர்களுக்குக் கவலையைக் கொடுத்த கேள்விகளுக்குப் பதிலளித்தனர்: ''ருஷ்யப் புரட்சியானது மேற்கு நாடுகளில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான முன்னறிவிப்பாகி இவ்விதம் இரண்டும் ஒன்றுக்கொன்று துணை நின்று நிறைவு பெறுமாயின், தற்போது ருஷ்யாவில் நிலத்திலுள்ள பொதுவுடைமை கம்யூனிச வளர்ச்சிக்குரிய துவக்க நிலையாய்ப் பயன்படக் கூடும்.''* வேறு வார்த்தைகளில் சொல்வதென்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 12.

ரூல், சில குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளின் கீழ் ருஷ்யா முதலாளித்துவம் அல்லாத பாதையில் வளர்ச்சி அடைய முடியும் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினர். ருஷ்யா புரட்சிகர இயக்கத்தில் வகிக்கத் தொடங்கிய பாத்திரத்தை அவர்கள் இம்முன்னுரையில் பின்வருமாறு வரையறுத்தனர்: ''ஐரோப்பாவின் புரட்சிகர இயக்கத்தின் முன்னணிப் படையாக ருஷ்யா இருக்கிறது''.

மார்க்ஸ் தன்னுடைய வாழ்க்கையின் இறுதி வருடங்களில் எழுதிய கடிதங்கள் விரைவில் ஏற்படப் போகின்ற ருஷ்யப் புரட்சியை ஆர்வத்தோடு எதிர்பார்க்கும் உணர்ச்சியில் தோய்ந்திருக்கின்றன; உலக வரலாற்றில் சமீபத்திலுள்ள திருப்புமுனையாக அது இருக்கும் என்று அவர் முன்னறிவித்தார். ஆனால் அந்தப் புரட்சியின் வெற்றியைப் பார்க்கின்ற வரை அவர் உயிருடன் இருக்கவில்லை.

மனிதச் சக்திக்கு அப்பாற்பட்ட மூளை உழைப்பும் தொடர்ந்த வறுமையும் மார்க்சின் உடல் நலத்தை அரித்து விட்டன. உறவினர்களும் நண்பர்களும் வற்புறுத்தியதனால் அவர் கார்ஸ்பாத் (கார்லோவி வாரி) என்ற ஆரோக்கிய ஸ்தலத்துக்கு 1874, 1875 மற்றும் 1876ம் வருடங்களில் சென்றார். ஆனால் பிரஷ்ய மற்றும் ஆஸ்திரிய அரசாங்கங்கள் அவருக்கு ஆபத்துண்டாக்கக் கூடும் என்ற காரணத்தால் இப்பயணங்களை நிறுத்திக் கொண்டார். 1881 டிசம்பர் 2ந் தேதியன்று அவர் மனைவியின் மரணம் அவருக்குப் பேரிடியாக இருந்தது. அவர் உடல்நலம் சீர்கேடடைந்தது. ப்ளூரிசி மற்றும் கடுமையான பிரோங்கைட்டிசுக்குச் சிகிச்சை பெறுவதற்காக அல்ஜீரியாவுக்கும்

பிரான்சின் தெற்குப் பகுதிக்கும் சென்றார்; எனினும் இந்தப் பிரயாணங்களால் உடல்நலம் அபிவிருத்தி அடையவில்லை. அவர் மூத்த மகள் ஜென்னி மரணமடைந்தது அவருக்கு மற்றொரு பேரிடியாகும். ஜென்னி பிரெஞ்சு சோஷலிஸ்டான ஷார்ல் லொங்கேயைத் திருமணம் செய்திருந்தாள்; அவர்களுடைய ஐந்து குழந்தைகள் மீதும் மார்க்ஸ் அதிகமான அன்பு வைத்திருந்தார். *1883* ஜனவரியில் மறுபடியும் பிரோங்கைட்டிஸ் தீவிரமடைந்தது. அவர் உடல்நிலை வேகமாகச் சீர்கேடடைந்து கொண்டிருந்தது. *1883* மார்ச் 14ந் தேதியன்று மார்க்ஸ் தன்னுடைய படுக்கையை விட்டெழுந்து படிப்பறைக்குள் நுழைந்தார்; அங்கே சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார்; அப்படியே நிரந்தரமான நித்திரையில் மூழ்கினார்.

எங்கெல்ஸ் உலக முழுவதிலும் இருந்த மார்க்சின் நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் கடிதங்கள் எழுதி சர்வதேசப் புரட்சிகர இயக்கத்துக்கு ஏற்பட்ட பயங்கரமான இழப்பைப் பற்றித் தெரிவித்தார்: ''நம் கட்சியின் மிகப் பெரும் அறிஞர் தன் சிந்தனையை நிறுத்தி விட்டார், நானறிந்த அளவில் மிகவும் பலமான இதயம் தன் துடிப்பை நிறுத்தி விட்டது''*.

*1883* மார்ச் 17ந் தேதி, சனிக் கிழமையன்று லண்டன், ஹைகேட் கல்லறையில் மார்க்ஸ் புதைக்கப்பட்டார். அங்கே எங்கெல்ஸ் நிகழ்த்திய உரையில் அறிஞரும் புரட்சியாளருமான மார்க்சின்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி *35*, பக்கம் *384* (ருஷ்ய மொழியில்).

மாபெரும் சாதனையைப் பற்றிப் பேசினர்; பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்காக, அனைத்து மனித குலத்துக்கும் இன்னும் சிறப்பான எதிர்காலத்துக்காக அவர் நடத்திய தன்னலமில்லாத, வீரம் நிறைந்த போராட்டத்தைப் பற்றி எடுத்துக் கூறினர். அவர் தன் உரையைப் பின்வரும் தீர்க்கதரிசனமான சொற்களுடன் முடித்தார்: ''அவர் பெயர் யுகங்களுக்கும் நிலைத்திருக்கும், அவர் பணியும் நிலைத்திருக்கும்!''

# என்றும் வாழ்கின்ற, வெல்லற்கரிய தத்துவம்

எங்கெல்ஸ் சரியான முறையில் ஆரூடம் கூறியதைப் போல, மிகவும் கண்டிப்பான, மிகவும் நம்பகமான நீதிபதியான காலம் மனித குலத்தின் வரலாற்று விதிகளின் மீது மார்க்சின் போதனை மென்மேலும் அதிகரிக்கின்ற தாக்கத்தைக் கொண்டிருப்பதற்குப் புதிய சான்றுகளைத் தருகிறது.

முதலாளி வர்க்கத்தினர்களும் அதன் சித்தாந்திகளும் ''மார்க்சியத்தை ஒழிப்பதற்குச்'' செய்த முயற்சிகள் எல்லாவற்றையும் மீறி, இதற்காக அவர்கள் உபயோகித்த ஒடுக்குமுறைகள், அருவருப்பான பொய்கள் மற்றும் அவதூறுகளையும் மீறி மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் புரட்சிகரப் போதனை லெனினல் மேலும் வளர்க்கப்பட்டு, அனைத்துக் கண்டங்களிலும் கோடிக் கணக்கான உழைக்கும் மக்களின் அறிவையும் இதயங்களையும் மென்மேலும் அதிகரிக்கின்ற முறையில் வென்று, உலகத்தின் புரட்சிகரமான மாற்றத்தைச் செயலாக்குகின்ற வன்மையான பொருளாயதச் சக்தியாக இருக்கிறது.

மார்க்சியம் புறநிலையான வரலாற்று அவசியத்

தின் காரணமாகவே தோன்றியது என்று வரலாற்று உண்மை அதன் அழியாச் சக்தியையும் பயன்படு தன்மையையும் விளக்குகிறது. ஒரு புதிய வர்க்கம், பாட்டாளி வர்க்கம்—முதலாளித்துவ அடிமைத் தனத்திலிருந்து விடுதலையடைவதற்கு வழி காட்டுகின்ற விஞ்ஞான ரீதியான தத்துவம் அதற்கு மிகவும் அவசியமாக இருந்தது—தோன்றியிராவிட்டால் மார்க்சின் போதனை தோன்றியிருக்க முடியாது. பாட்டாளி வர்க்கம் நடத்திய புரட்சிகரப் போராட்டம் என்ற செய்முறையை ஆழமாகப் பகுப்பாய்வு செய்து தத்துவ ரீதியில் பொதுமைப்படுத்தியதன் விளைவுதான் சோஷலிசம் என்ற விஞ்ஞானத் தத்துவம்.

எந்தப் புதிய தத்துவத்தையும் போல, விஞ்ஞான சோஷலிசமும் தன்னுடைய தோற்றத்துக்கு முன்னரே திரட்டப்பட்ட சித்தாந்த விவரங்களிலிருந்துதான் தொடங்க வேண்டியிருந்தது. ''...மனித குலத்தின் முன்னணிச் சிந்தனையாளர்கள் ஏற்கெனவே எழுப்பியிருந்த கேள்விகளுக்கு மார்க்ஸ் விடைகள் தந்தார் என்பதில்தான் குறிப்பாக அவருடைய மேதாவிலாசம் அடங்கியிருக்கிறது. தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சோஷலிசம் ஆகியவற்றின் தலைசிறந்த பிரதிநிதிகளுடைய போதனைகளின் நேரடியான, உடனடியான தொடர்ச்சியாகத்தான் மார்க்சின் போதனை எழுந்தது.''*

மார்க்சியம் 19ம் நூற்றாண்டின் மாபெரும்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, முதற் பாகம், பக்கம் 27.

கண்டுபிடிப்பாகும்; தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், வரலாற்று விஞ்ஞானம் மற்றும் சோஷலிசச் சிந்தனை வளர்ச்சியில் அது உண்மையான புரட்சியாகும்.

மார்க்சியம் வாழ்கின்ற, படைப்பாற்றலுடைய, தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற தத்துவம்; அது வாழ்க்கையிலிருந்து, சமூக நடைமுறையிலிருந்து தன்னுடைய பலத்தைப் பெறுகிறது; அது வறட்டுக் கோட்பாடு அல்ல, நடவடிக்கைக்கு வழிகாட்டி என்பவற்றில்தான் மார்க்சியத்தின், அதன் தத்துவம் மற்றும் முறையியலின் சிறப்பு அடங்கியிருக்கிறது. மார்க்சும் எங்கெல்சும் தங்களது பிரம்மாண்டமான போதனைக்கு அடிப்படை போட்ட பிறகு சுமார் அரை நூற்றாண்டுக் காலம் அதை மேலும் வளர்த்துச் சென்றார்கள்; அவர்கள் மனித குலச் சிந்தனையின் புதிய எல்லாச் சாதனைகளையும் விமர்சன ரீதியில் பகுத்தாய்ந்து புரட்சிகர இயக்கம், சர்வ தேசப் பாட்டாளி வர்க்கத்தின் மற்றும் பெருந்திரளான உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்தின் புதிய அனுபவத்தைத் தொகுத்தளித்தார்கள்.

மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் மரணத்துக்குப் பிறகு வந்த சகாப்தம், ஏகாதிபத்தியச் சகாப்தம் முக்கியமான, மிகச் சிக்கலான பல கேள்விகளை எழுப்பியது; மார்க்சிய மூலவர்களின் நூல்களில் அவற்றுக்கு நேரடியான பதில்கள் இல்லை. ஒரு புதிய சகாப்தத்துக்கு, பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரது போராட்டத்தின் புதிய நிலைமைகளுக்கு மார்க்சியத்தை உப

யோகித்து அதை வளர்ப்பதும் ஸ்தூலப்படுத்துவதும் அவசியமாக இருந்தது. மார்க்ஸ், எங்கெல்சின் தலைசிறந்த சீடரும் அவர்களுடைய இலட்சியத்தைத் தொடர்ந்து நடத்திச் சென்றவருமான வி. இ. லெனின் இந்த மேன்மையான, மிகக் கடினமான கடமையை நிறைவேற்றினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிந்து இருபதாம் நூற்றாண்டு தொடங்குகின்ற கட்டத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் இயக்கத்தில் தலைமைப் பாத்திரம் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்துக்குக் கிடைத்தது. அப்போது ருஷ்யாவில் முதலாளித்துவ ஒடுக்குமுறை நிலப்பிரபுத்துவத்தின் மிகவும் சக்தி வாய்ந்த எச்சங்களுடன் இணைந்திருந்தது; முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வெடிக்கப் போகின்ற தருணம் நெருங்கிக் கொண்டிருந்தது; அந்தப் புரட்சியின் தலைமையான சக்தியாகத் தொழிலாளி வர்க்கம் இருக்க வேண்டும். இத்தகைய வரலாற்று நிலைமைகளில் புதிய சகாப்தத்தின், ருஷ்யப் புரட்சியின், ருஷ்ய மற்றும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு லெனின் தன்னுடைய மேதாவிலாசம் நிறைந்த சிந்தனையைச் செலுத்தினர்.

எல்லா வகையான திருத்தல்களுக்கும் கொச்சைப்படுத்தல்களுக்கும் எதிராக மார்க்சியத்தைக் காப்பது, ருஷ்ய மற்றும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அதை மேலும் வளர்ப்பது, மார்க்ஸ், எங்கெல்சின் மாபெரும் போதனையை நிறைவேற்றுவது தன்னுடைய கடமை, தன்னால் உருவாக்கப்

பட்டு வந்த கட்சியின் கடமை என்று லெனின் கருதினார்.

பெர்ன்ஷ்டைனின் திருத்தல்வாதத்தையும் ருஷ்ய மற்றும் சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தில் வலது மற்றும் ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதத்தின் எல்லாவித ரகங்களையும் எதிர்த்து லெனின் தொடர்ச்சியாக உறுதியான போராட்டம் நடத்தினார்.

கருத்துமுதல்வாத மற்றும் இயக்க மறுப்பியல் கருதுகோள்களுக்கு எதிராக மார்க்சியத்தின் தூய்மையைக் காத்து நின்ற லெனின் பொருள் முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும் என்ற தன்னுடைய நூலிலும் இன்னும் மற்ற நூல்களிலும் இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை மேலும் வளர்த்துச் சென்றார்; இயற்கை விஞ்ஞானத்தின் அடிப்படையான கண்டுபிடிப்புகள் உள்பட புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைத் தத்துவஞான ரீதியில் பொதுமைப்படுத்தித் தந்தார்.

புதிய சகாப்தத்தைப் பகுப்பாய்வு செய்தது லெனினுடைய மாபெரும் படைப்பாற்றல்மிக்க சாதனையாகும். அவர் எழுதிய ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் மார்க்சின் மூலதனம் நூலுக்குத் தகுதிநிறைந்த தொடர்ச்சியாகவும் அதை மேலும் வளர்த்துச் செல்வதாகவும் இருந்தது.

ஏகாதிபத்தியக் கட்டத்தில் முதலாளித்துவத்தின் சமத்துவமற்ற பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி விதியை லெனின் கண்டுபிடித்தார்; இதிலிருந்து தொடங்கி சோஷலிசத்தின்

வெற்றி ஆரம்பத்தில் ஒரு சில நாடுகளில் அல்லது ஒரு நாட்டில் கூடச் சாத்தியம் என்ற மிக முக்கியமான முடிவுக்கு வந்தார்.

அரசு மற்றும் புரட்சியையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் பற்றிய மார்க்சியப் போதனையைச் சர்வாம்ச ரீதியில் லெனின் வளர்த்தார். சோஷலிஸ்டு நிர்மாண வழிகளையும் கம்யூனிஸ்டுச் சமூகத்துக்கு மாற்றத்துக்குரிய நிலைமைகளையும் அவர் விஞ்ஞான ரீதியில் நிறுவினார். மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துக்களை லெனின் மேலும் வளர்த்து பாட்டாளி வர்க்கக் கட்சியைப் பற்றிய ஒத்திசைவான போதனையை உருவாக்கினார். அவர் உருவாக்கிய போல்ஷிவிக்குகளின் கட்சியின் வரலாறு நடவடிக்கையில் மார்க்சியம்-லெனினியமே.

மாபெரும் சிந்தனையாளரும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவருமான வி. இ. லெனின் மார்க்சியக் கருவூலத்துக்கு மிகப் பெரும் பங்களித்திருப்பதால், அவர் பெயர் மார்க்ஸ், எங்கெல்சின் பெயர்களுடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கிறது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை, முதலாளித்துவத்தின் வீழ்ச்சி மற்றும் சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் புரட்சிகர மாற்றத்தின் சகாப்தத்தைத் தொடக்கி வைத்த 20ம் நூற்றுண்டின் மிகப் பெரிய நிகழ்ச்சியாக, மார்க்சிய-லெனினியத்தின் ஆகப் பெரிய வெற்றியாக இருந்தது.

சோவியத் மக்கள் தங்களுடைய தீவிரமான

போராட்டத்திலும் தன்னலமற்ற உழைப்பினு லும் சோவியத் யூனியன் என்ற மாபெரும் அரசை ஏற்படுத்தி பாசிஸ்டுகளுக்கு எதிரான போராட் டத்தில் அதைப் பாதுகாத்திருக்கிறார்கள்; திட்ட மிட்ட முறையில் வளர்ச்சியடைகின்ற வலிமை யான பொருளாதாரத்தைக் கொண்ட சமூகத்தை, மக்களுக்கு வசதிகளும் கலாச்சாரமும் தொடர்ச்சி யாக அதிகரிக்கின்ற சமூகத்தை, எல்லா வர்க்கங் கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் சமூக-அரசியல் மற்றும் சித்தாந்த ஒற்றுமை, எல்லாத் தேசிய இனங்கள் மற்றும் மக்களினங்களின் பிரிக்க முடியாத நட்புறவை, உண்மையிலேயே சுதந்திரமான உழைக் கும் மக்களின் சமூகத்தை நிர்மாணித்திருக்கிறார் கள்.

வளர்ச்சியடைந்த, முதிர்ச்சியடைந்த சோஷ லிசத்தின் படைப்பும் சாதனைகளும் சோவியத் யூனியனுடைய அரசியலமைப்புச் சட்டத்தினால், உலகிலேயே முதலாவதான அனைத்து மக்களின் சோஷலிஸ்டு அரசின் அடிப்படையான சட்டத் தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. சோவியத் சமூகத்தில் எந்தச் சுரண்டலும் தேசிய ஒடுக்கு முறையும் இல்லை, நெருக்கடிகள் மற்றும் வேலை யில்லாத் திண்டாட்ட ஆபத்து இல்லை. வேலை, ஓய்வு, சுகாதாரப் பாதுகாப்பு, கிழப்பருவத்திலும் நோய் அல்லது உடல் ஊனம் ஏற்படுங்காலத்திலும் பொருளாயதப் பாதுகாப்பு, வீடு மற்றும் கல்வி பெறுவதற்கும் கலாச்சாரச் சாதனைகளை அனுபவிப் பதற்கும் உரிமை, முதலியவை உள்பட அடிப் படையான மனித உரிமைகளைச் சோஷலிஸ்டு அரசு தன்னுடைய அரசியலமைப்புச் சட்டத்

தின் மூலம் உத்தரவாதம் செய்திருக்கிறது. நாட்டின் மெய்யான ஜனநாயக அரசியலமைப்பு சோவியத் யூனியன் அனைத்து மக்களும் அரசு மற்றும் சமூக விவகாரங்களில் விரிவாகவும் சுறு சுறுப்பாகவும் பங்கெடுப்பதற்கு முழு வாய்ப்பு தருகிறது. ''ஒவ்வொரு தனி நபருடைய சுதந் திரமான வளர்ச்சியும் அனைவருடைய சுதந்திரமான வளர்ச்சிக்கும் நிபந்தனையாக இருக்கும்'' என்று மார்க்சும் எங்கெல்சும் வகுத்தளித்த கோட்பாடு இம்முறையில் அமுலாக்கப்பட்டு வருகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியும் அதன் போலீட் பியூரோவும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் செழு மையான செய்முறை அனுபவத்தை அடிப்படை யாகக் கொண்டு கம்யூனிச நிர்மாணத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் வளர்ச்சிக்கு மிகவும் வளமான பங்களிப்பைச் செய் கின்றன.

சகோதர சோஷலிஸ்டு நாடுகள் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளை உரிய விதத்தில் கணக்கி லெடுத்துக் கொண்டு மார்க்சிய-லெனினியத் தத்து வத்தைப் படைப்பாற்றலுடன் கையாண்டு மேலும் வளர்க்கின்றன; இந்நாடுகள் தங்களுடைய கம்யூ னிஸ்டுக் கட்சிகளின் வழிகாட்டுதலின் கீழ் சோவியத் யூனியனுடன் தோளோடு தோள் நின்று ஏகாதி பத்தியத்தை எதிர்த்தும் சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றத்துக்கு ஆதரவாகவும் போராடு கின்றன. சோஷலிஸ்டு முகாமைச் சேர்ந்த நாடு கள் மகத்தான, மேன்மையான இலட்சியங்களுக்குப் பொருந்திய புதிய கோட்பாடுகளையும் நெறி

முறைகளையும் சர்வதேச விவகாரங்களில் புகுத்தி யுள்ளன.

சோஷலிஸ்டு நாடுகள் இருக்கின்றன என்ற மெய்விவரமே முதலாளித்துவ நாடுகளில் தங்களு டைய உரிமைகளுக்காகப் போராடுகின்ற உழைக் கும் மக்களுக்கு மிகச் சிறந்த தார்மிக ஆதரவாக இருக்கிறது.

ஆகவே, மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனி னுடைய போதனை மிகவும் சரியாக இருப்பதற்கு உலக வரலாற்று நிகழ்வுப் போக்கு மென்மேலும் புதிய நிரூபணங்களைத் தருகிறது. அதே சமயத்தில் சீர்திருத்தவாதம் பயனற்றது, முதலாளித்துவ ஆதிக்கத்தின் அடிப்படைகளை அதனால் தொடக் கூட முடியாது என்பதையும் வரலாறு நிரூபிக் கிறது.

சோவியத் யூனியனும் சகோதர சோஷலிஸ்டு நாடுகளும் எல்லாக் கண்டங்களிலுமுள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு எழுச்சியூட்டுகின்ற உதாரண மாக இருக்கின்றன.

சோவியத் யூனியனும் சோஷலிஸ்டு முகாம் நாடுகளும் மற்ற நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளும் பின்பற்றிய முரணில்லாத சர்வதேசிய வாத நிலை ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங் களின் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கங்கள் ஓங்குவதற்கு உதவி செய்தது. அவற்றின் போராட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியடைந்தது—ஏகாதிபத்தியக் காலனியாதிக்க அமைப்பு வீழ்ச்சியடைந்தது. புதிதாக விடுதலை யடைந்த பல நாடுகள் சோஷலிஸ்டு முகாம் நாடுகள் தருகின்ற பொருளாதார, தொழில்நுட்ப

மற்றும் கலாச்சார உதவியைப் பயன்படுத்தி சோஷலிஸ்டுத் திசை வழியில் சென்று கொண்டிருக்கின்றன.

மார்க்சிய-லெனினியத்தின் செல்வாக்கும் உண்மையான சோஷலிசத்தின் கவர்ச்சியும் அதிகரிப்பதைத் தடுப்பதற்காக முதலாளி வர்க்க மற்றும் சீர்திருத்தவாதச் சித்தாந்திகள் பல்வேறு ''தத்துவங்களைப்'' பற்றி விரிவாகப் பிரச்சாரம் செய்தார்கள்: ''நெருக்கடிகளே இல்லாமல்'' முதலாளித்துவத்தின் ''திட்டமிடப்பட்ட'' வளர்ச்சிக் காலகட்டம் வரப் போகிறது, முதலாளித்துவ நாடுகளில் ''அனைத்து மக்கள் நல அரசு'' அமைக்கப்படும், ஒன்றுக்கொன்று எதிரான சமூக அமைப்புகளான சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் வேறுபாடுகள் படிப்படியாகத் துடைத்தழிக்கப்பட்டு அவை ''ஒன்றுகுவியும்'' என்பன இத்தத்துவங்களாகும். ஆனால் பொருளாதார நெருக்கடிகளும் பண வீக்கம், வேலையில்லாமை அதிகரிப்பும் இக்கட்டுக்கதைகளைப் பொய்யாக்கின. முதலாளித்துவத்தில் உள்ளுறையாக இருக்கின்ற பொருளாதாரத் தன்னியல்பையும் பகையியலான முரண்பாடுகளையும் அரசு-ஏகபோகத் திட்டமிடுதலின் மூலம் ஒழித்துவிட முடியாது என்பதை இவை எடுத்துக் காட்டின.

பொருளாதார நெருக்கடிகள் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியைத் தீவிரப்படுத்துகின்றன; அது முதலாளித்துவச் சமூகத்தின் எல்லா அம்சங்களையும்—பொருளாதார, அரசியல், சமூக மற்றும் ஆன்மிக அம்சங்களையும்—பாதிக்கிறது.

ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு, போர்கள், தேசிய

விடுதலை இயக்கத்தைக் குரூரமாக ஒடுக்குதல் ஆகியவற்றில் இந்த நெருக்கடியிலிருந்து தப்பும் வழியைத் தேடுகிறது. ஏகாதிபத்திய, பிற்போக்குச் சக்திகள் இராணுவத் தலைமையைப் பெறுதல், மக்களினங்கள் மற்றும் அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுதல், ஏகாதிபத்திய உத்தரவிடுதல் ஆகிய வழிகளின் மூலம் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னல் திருப்புவதற்குப் பாடுபடுகின்றன.

முதலாளித்துவ நாடுகளில் பெரிய அளவு மூலதனம், குறிப்பாகப் பன்னாட்டு ஏகபோகங்கள் முன்னெப்போதுமில்லாத முறையில் மிகவும் அதிகமான லாபங்களை அடைவதற்கும், பொருளாதார நெருக்கடிகளின் எல்லாத் துன்பங்களையும் மக்கள் மீது சுமத்துகின்ற கொள்கைக்கும் எதிராகப் பாட்டாளி வர்க்கத்தினர் மற்றும் பெருந்திரளான உழைக்கும் மக்கள் ஆவேசமடைந்து கொண்டிருக்கிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் அனைத்து முற்போக்குச் சக்திகளின் ஒற்றுமைக்காக, ஏகாதிபத்தியம், ஏகபோகங்கள், சுறுசுறுப்படைந்திருக்கும் பிற்போக்குவாத மற்றும் புதிய பாசிசச் சக்திகளுக்கு எதிராக விரிவான ஜனநாயக முன்னணிக்காகப் பாடுபடுகின்றன.

மார்க்சியம்-லெனினியம் மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதம் என்ற மாபெரும் கோட்பாடுகளால் வழி காட்டப்படுகின்ற கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் இவற்றைத் தங்கள் நாடுகளில் உள்ள ஸ்தூலமான நிலைமை

களுக்குப் படைப்பாற்றலுடன் கையாள்கின்றன. போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் வகுக்கின்ற பொழுது அவை தமது மக்களுடைய தேசிய நலன்களைச் சர்வதேசக் கடமைகளுடன் அங்கக ரீதியில் இணைக்கின்றன. இக்கட்சிகள் போராட்டத்தின் நடைமுறைப் படிப்பினையைத் தத்துவ ரீதியில் பொதுமைப்படுத்தி மார்க்சிய-லெனினியக் கருவூலத்துக்குத் தமது பங்கினை வழங்குகின்றன.

மார்க்சியம்-லெனினியம் மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதத்துக்கு விசுவாசமே ஒவ்வொரு கட்சியும் சரியான போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் வகுப்பதற்கு நம்பகமான ஒரே அடிப்படையாகும்; நம் சகாப்தத்தில் மிகவும் அதிகமான செல்வாக்குடைய அரசியல் மற்றும் தார்மிக சக்தியான சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமைக்கு உத்தரவாதமாக, அதன் வெற்றிக்கு முன்னறிவிப்பாக இருக்கிறது.

துல்லியமாக இக்காரணத்தினால்தான் முதலாளி வர்க்க, சீர்திருத்தவாத மற்றும் அதி இடது ''தத்துவாசிரியர்கள்'' தமது முக்கியமான தாக்குதல்களைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியமான சித்தாந்தக் கோட்பாடுகளுக்கு எதிராகத் தொடுக்கிறார்கள். மார்க்சியம் ''காலாவதியாகி விட்டது'' என்று பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்து அவர்கள் கீழ்த் தரமான தந்திரங்களை மென்மேலும் அதிகமாக உபயோகிக்கிறார்கள். மார்க்சின் போதனையைத் ''திருத்துவதாகச்'' சொல்லிக் கொண்டு அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றை, ஒத்திசைவான, அங்ககமான சர்வதேசியப் போதனையைக் கூறு போடுவதற்கும் அதன்

புரட்சிகர உள்ளடக்கத்தை அகற்றுவதற்கும் முயற்சி செய்கிறார்கள். வலது மற்றும் அதி இடது திருத்தல்வாதிகளும் வறட்டுக் கோட்பாட்டுவாதத்தை எதிர்த்துப் போராடுகின்ற சாக்கில் மார்க்சிய-லெனினியப் போதனையின் முக்கியமான கோட்பாடுகளை மறுக்க முயற்சிக்கின்ற பல்வேறு விதமான ஓடுகாலிகளும் இந்த முயற்சியில் அவர்களுக்கு மாபெரும் உதவி செய்கிறார்கள்.

மார்க்சியத்தைத் ''திருத்துவதின்'' அவசியத்தை வலியுறுத்துபவர்களுடைய முக்கியமான தந்திரங்களில் ஒன்று மார்க்சின் தொடக்க கால நூல்களை (இவை அதிகமான அளவுக்கு ''மனிதாபிமானம் உடையதாகவும்'' ''உண்மையான மார்க்சியத்தைக் கொண்டிருப்பதாகவும்'' சித்தரிக்கப்படுகின்றன) முதிர்ச்சியடைந்த பிறகு எழுதப்பட்ட நூல்களுடன், குறிப்பாக **மூலதனத்துடன்** வேறுபடுத்திக் காட்டுவதாகும்; மேலும், எங்கெல்சின் தத்துவப் பணியையும் சீர்திருத்தவாதத்துக்கும் அராஜகவாதத்துக்கும் எதிராக அவர் நடத்திய சமரசத்துக்கு இடமளிக்காத போராட்டத்தின் முக்கியத்துவத்தையும் குறைப்பதற்காக மார்க்சையும் எங்கெல்சையும் வேறுபடுத்துவதும் உண்டு. ஆனால் இன்னும் பரவலான தந்திரம் மார்க்சியத்திலிருந்து வி. இ. லெனினைப் ''பிரித்து ஒதுக்குவதாகும்'', லெனினியம் ''முற்றிலும் ருஷ்ய நிகழ்வு'', மற்ற நாடுகளுக்கும் மக்களினங்களுக்கும் அது சிறிதும் பொருந்தாது என்பதாகும்.

புரட்சிகரமான தத்துவம் ''உலகத்தின் எல்லா நாடுகளின் புரட்சிகர அனுபவம் மற்றும் புரட்சிகரச் சிந்தனையின் கூட்டுமொத்தத்திலிருந்து

வளர்ச்சியடைகிறது''* என்று லெனின் எழுதினர். ஒவ்வொரு நாட்டின் புரட்சிகரமான அனுபவமும் புரட்சிகரமான சிந்தனையும் பொதுவான தன்மையுடன் பிரத்யேகமான தன்மையையும் கொண்டிருக்கின்றன, அப்பிரத்யேகத் தன்மை அக்குறிப்பிட்ட நாட்டின் வரலாற்று நிலைமைகள் மற்றும் மரபுகளுடன் இணைந்திருக்கிறது என்றும் அவர் வலியுறுத்தினர். பொதுவான தன்மையையும் பிரத்யேகமான தன்மையையும், சர்வதேசியத் தன்மையையும் தேசியத் தன்மையையும் அவற்றின் இயக்கவியல் ஒற்றுமையில் பகுப்பாய்வு செய்த லெனின் பொதுவான நியதிகளையும் சர்வதேசக் கடமைகளையும் முக்கியமான, நிர்ணயிக்கின்ற காரணியாக எப்பொழுதும் கருதினர்.

சமூக வளர்ச்சியின் பொதுவான, புறநிலையான நியதிகளை மறுத்தல் அல்லது குறைத்து மதிப்பிடுதல் ''ஒழுக்க நெறியிலான சோஷலிசத்துக்கு'', நன்மை, நீதி பற்றிய வெற்றுரைகளுக்கு இட்டுச் செல்கிறது, அதாவது ஒரு கற்பனை உலகத்துக்கு, அதிலும் பிற்போக்கான கற்பனை உலகத்துக்கு இட்டுச் செல்கிறது.

தேசியத் தனித்தன்மைகளின் பாத்திரத்தை மிகைப்படுத்திக் கூறுவது, கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் ஒற்றுமையை அழிப்பதற்கும் அதன் மூலம் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தைப் பலவீனப்படுத்துவதற்கும் முதலாளி வர்க்கம் ஆதரிக்கின்ற தேசியவாதத்துக்கும் இட்டுச் செல்லும். தேசியத் தனித்தன்மைகளை மிகையாக

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 21, p. 354.

மதிப்பிடுவது தர்க்க ரீதியாக ''பன்மைவாதத் துக்கு'', நாடுகளுக்கும் மக்களினங்களுக்கும் இடை யில் உள்ள வேறுபாடுகளின் காரணமாக ''மார்க் சியத்தில் பல ரகங்கள்'' இருப்பதன் சாத்தியத்தை அங்கீகரிப்பதற்கு, அதாவது மார்க்சியம் ஒற்றை சர்வதேசியத் தத்துவம் என்பதை மறுப்பதற்கு இட்டுச் செல்லும்.

முதலாளி வர்க்க, சீர்திருத்தவாத மற்றும் திருத்தல்வாதத் ''தத்துவாசிரியர்கள்'' என்னதான் புரட்டுகளைச் செய்தாலும், பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதக் கோட்பாடுகளுக்கு விசுவாச மான கம்யூனிஸ்டுகள் மார்க்சிய-லெனினியத் தத்து வத்தைப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றை மற்றும் ஒரே விஞ்ஞான ரீதியான, புரட்சிகரமான போதனை என்று கருதுகிறார்கள்; வரலாற்றின் புதிய அனுப வம் மற்றும் புதிய விஞ்ஞான சாதனைகளின் அடிப்படையில் அதை மென்மேலும் படைப்பாற்ற லுடன் வளர்த்துச் செல்கிறார்கள்.

படைப்பாற்றலைக் கொண்ட இந்த அணுகுமுறை தான் மார்க்சிய-லெனினியத்தின் ஜீவ சக்தியை, நம் காலத்தின் மிகக் கூர்மையான கேள்விகளுக்குப் பதிலளிக்கின்ற அதன் திறமையை நிர்ணயிக்கிறது.

மார்க்சியம்-லெனினியம் தொழிலாளி வர்க்கம் மற்றும் பெருந்திரளான உழைக்கும் மக்களின் புரட்சிகரமான போராட்டத்தின் கேள்விகளுக்கும் தேசிய விடுதலை இயக்கங்களின் கேள்விகளுக்கும் மட்டுமல்லாமல் பதிலளிக்கிறது; மார்க்ஸ், எங் கெல்ஸ், லெனினின் ,மாபெரும் போதனை மனித குலம் அனைத்தையும் கலக்கிக் கொண்டிருக்கும் முன்னணியான, ஆக முக்கியமான பிரச்சினை

களைத் தீர்ப்பதற்குத் திறவுகோலை அளிக்கிறது.

யுத்தத்தையும் சமாதானத்தையும் பற்றிய பிரச்சினைகள் இவற்றில் அடங்கும். ஆயுதப் பெருக்கத்தின் இன்றைய நிலையில் எல்லாவற்றையுமே அழிக்கக் கூடிய மிகவும் நாசகரமான சக்தி வாய்ந்த ஆயுதங்களைத் தயாரித்துத் தொடர்ச்சியாகக் குவித்துக் கொண்டும் அவற்றில் அபிவிருத்தி செய்து கொண்டுமிருப்பதனால் அணு யுத்தம் வெடிக்கக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது; அத்தகைய யுத்தம் மனித நாகரிகத்தையும் பூமியில் எல்லா உயிர்களையும் உயிர் வடிவங்களையும் அழிக்கக் கூடும்.

மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட முதல் ஆணைகளில் சமாதானத்தைப் பற்றிய அரசாணையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும். சோவியத் அரசின் வெளிநாட்டுக் கொள்கை, வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வு என்ற லெனினிஸ்டு வழியைப் பின்பற்றுகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரஸ் 1980க்களுக்குரிய சமாதானச் செயல்திட்டத்தை முன்வைத்தது; அச்செயல்திட்டம் யுத்த அபாயத்தைக் குறைப்பதற்கு, பதட்ட நிலைத் தணிவை ஆழப்படுத்துவதற்கு, வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கிடையில் விரிவான ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு யதார்த்தமான, ஆக்க பூர்வமான வழிகளைச் சுட்டிக் காட்டுகிறது; சிக்கலான சர்வதேசப் பிரச்சினைகளை—மோதல் இல்லாமல்—சம உரிமைகளைக் கொண்ட இரு தரப்பினரும் நேர்மையான

பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்ப்பதற்கு வழி காட்டுகிறது.

சோவியத் யூனியனும் சோஷலிஸ்டு முகாம் நாடுகளும் வெளிநாட்டுக் கொள்கையில் மிக மேன்மையான, மனிதாபிமான இலட்சியங்களுக்காகப் பாடுபடுகின்றன: அமெரிக்கா தலைமை தாங்கும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகளைக் கட்டுப்படுத்துவது, சமாதானத்தைப் பாதுகாப்பது, மென்மேலும் நாசகரமான ஆயுதங்களை இடைவிடாமல் குவிப்பதை நிறுத்துவது, அணு ஆயுதப் பேரழிவைத் தடுப்பது என்பவை இந்த இலட்சியங்களாகும். சோவியத் யூனியனும் அதன் கூட்டாளிகளும்—சோஷலிஸ்டு முகாம் நாடுகளும்—முன்வைத்திருக்கின்ற ஆக்க பூர்வமான சமாதான முன் முயற்சிகள் இதை மிகச் சிறப்பான முறையில் நிரூபிக்கின்றன. மற்ற நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் சோவியத் யூனியனுடனும் சோஷலிஸ்டு முகாம் நாடுகளுடனும் ஒன்றாக அணு யுத்தத்தைத் தடுப்பதற்கும் உலக சமாதானத்தை வலுப்படுத்துவதற்கும் ஆயுதப் போட்டிக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் எதிராகவும் போராடுகின்றன. அவை இந்தப் போராட்டத்தில் பெருந்திரளான உழைக்கும் மக்களை—தேசிய, மத அல்லது அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிக்காமல் — ஈடுபடுத்துகின்றன.

அமெரிக்காவின் தலைமையில் உள்ள ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியச் சக்திகள் கம்யூனிஸ்டு-எதிர்ப்பு, சோவியத்-எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி வரு

கின்றன; ''சோவியத் அபாயத்தைப்'' பற்றி அருவருப்பான கற்பனைகளை, கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றன. ஆனால் வாழ்க்கை சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கையின் மேன்மையான மனிதாபிமானத்தை மக்களினங்களுக்கு மென்மேலும் புரிய வைக்கிறது. சோவியத் யூனியனும் மற்ற சகோதர சோஷலிஸ்டு நாடுகளும் பின்பற்றுகின்ற வெளிநாட்டுக் கொள்கை சமாதானமும் சோஷலிசமும் பிரிக்க முடியாதவை என்பதைக் கண்கூடாக நிரூபிக்கிறது.

பெருந்திரளான மக்கள் சமாதானத்துக்காக நடத்துகின்ற போராட்டம் சோஷலிசத்துக்கான போராட்டத்துடன் மென்மேலும் அதிகமாக இணைந்து கொண்டு வருகிறது. வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்க்கைக்காகப் பாடுபடுவது என்றால் வர்க்கப் போராட்டத்தை, பாட்டாளி வர்க்கமும் உழைக்கின்ற பெருந்திரளான மக்களும் தங்களுடைய சமூக, தேசிய விடுதலைக்காக நடத்துகின்ற போராட்டத்தை நிராகரிப்பது என்று அர்த்தமல்ல. இன்றைய மனித குலத்தை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் மிக முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய தீவிரமான வழிகளை முதலாளித்துவத்தினால் கண்டுபிடிக்க முடியாது. முதலாளித்துவம் எதிர்காலம் இல்லாத சமூகம். இந்தப் பூமியில் வாழ்கின்ற மக்களினங்கள் மென்மேலும் தீவிரமாகச் சந்திக்கின்ற கேள்விகளுக்குத் தத்துவம் என்ற முறையில் மார்க்சியம்-லெனினியம், சமூக நடைமுறை என்ற முறையில் சோஷலிசத்தினால் மட்டுமே பதில் கூற முடியும்.

மனித குலத்தின் மாபெரும் மேதைகளான மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் விஞ்ஞான ரீதியில் வகுத்தளித்த பாதையில் வரலாறு தர்க்க ரீதியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்துக் களையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனை களையும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச் சியுடன் வரவேற்கிறது.

உங்கள் கடிதங்களைத் தயவு செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்

தலைமை அலுவலகம்
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை — 600 098
ஷோ-ரூம்
136, அண்ணாசாலை, சென்னை — 600 002
கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625 001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641 018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—
620 008
செர்ரி ரோடு, சேலம் — 636 001
விற்பனை நிலையங்கள்
3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் — 627 001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643 001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் —
624 001

[illegible]
1 [illegible]
[illegible]
64

[illegible]
87-89
169

87
[illegible]
133

[illegible]
125

நாடாளுமன்ற பேச்சுகள் -164

341

141

101

13